REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2023 மார்ச் 24 வெள்ளிக்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්
வருட. 91 இல. 71 | Friday 24, March, 2023 | 16 பக்கங்கள் | 50/-


ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்று பிறந்தநாள். அவருக்கு தினகரன் மற்றும் தினகரன் வாரமஞ்சரி வாழ்த்து தெரிவிக்கிறது.

# IMFஇன் உதவி முழுமை பெற ஊடகங்களின் ஆதரவு அவசியம்

## ஊடக பிரதானிகளுடனான சந்திப்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் கிடைக்கப்பெறும் நிதி மூலம் முதலாவது எமது நாட்டு பொருளாதாரத்தை கட்டி எழுப்ப வேண்டும்.

**பேதங்களை மறந்து நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட முன்வரவேண்டும் எனவும் ஜனாதிபதி அழைப்பு விடுத்தார்.**



அதன் பின்னர் வெளிநாட்டு முதலீடுகளை வரவேற்று உள்ளூர் உற்பத்திகளையும் ஊக்குவித்து சுற்றுலாத்துறையையும் மேம்படுத்த வேண்டும்.

உண்மையில் பொருளாதாரத்தில் மிகுந்த பின்னடைவை கண்டுள்ள எமது நாட்டிற்கு, இது ஒரு ஆரம்ப கட்டமே. அடுத்தடுத்து நாங்கள் சர்வதேச நாணய நிதியத்துடன் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தி கட்டம் கட்டமாக வெற்றியடைய வேண்டும். அதற்கு ஊடகங்களின் பங்களிப்பும் ஒத்துழைப்பும் அரசாங்கத்திற்கு அவசியம் என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று தெரிவித்தார். நாட்டில் உள்ள ஊடக நிறுவனங்களின் முக்கியஸ்தர்களை சந்தித்து உரையாடிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார். நமது நாட்டின் எதிர்காலம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளிலேயே தங்கியுள்ளது. எனவே அதனை, அது கிடைப்பதை நாங்கள் புறந்தள்ளி செயல்படக்கூடாது.

06

## செலான் வங்கி இன்று 35 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது

செலான் வங்கி சகல பங்காளர்களுக்கும் சேவைகளை வழங்குவதிலும், இலங்கைக்கு தமது ஒப்பற்ற அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வலுவூட்டுவதிலும் 35 வருட கால பூர்த்தியை கொண்டாடுகின்றது.

இதுவரையில் வங்கி 500 சேவைப் பகுதிகளுடன் பரந்த வலையமைப்பைக் கொண்டுள்ளதுடன், டிஜிட்டல் ஊடகத்திலும் தனது QR, மொபைல் வங்கிச் சேவை app மற்றும் பல அம்சங்களைக் கொண்டுள்ளது.

# மாணவர்களை சில குழுக்களால் தங்களது பணயக் கைதிகளாக்க இடமளிக்க முடியாது

## பாடசாலையை அத்தியாவசிய சேவையாக மாற்ற வேண்டிய நிலை ஏற்படுமென்றும் ஜனாதிபதி தெரிவிப்பு



நாட்டிலுள்ள மாணவர்களை பல்வேறு குழுக்களின் பணயக் கைதிகளாக வைத்திருக்க இடமளிக்கப்பட மாட்டாதென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார். பாடசாலை துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கு கலந்துரையாடல் மூலம் விரைவில் தீர்வு காண முடியுமென தாம் நம்புவதாகவும், இல்லையேல் பாடசாலைகளை

06

# IMF உதவிக்கு எதிராக எதிரணியினர் வெளிநாட்டு தூதுவர்களிடம் பிரசாரம்

## கடும் நிபந்தனைகளை விதிக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுப்பு

### சபையில் அமைச்சர் பிரசன்ன விசனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு கடன் ஒத்துழைப்பை வழங்கும்போது கடுமையான நிபந்தனைகளை விதிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாட்டுத் தூதுவர்களிடம் தெரிவித்துள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நேற்று முன்தினமிரவு எதிர்க்கட்சியினர் இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுடன் பேச்சு வார்த்தையொன்றை நடத்தியதாகவும் அதன் போதே அவர்கள் மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளதாக தமக்கு தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள பிரதான ஹோட்டல் ஒன்றிலேயே மேற்படி பேச்சுவார்த்தை

06

# IMF வழங்கிய அங்கீகாரம் மக்களுக்கு கிடைத்த வெற்றி

## ஜனாதிபதிக்கு இந்துமத பீடம் சார்பில் வாழ்த்து



எல்லோரும் எதிர்பார்த்ததைப் போன்று சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி கிடைக்க வேண்டுமென மக்களும் ஆவலோடு எதிர்பார்த்தனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கமும் அதிகாரிகளும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனாகவும் அதேபோல சர்வதேச நாடுகளின் குறிப்பாக இந்தியா, சீனா, ஐரோப்பிய ஒன்றியம் நாடுகளின் ஒத்துழைப்பின் பேரில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவி இலங்கைக்கு கிடைக்கப்பெற்றமை நிச்சயமாக பாராட்டத்தக்க விடயமென சர்வதேச இந்து மத பீடம் சார்பாக கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

06

IMF மூலம் புதிய கதவு திறக்கப்பட்டுள்ளது;

# வாய்ப்புகளை பயன்படுத்தி வெற்றிகொள்ள ஒன்றிணைவோம்

## எதிர்க்கட்சிகளுக்கு சபையில் பிரதமர் தினேஷ் அழைப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்புக்கான உறுதிப்பாட்டுடன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு எமக்கு புதிய கதவு திறக்கப்பட்டுள்ளது என பிரதமர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதனை ஆரம்பமாகக் கொண்டு உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி, பெரிஸ் கிளப் மற்றும் இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளும் எமக்கு உதவுவதற்கு முன் வந்துள்ளதாக குறிப்பிட்ட பிரதமர்,இந்த வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வதற்கு அனைவரும் ஒத்துழைப்புடன் செயற்படுவது அவசியம் என்றும் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அனைவரதும் ஒத்துழைப்பு அவசியம் என ஜனாதிபதி விடுத்த

06

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் கால வரையறையின்றி ஒத்திவைப்பு

## தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவிப்பு



உள்ளூராட்சித் தேர்தலை கால வரையறையின்றி தேசிய தேர்தல் ஆணைக்குழு மீண்டும் ஒத்தி வைத்துள்ளது. தேர்தலை நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே தேர்தல் நடத்தப்படும் திகதி அறிவிக்கப்படும் என்றும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிடும் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகளின் செயலாளர்களுடன் தேர்தல் ஆணைக்குழுவில் நேற்று (23) வியாழக்கிழமை இடம்பெற்ற நீண்ட கலந்துரையாடலின் பின்னரே இந்த

06

# கொழும்பில் நாளை 10 மணிநேர நீர் வெட்டு



கொழும்பு மற்றும் அதன் புறநகரின் சில பகுதிகளுக்கு நாளை சனிக்கிழமை (25) பத்து மணித்தியாலங்களுக்கு நீர் விநியோகம் தடைப்படும் என நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது. குறித்த தினத்தில் காலை 11 மணி முதல்

06

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவி

# விவசாயிகளுக்கு நிவாரண நிதியாக தலா 30,000 ரூபா

## விவசாய அமைச்சு தீர்மானம்



குறைந்த வருமானம் பெறும் விவசாய குடும்பங்களுக்கு சிறுபோகத்திற்காக தலா 30,000 ரூபாய் நிதி நிவாரண கொடுப்பனவை பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.


சர்வதேச ஒத்துழைப்புக்கான அமெரிக்க முகவரகத்தின் உதவி திட்டத்தின்

06

# பிரதமர் மோடி குறித்து அவதூறு செய்த வழக்கு

## ராகுல் காந்திக்கு 02 வருட சிறை


### குஜராத் நீதிமன்றம் நேற்று தீர்ப்பு



இந்திய எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு 02 வருட சிறைத்தண்டனை விதித்து, குஜராத் மாநில நீதிமன்றமொன்று நேற்று தீர்ப்பளித்துள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொடர்பான குற்றவியல் அவதூறு வழக்கொன்றில் இத்தீர்ப்பு

06



## நலிவுற்றுள்ள பெண்களுக்காக ஜப்பான் மனிதாபிமான உதவி

இலங்கைக்கு 1.6 மில். அமெ.டொ உதவி

03



## மன்னாரில் எலிகள் கடித்த உணவுகள் விற்பனை

MOH பணிமனையினரால் வழக்கு தாக்கல்

03



## இந்தியாவிலிருந்து 20 இலட்சம் முட்டைகள் நாட்டை வந்தடைவு

03 தினங்களில் சந்தைக்கு; ரூ. 35 முதல் 40 வரை விற்க முடிவு

03

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும்

# எத்தகைய போராட்டங்களுக்கும் ஒருபோதும் இடமளிக்க முடியாது

### தொழிற்சங்கத் தலைவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர சபையில் தெரிவிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்கும் போராட்டங்களுக்கு எந்த வகையிலும் இடமளிக்க முடியாது என எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக போராட்டங்களில்

06

# பால் மா வகைகளின் விலை அடுத்தவாரம் முதல் குறைப்பு



இறக்குமதி செய்யப்படும் பால் மா வகைகளின் விலையை குறைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக பால் மா இறக்குமதியாளர்கள் நேற்று தெரிவித்துள்ளனர்.

அதன்படி இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால் மா பொதியின் விலையை 200 ரூபாவினாலும், 400 கிராம் பால் மா பொதியின் விலையை 80 ரூபாவினாலும் குறைக்கப்படவுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த விலைக்குறைப்பு எதிர்வரும் வாரம் முதல் அமுலாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

# IMF ஒத்துழைப்பு நாட்டுக்கான முழுமையான விடியல் அல்ல

## மூச்சு விடுவதற்கான சந்தர்ப்பம் மட்டுமே




### சபையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒத்துழைப்பை எமக்கான முழுமையான விடியலாக கருதி விடக்கூடாதென அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பாராளுமன்றத்தில் தெரிவித்தார். பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மூச்சு விடுவதற்கான சந்தர்ப்பமாகவே இதனை எடுத்துக் கொள்ள

06




எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டு

# இந்திய மீனவர்கள் 12 பேர் நெடுந்தீவில் கைது

### 02 மீன்பிடி வள்ளங்களும் பறிமுதல்

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 12 தமிழக கடற்தொழிலாளர்கள்

06

# பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக புதிய சட்டமூலம்



## வர்த்தமானியில் வரைவு வெளியானது

பயங்கரவாத தடைச் சட்டத்துக்குப் பதிலாக, புதிய சட்டமூல வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது. நீதி, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, அரசியலமைப்பு சீர்திருத்த அமைச்சரின் அறிவுறுத்தலுக்கமைய, புதிய சட்டமூலம் வெளியிடப்பட்டுள்ளது.

'பயங்கரவாதத்திற்கு எதிரானது' எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த சட்டமூலம், ஆங்கிலத்தில் எண்டி டெரரிசம் (antiterrorism) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

1979ஆம் ஆண்டின் 48ஆம் இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகளை

06

# அடுத்த தேர்தலின் பின்னரான அரசில் நாமும் பங்காளிகள்

### எந்தக்கட்சி ஆட்சி அமைத்தாலும் பரவாயில்லை -மனோ கணேசன் எம்.பி



அடுத்த தேர்தலுக்கு பிறகு உருவாகும் எந்தவொரு அரசிலும் நாம் பலமான பங்காளியாக இருப்போமென தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் கூறியுள்ளார்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட செயற்குழு கூட்டம் கொழும்பு தெற்கு பணிமனையில் நடைபெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

06

# பாதுகாப்பு அமைச்சின், மாணவச் சிப்பாய் படையணிகளின் ஒருநாள் பயிற்சிப் பாசறை



இலங்கை பாதுகாப்பு அமைச்சானது முப்படைகள் மற்றும் பொலிஸாரின் துணையுடன் மாணவச்சிப்பாய் படையணிகளை பாடசாலைகள் தோறும் உருவாக்கி அதனை நடைமுறைப்படுத்தியும் வருகின்றது.

'மாணவர்களை நவீன சவால்கள் மற்றும் போதைப்பொருள் பாவனை, மனஅழுத்தங்களில் இருந்து விடுபட வைத்தல், உடல் வலிமை, மனவலிமையை மேம்படுத்தி நாட்டுக்கு நற்பிரஜையாக மாற்றியமைத்தல்' எனும் தொனிப்பொருள்களில் அமைந்த இந்த ஒரு நாள் பயிற்சிப் பாசறை அம்பாறை, 17 ஆவது படைப்பிரிவின் கட்டளையிடும் அதிகாரி லெப். கேர்ணல் டபிள்யூ. எல். பி. விஜேசுந்தர தலைமையில் கடந்த 21.03.2023 அன்று அட்டாளைச்சேனை பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

அம்பாறை 17 ஆவது படைப்பிரிவின் ஜி. கம்பனி கடேற் மாணவர்களுக்கான ஒரு நாள் பயிற்சிப்பாசறை அம்பாறை 17 ஆவது படைப்பிரிவின் பயிற்சி அதிகாரி கப்டன் எம்.ரி.நௌஸாத் வபி வழிகாட்டலில், அக்கரைப்பற்று திருக்கோவில் வலயங்களுக்கு பொறுப்பான கொம்பனி கொமாண்டர் லெப்டினன்ற் ஏ.எம்.எம். கியாஸ் நெறிப்படுத்தலில் நடைபெற்றது. இப்பயிற்சிப் பாசறையில் அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளின் கடேற் மாணவர்கள் பங்குபற்றினர்.

இப்பயிற்சி நிகழ்வுக்கு அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி தேசிய பாடசாலை அதிபர் ஏ.பி.முஜீன், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் ஏ.சி.எம்.ஹரிஸ் மற்றும் ஒலுவில் அல்ஹம்றா மகாவித்தியாலய அதிபர் அஷ்ஷெய்க் யு.கே.அப்துர் றஹீம் ஆகியோர் வருகை தந்து மாணவர்களை உட்சாகமூட்டினர்.

**அஷ்ரப் கான்**
(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

# நீர்வளத்தை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்



'காலநிலை மாற்றம், மனித செயற்பாடுகள் உள்ளிட்ட காரணிகளால் நீர்வளத்துக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. எனவே, நீர்வளத்தை பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். நாட்டு மக்களுக்கு சுத்தமான குடிநீர் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்' என்று நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

உலக நீர்தின விழா கடந்த 22.03.2023 அன்று இரத்மலானையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நீர் மற்றும் துப்புரவேற்பாட்டுக்கான சிறப்பு நிலையத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வுகள் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் நடைபெற்றன.



நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையின் தலைவர் நிசாந்த ரணதுங்கவின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகிய இந்நிகழ்வில், யூ.என்.டி.பி. இலங்கை வதிவிட பிரதிநிதி அஷுசா குபோட்டா சிறப்புரையாற்றினார்.


உலக நீர் தினத்தை முன்னிட்டு நாடாளவீய ரீதியில் நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான ஓவியம், கட்டுரை, மேடை நாடகம் உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன், நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையில் 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய ஊழியர்களுக்கு தங்க நாணயமும், கடந்த க.பொ.த உயர்தர பரீட்சையில் 3 ஏ சித்திபெற்ற ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஆர். எம்.டபிள்யூ.எஸ்.சமரதிவாகர மற்றும் அமைச்சின் உயரதிகாரிகள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் அதிகாரிகள் என பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், "பொருளாதாரப் பிரச்சினைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் கடன் என்பது கிடைக்கால தீர்வேயாகும். அது நிரந்தரத் தீர்வு அல்ல. எனவே, நிலையானதொரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு உள்ளக பொறிமுறையே அவசியம். அதாவது தேசிய உற்பத்தியை மேம்படுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்துள்ள நிலையில், இலங்கை மீது நிதிநிறுவனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி உள்ளிட்டவற்றின் உதவியை பெறுவதற்கு இது வழிவகுக்கும். எமது நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்வதற்கு கூட்டுப் பொறுப்பு என்பது அவசியம். அதனையே இன்றைய தலைமையினர் எதிர்பார்க்கின்றனர்" என்று குறிப்பிட்டார்.

**ஊடக செயலாளர்**
நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு

# பாலமுனையில் இலக்கியத்துக்கு வித்திட்டவர் ஆசுகவி அன்புடீன்



## அன்னாரின் மறைவுக்கு ஏராளமானோர் அனுதாபம்

இலங்கையின் மூத்த கலை இலக்கியவாதியும், கவிஞரும், பன்னூலாசிரியருமான ஆசுகவி அன்புடீன் நேற்று முன்தினம் புதன்கிழமை காலமானார். அன்னாரின் மறைவையொட்டி பல்வேறு கலை இலக்கிய அமைப்புகளைச் சேர்ந்தோரும் அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்களும் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

இலக்கியத் துறையில் பொன் விழாக் கண்ட கவிஞர் ஆசுகவி அன்புடீனின் மறைவு இலக்கிய உலகிற்கு பேரிழப்பாகும் என அந்த அனுதாபச் செய்திகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள பாலமுனையை பிறப்பிடமாகவும், அட்டாளைச்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆசுகவி அன்புடீனின் இயற்பெயர் பக்கீர் முகைடீன் கலந்தர் லெவ்வை என்பதாகும். அஞ்சல் திணைக்கள ஓய்வு பெற்ற உத்தியோகத்தரான ஆசுகவி அன்புடீன் பல நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

அவரது மறைவு தெடர்பில் தென்கிழக்குப் பிரதேச இலக்கிய செயற்பாட்டாளர்களும், கலை இலக்கியவாதிகளும் பெரும் துயரை வெளிப்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

சாமரையில் மொழி கலந்து, ஐந்து தூண்கள், முகங்கள், அக்கரைப்பற்று அன்னை மகிழ்கிறாள் ஆகிய நூல்களையும், நெருப்பு வாசல் எனும் சிறுகதை நூலையும் அவர் வெளியிட்டுள்ளார்.

கவித்தாரகை விருது, ஆசுகவி பட்டம், கவிமாமணி விருது, உலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாட்டில் சிரேஷ்ட கவிஞருக்கான விருது, திகாமடுள்ள அபிமானி, கலாபூசணம், கவிச்செம்மல் ஆகிய விருதுகளை அவர் பெற்றுள்ளார்.

2012 இல் கிழக்கு மாகாண முதலமைச்சர் விருது பெற்றவர். கல்முனை புதிய பறவைகள் கவிதா மண்டல செயலாளர், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் அம்பாறை மாவட்ட தலைவர், தென்கிழக்கு கலாசார பேரவையின் செயலாளர், எழுவான் வெளியீட்டு பணியக தவிசாளர், பூஞ்சோலை எழுத்தாளர் மன்ற ஸ்தாபகர், பாலமுனை முற்போக்கு கலாமன்ற ஸ்தாபகர், அட்டாளைச்சேனை பிரதேச செயலக கலாசார பேரவை உபதலைவர், தேசிய மீலாத்விழா கலாசார குழுத் தலைவர், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க உறுப்பினர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார்.

ஒரு நூலகத்தையே பாலமுனை மண்ணில் ஆரம்பித்த பெருமைக்குரியவர் அவர். இளைஞராக இருக்கையில் 'ஊர்க் குருவி' என்ற புனைபெயரில் இவர் சமூகம் சார்ந்த பல பிரச்சினைகளையும் பத்திரிகைகளில் எழுதியுள்ளார். பாலமுனையின் இலக்கிய முன்னோடியான இவர், பாலமுனையின் கலை வளரவும், பல கலைஞர்களை வளர்க்கவும் பாடுபட்டார்.

**செல்லையா பேரின்பராசா**
(துறைநீலாவணை நிருபர்)

# இருளில் மூழ்கிய இலங்கைக்கு ஒளி கொடுத்துள்ளார் ஜனாதிபதி



## மக்களின் வாழ்க்கைச் செலவு இனிமேல் படிப்படியாக குறையும் என்கிறார் ஆனந்தகுமார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கடுமையான முயற்சியால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 07 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான கடன் வசதி கிடைக்கப் பெற்றமையானது இலங்கையை மீண்டும் பழைய நிலைமைக்கு இட்டுச் செல்லுமென்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை மேற்கொள்ளும் குழுவின் உறுப்பினரும், ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான எஸ். ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'கடந்த ஆண்டு இலங்கையின் பொருளாதாரம் வரலாறு காணாத நெருக்கடிகளை சந்தித்திருந்த தருணத்தில், எமது நாடு அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து விட்டதாகவும் இனி இந்த நாடு சோமாலியாவைப் போன்றதொரு நிலைக்குத் தள்ளப்பட்டுவிடும் என்றும் பலரும் கூறினர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் இன்று நாடு மீண்டெழுந்துள்ளதுடன், வெகுவிரைவாக அன்றைய சகஜ நிலைக்குச் செல்லும் சூழல் உதயமாகியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் வல்லமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு மாத்திரமே உள்ளது. அவர் நாட்டின் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படாதிருந்தால் இன்று உண்மையிலேயே எமது நாடு சோமாலியாவாகத்தான் மாறியிருக்கும். மக்கள் வரிசையில் நின்ற யுகத்துக்கு வெறும் இரண்டு மாதத்தில் முடிவுகட்டிய ஜனாதிபதி, இன்று மக்களின் வாழ்க்கைச் செலவையும் குறைப்பதற்கு பல கடினமான தீர்மானங்களை எடுத்துள்ளார்.

ஜனாதிபதி கடந்த காலத்தில் எடுத்திருந்த சில தீர்மானங்களால் மக்களுக்கு நேரடியான நன்மைகள் கிடைக்கவில்லையென எதிர்க்கட்சியினர் கூறினார்கள். ஆனால், அந்தத் தீர்மானங்கள்தான் இன்று நாட்டை மூச்சுவிடும் நிலைக்கு கொண்டுவந்துள்ளன. எதிர்வரும் ஆறுமாத காலப் பகுதிக்குள் நாட்டின் பொருளாதார சுமையை குறைக்க ஜனாதிபதி பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளார்.

தேர்தல்கள் நாட்டுக்கு அவசியம் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. ஆனால், மக்களை பட்டினியில் போட்டுவிட்டு தேர்தலை நடத்துவதால் யாருக்கு பயன்? தேர்தல் நடத்துவதற்கான சூழல் விரைவில் உருவாகும். அப்போது மக்கள் தமது ஜனநாயக கடமைகளை நிறைவேற்ற முடியும். ஜனாதிபதியின் தலைமைத்துவத்தையும் அர்ப்பணிப்பையும் பார்த்துக் கொண்டிருக்கும் மக்கள் அவரை அடுத்த பல ஆண்டுகளுக்கு நாட்டின் ஜனாதிபதியாக தொடரச் செய்வார்கள் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது" எனக் கூறியுள்ளார்.

# தினக்குரல் பத்திரிகை முன்னாள் விநியோக முகாமையாளர் காலமானார்



தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் விநியோக முகாமையாளர் தங்கராசன் பரமேஸ்வரன் (வயது 65) நேற்று வியாழக்கிழமை கொழும்பில் காலமானார்.

யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அன்னார், மஞ்சுளாவின் கணவரும் பிரியங்கா, பிரியந்தன் ஆகியோரின் தந்தையுமாவார்.

இறுதியாக இமாஷி பப்ளிகேஷனில் கடமையாற்றிவந்த அன்னார், அந்நிறுவனத்தின் வெளியீடான 'பாலர் முரசு' சிறுவர் சஞ்சிகையின் ஆசிரியராக கடமையாற்றியிருந்தார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பான தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

# சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை; இணங்கக் கூடியவற்றில் எதிர்க்கட்சி இணங்கும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சபையில் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தில் இணங்கக் கூடிய விடயங்களில் இணக்கப்பாட்டுடன் செயற்படுவதற்கு எதிர்க்கட்சி தயாராக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அதேபோன்று இணங்க முடியாத விடயங்களில் எதிர்க்கட்சி தமது நிலைப்பாட்டை வெளிப்படையாக தெரிவிப்பதிலும் பின்னிற்காது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை தடுத்தவர்களே தற்போது வெள்ளாட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் போன்று செயற்பட்டு வருகின்றனர் என்பதை சபையில் சுட்டிக்காட்டிய அவர், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள எதிர்க்கட்சி செய்யவேண்டிய பணிகளை முழுமையாக தாம் செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதியின் உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை ஒரு சர்வாதிகார நாடல்ல மாறாக இது ஒரு ஜனநாயக நாடு. அதனால் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்துக்கு ஆதரவளிக்குமாறு எடுத்த எடுப்பில் கேட்டுக்கொண்டால் அவ்வாறு எம்மால் ஆதரவளிக்க முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரேரணைகள் தொடர்பாக நன்கு ஆராய்ந்து, இணங்க முடியுமான விடயங்களுக்கு எமது இணக்கப்பாட்டைத் தெரிவிப்போம். அதேவேளை இணங்க முடியாத விடயங்கள் தொடர்பில் எமது நிலைப்பாட்டை வெளிப்படையாகத் தெரிவிப்போம்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லும் வேலைத்திட்டம் 2018 ஆம் ஆண்டிலும் இடம் பெற்றது.

அன்று ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்த அரசாங்கத்தில் நாமும் அதன் பங்காளியாக இருந்தோம்.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய திட்டத்தின் மூலம் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வது தடுக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை தேசத்துராேகம் என்றே பிரசாரம் செய்துவந்தார்கள். ஆனால் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் பணத்தை பெற்றுக்காண்டு பட்டாசு கொளுத்துகின்றனர்.

அன்று சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை தடுத்தவர்களே தேசத்துராகிகள் என்பதை ஜனாதிபதிக்கு தெரிவிக்கிறோம்.




# நோன்பின் முக்கியத்துவம்

இவ்வருடத்திற்கான ரமழான் மாதம் எம்மை வந்தடைந்து விட்டது. இது அல் குர்ஆன் அருளப்பட்ட அருள் நிறைந்த மகத்துவம் மிக்க மாதம். இம்மாதத்தில் நோன்பிருப்பதை அல்லாஹ் கடமையாக்கியுள்ளான். இம்மாதத்தில் சுவனம் திறக்கப்படுகிறது. நரக வாயில்கள் மூடப்படுகின்றன. அட்டூழியம் செய்யும் ஷைத்தான்கள் விலங்கிடப்படுகின்றன. இதிலே ஆயிரம் மாதங்களைவிட சிறப்பான ஒரு இரவு (லைலத்துல் கத்ர்) காணப்படுகிறது. யார் அதன் சிறப்புகளை தவற விட்டாரோ அவர்தான் உண்மையாக தவற விட்டவராவார்' என்று நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: அஹ்மத், நஸாஈ)

அதேநேரம், அல்லாஹுத்தஆலா 'ரமழான் மாதத்தில்தான் மனிதர்களுக்கு நேர்வழிகாட்டக்கூடிய, நேர்வழியை தெளிவுபடுத்தக்கூடிய, சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக்காட்டக்கூடிய அல்குர்ஆன் அருளப்பட்டது. யார் அம்மாதத்தை அடைந்துகொள்கிறாரோ அவர் நோன்பிருக்கட்டும்.' (அல் பகரா 185)

இது பகலில் நோன்பு நோற்று இரவில் நின்று வணங்கும் மாதமாக இருப்பதோடல்லாமல் அல்குர்ஆனினதும் மன்னிப்பினதும் கொடையினதும் மானுட உறவுகளை பேணுகின்றதுமான மாதமாகவும் உள்ளது. உள்ளத்துடன் போராடி வெற்றி பெற்று அல்லாஹ்வை நெருங்கி அவனது திருப்தியைப் பெறவேண்டிய மாதமாகவும், சேர்க்கின்ற நன்மைகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டிய மாதமாகவும் உள்ளது.

'இறைதொடர்பு உள்ளவர்களுக்காக தயார்படுத்தப்பட்டுள்ள வானம் பூமியளவு விசாலமான சுவனத்தையும் இறை மன்னிப்பையும் அடைந்து கொள்வதற்காக விரைந்து செயற்படுங்கள். (ஆல இம்ரான் 133)

நபி (ஸல்) அவர்களும் தோழர்களும் நோன்பின் வருகையை நோன்பு வருவதற்கு முன்னரே எதிர்பார்த்தார்கள். அதன் பாக்கியங்கள் கிடைத்திட வேண்டும் என்று பிரார்த்தனை புரிந்தார்கள். நோன்பை பயன்படுத்தி பயன்பெறுவதற்கு ஆர்வமூட்டினார்கள்.

எனவே, அவர்களைப் போன்று நாமும் ரமழானை பூரணமாக பயன்படுத்திடுவோம். எம்மை நாம் தூய்மைப்படுத்தி, நன்மைகள் பெற்று சுவனத்தை அடைந்துகொள்வோம்.

**அஷ் ஷெய்க்**
**யூ.கே றமீஸ்...**
எம்.ஏ. (சமூகவியல்)

# ரமழான் நோன்பு ஆரம்பம்; சவூதி தூதுவர் வாழ்த்து



ரமழான் மாத நோன்பு காலம் ஆரம்பமாகியுள்ளதையிட்டு இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி விஷேட வாழ்த்து செய்தியொன்றை விடுத்துள்ளார்.

அச்செய்தியில் அவர் குறிப்பிட்டிருப்பதாவது, 'கருணையும், நற்செயல்களும் நிறைந்த, தவறுகள் மன்னிக்கப்படும், புனித மிகு அல்குர்ஆன் இறக்கியருளப்பட்ட மிகப்பெரும் மகிழ்ச்சிகர நிகழ்வை நினைவுபடுத்தும் அருள்மிகு புனித ரமழான் மாதத்தினை முன்னிட்டு, அப்புனித மிகு மாதத்தை அடைந்து கொண்டுள்ள இலங்கையரான உங்கள் அனைவரையும் வாழ்த்துகிறேன். நான் இலங்கை ஜனநாயக சோசலிசக்குடியரசில் அடைந்து கொண்ட முதல் புனிதமிகு ரமழான் மாதம் இதுவாகும். இப்புனிதமிகு மாதம் அனைவருக்கும் கருணையும் சுபீட்சமும் அருளும் நிறைந்ததாக அமையப்பெற்று, இப்புனிதமிகு மாதத்தினை அனைவரும் அடைந்து, நோன்பு நோற்று நற்கிரியைகளில் ஈடுபடும் பாக்கியத்தை அடையவும், அனைவரது நற்செயல்களையும் வல்ல இறைவன் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பிரார்த்திக்கிறேன்' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வெலிகம அறபாவில் ஓய்வுபெறும் ஆசிரியர்கள், இலிகிதர்கள் கௌரவிப்பு

**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம அறபா தேசிய பாடசாலையில் நீண்ட காலம் சேவை புரிந்து ஓய்வு பெற்றுச் சென்ற மற்றும் இடமாற்றம் பெற்றுச்சென்ற ஆசிரியர்கள், இலிகிதர்கள் அண்மையில் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரி அதிபர் எம்.டி.எம் முதஹ்ஹர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மௌலவி எம்.யூ.எம் வாலிஹ் ஆசிரியர் (அல் அஸ்ஹரி), அஸ்ஸெய்யித் ஹரீர் மௌலானா ஆசிரியர், எம்.என். எப் நதீமா ஆசிரியை , பஸ்மினா பேகம் ஆசிரியை, மத்ஹரா ஆசிரியை , மற்றும் பஸ்னா ஆசிரியை ஆகியோர் அதிபரிடமிருந்து அன்பளிப்புகளைப் பெறுவதைப்படத்தில் காணலாம்.





தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 மார்ச் 24 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN

தொழுகை நேரம்
சுபஹ் - 04.59
லுஹர் - 12.19
அஸர் - 03.31
மஃரிப் - 06.21
இஷா - 07.31

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் பங்குனி 10
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



## தவக்கால சிந்தனை



### இயேசுவை எம்மில் தேடும் தவக்காலம்

(யோவான் 7: 1 – 2, 10, 25 – 30)

தவக்காலத்தின் நான்காம் வாரத்தில் பயணிக்கின்றோம். இன்றைய நற்செய்தியும் நேற்று மற்றும் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவங்களை யொத்ததாகவே காணப்படுகிறது.

தம்மை யூதர்களும், யூதத் தலைமைகளும் கைதுசெய்யவும் கொல்லவும் தேடுகிறார்கள் என்பதை நன்கறிந்த இயேசு கூடாரத் திருவிழாவின்போது எருசலேமுக்கு மறைவாக செல்கிறார் என்பதை இன்றைய நற்செய்தி எடுத்துரைக்கின்றது.

எருசலேமில் இயேசுவைக் கண்டவர்கள் பலவிதமான கருத்துக்களை அவரைக்குறித்து எடுத்துரைக்கின்றார்கள். மெசியா என்கிற பார்வையில் அவரைக்குறித்து மக்கள் இடறல்பட்டார்கள். காரணம் மெசியா எங்கிருந்து வருவாரென்பது தெரியாமல் இருக்க இவர் எங்கிருந்து வருகின்றார் என்பது தமக்கு தெரியுமே என எடுத்துரைத்து அவரைக்குறித்து ஐயப்பாடு அடைகிறார்கள். அவ்வேளையில்தான் இயேசு அவர்களிடம் "நீங்கள் நான் எங்கிருந்து வந்தவன் என்பதை அறிவீர்கள்.ஆயினும் நானாக வரவில்லை. என்னை அனுப்பியவர் உண்மையானவர்.அவரை உங்களுக்குத் தெரியாது. எனக்கு அவரைத் தெரியும். நான் அவரிடமிருந்தே வருகிறேன்.

என்னை அனுப்பியவரும் அவரே" என்றும் தான் யாரிடமிருந்து வந்தவர் என்பதனையும் அவர் எடுத்துரைக்கின்றார். அப்போதும்கூட அவரில் நம்பிக்கை கொள்ளாது கைதுசெய்யவே அவர்கள் முனைகிறார்கள்.

இன்றைய கிறிஸ்தவ நம்பிக்கையாளர்களின் பயணத்தில் கிறிஸ்து உண்மையாகவே மெசியாவாகத் தென்படுகிறாரா அல்லது சாதாரண ஒருவராகத் தென்படுகிறாரா?

பதில் கண்டுகொள்ள இயேசுவைத் தவக்காலத்தில் தேடுவோம்.

அருட்தந்தை நவாஜி...

## IMF நிதி கிடைக்கப்பெற்றதையடுத்து

# உலகில் நம்பிக்கையூட்டக் கூடிய நாடாக இலங்கை வென்றுள்ளது

### # ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னெடுப்புக்கள் காலத்தின் தேவை

**தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்**



சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கைக்கு நிதி கிடைக்கப்பெற்றதன் பயனாக எமது நாடு உலகில் ஓர் நம்பிக்கையூட்டக் கூடிய நாடாகவும், உலகிலுள்ள ஏனைய நாடுகள் எமது நாட்டின் மீது நல்லதொரு அபிப்பிராயத்தை வென்றெடுத்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (23) அமைச்சர் பந்துல குணவர்த்தன, தலைமையில் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து இலங்கை பெற்றுள்ள நிதி தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கும் ஊடக நிறுவனங்களுக்கும் தெளிவுபடுத்தும் மாநாடு நடைபெற்றது. அங்கு உரையாற்றும்போதே மேற்படி கருத்துக்களை அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இந் நிகழ்வின்போது பொருளாதாரத்துறை சார்ந்த ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக பேராசிரியர் ஹரித்த காரியவசம், களனி பல்கலைக்கழக மானுடவியல் பிரிவின் தலைவர் பேராசிரியர் ஷிராந்த கீங்கந்தவ ஆகியோரும் இனைந்து கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையடுத்து இலங்கை அடையும் நன்மைகள், தீமைகள் பற்றிய கருத்துக்களையும் முன்வைத்தனர் மேலும் கருத்துத் தெரிவித்த அமைச்சர் பந்துல குணவர்த்தன, கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது சர்வதேச நாணய நிதியத்தின் கடன் ஒப்பந்தத்தில் அரசாங்கம் சார்பாக நிதி அமைச்சின் செயலாளரும்,

06

## தென் பகுதி மீன்பிடித் துறைமுகங்கள்

# அமைச்சர் டக்ளஸ் தலைமையில் நேற்று விசேட கலந்துரையாடல்

### கடல் மணல் அகழ்வு பணி குறித்து விரிவாக ஆராய்வு

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இலங்கை துறைமுகங்கள் கடற்றொழில் கூட்டுத்தாபன பணிப்பாளர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நேற்று (23) கடற்றொழில் அமைச்சு அலுவலகத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின்போது கடல்மணல் அகழ்வுப் பணிகளால் தெற்கில் கடற்கரையோரங்கள் பாதிக்கப்பட்ட பகுதி மக்களின் வாழ்வாதாரம், கடற்றொழிலாளர்களுக்கான நஷ்டஈடுகள், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தினால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளில் காணப்படும்

06



# சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக் கொண்டமை

### ஜனாதிபதிக்கு ராதாகிருஷ்ணன் எம்பி சபையில் பாராட்டு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெற்றுக் கொண்டுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாக வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்பி சபையில் தெரிவித்தார்.

அவரது கடின முயற்சியைப் பாராட்டுவதாக சபையில் குறிப்பிட்ட அவர், நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு முதலில் ஊழல்களை ஒழிக்க அவர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. நாட்டின் இந்த இக்கட்டான காலகட்டத்தில் அதனைக் கொண்டு வருவதற்காக அயராத முயற்சியை மேற்கொண்ட ரணில் விக்ரமசிங்கவிற்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அந்த முயற்சிகளை நாம் வரவேற்கின்றோம். கடந்த 2 வருடங்களுக்கு முன்னரே நாம் சர்வதேச நாணய நிதியத்திற்கு செல்லுமாறு வேண்டுகோள் விடுத்திருந்தோம். அங்கு சென்றால் மட்டுமே நாடு சுபீட்சமடைய முடியும்.பிரச்சினைகளை தீர்க்க முடியும் என பல தடவைகள் நாம் கூறியிருந்தோம் எனினும் காலம் கடந்தாவது இந்த வேலைத்திட்டத்தை மேற்கொண்டுள்ளமை தொடர்பில் மகிழ்ச்சியடைய முடியும்.

06

# ரூ.60 கோடி பெறுமதியான சிகரெட்டுகள் கைப்பற்றல்

### சுங்கத் திணைக்களம் அதிரடி



சட்டவிரோதமான முறையில் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட 60 கோடி ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் சுமார் 01 கோடி ரூபா பெறுமதியான மசாலாப் பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சுமார் 60 இலட்சம் சிகரெட்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், 19,510 கிலோ உலர் மஞ்சள், 4,500 கிலோ மஞ்சள் கிழங்கு மற்றும் 4,900 கிலோ மஞ்சள் தூள் ஆகியவற்றை கைப்பற்றியதாக சுங்கப் பிரிவினர் தெரிவித்தனர்.

## துறைசார் மேற்பார்வை குழுவின் தலைவராக லலித் எம்.பி தெரிவு



ஊடகம், இளைஞர், பாரம்பரியம் மற்றும் புதிய பிரஜைகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் லலித் வர்ணகுமார பாராளுமன்றத்தில் (21) ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

குழுவின் முதலாவது கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இதன்போது அவரது பெயரை பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட முன்மொழிந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர் வீரசுமன வீரசிங்ஹ வழிமொழிந்தார். குழுவின் தலைவராக தன்னைத் தெரிவு செய்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்த

06

# ரமழானின் மகிமை உணர்ந்து அனைவரும் செயற்படுவோம்

### அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா தெரிவிப்பு

புனித ரமழான் மாத நோன்பு காலம் ஆரம்பமாகியுள்ளதையிட்டு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷைக் முப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி, பொதுச் செயலாளர் அஷ்ஷைக் எம். அர்கம் நூராமித் மற்றும் பொருளாளர், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள் உட்பட உத்தியோகத்தர்கள் ரமழான் மாத வாழ்த்துச் செய்தியொன்றை விடுத்துள்ளனர்.

அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, ரமழான் மாதம் என்பது அல்லாஹுதஆலா முஸ்லிம்களுக்கு வழங்கியிருக்கும் மிகச் சிறந்ததோர் அருட்கொடையாகும். இம்மாதத்திலேயே அல்லாஹுதஆலா புனித அல்குர்ஆனை வழிகாட்டியாகவும் இறைவேதமாகவும் எமக்கு அருளியுள்ளான். இம்மாதம் நன்மைகளையும் அருட்கொடைகளையும் பல பாக்கியங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள ஆசிர்வதிக்கப்பட்ட மாதமாக உள்ளது.



நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஹஸ்ரத் அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கின்றார்கள். சங்கையான மாதமான ரமழான் உங்களிடம் வந்துள்ளது. அதில் அல்லாஹுதஆலா நோன்பு நோற்குமாறு உங்களை கட்டளையிட்டுள்ளான். அம்மாதத்தில் சுவர்க்கத்தின் வாயில்கள் திறக்கப்படுகின்றன. நரகத்தின் வாயில்கள் மூடப்பட்டு அனைத்து ஷைத்தான்களும் விலங்கிடப்படுகின்றன. அதில் அல்லாஹ் ஆயிரம் மாதங்களை விட சிறந்த ஓர் இரவை வைத்திருக்கின்றான். எவர் அதன் நன்மையை இழக்கின்றாரோ உண்மையில் அவர் சகல பாக்கியங்களையும் இழந்தவராவார். (நூல்: இப்னு மாஜா)

06

# நலிவுற்றுள்ள பெண்களுக்காக ஜப்பான் மனிதாபிமான உதவி

### இலங்கைக்கு 1.6 மில். அமெ.டொ உதவி



இலங்கையில் சமூக பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மனிதாபிமான உதவிக்காக ஜப்பான் அரசாங்கம் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐ. நா பெண்கள் அமைப்புக்கு வழங்கியுள்ளது.


இந்நிதி, "நெருக்கடியில் உள்ள பெண்களை வலுவூட்டல்" என்ற புதிய செயற்திட்டத்தின் ஒரு பகுதியென்பதுடன், 2023 பெப்ரவரி முதல் 2023 டிசம்பர் வரை செயற்படுவதுடன், இது பாலின மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்ட குறைந்தது 1,200 பெண்கள் உட்பட அவர்களின் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும்.

இது வீழ்ச்சியடையும் அபாயத்திலுள்ள

06

# மன்னாரில் எலி கடித்த உணவுகள் விற்பனை

### MOH பணிமனையினரால் வழக்கு தாக்கல்



மன்னாரில் பிரபல உணவு விற்பனை நிலையத்தில் சுகாதாரமற்ற மனித பாவனைக்கு பொருத்தமற்ற எலி மொய்த்த உணவுகள் களஞ்சியப்படுத்தியும் விற்பனைக்காக வைத்திருந்த உணவகத்துக்கு எதிராக நேற்று (23) மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. மன்னாரில் பிரபல உணவு விற்பனை நிலையத்தில் சுகாதாரமற்ற மனித பாவனைக்கு பொருத்தமற்ற எலி கடித்த உணவுகள் களஞ்சியப் படுத்தியும், விற்பனைக்காக வைத்திருப்பது

06

# இந்தியாவிலிருந்து 20 இலட்சம் முட்டைகள் நாட்டை வந்தடைவு

### 03 தினங்களில் சந்தைக்கு; ரூ. 35 முதல் 40 வரை விற்க முடிவு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இந்தியாவிலிருந்து முதற்கட்டமாக 20 இலட்சம் முட்டைகள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

35 ரூபாவுக்கும் 40 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் எதிர்வரும் மூன்று தினங்களுக்குள் அந்த முட்டையை சந்தையில் விற்பனைக்கு விடுவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கொழும்பு துறைமுகத்திற்கு நேற்று முன்தினம் வந்தடைந்துள்ள முட்டைகள் விசேட பரிசோதனைகளை

07

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 203.45 | 218.35 |
| கனடியன் டொலர் | 223.17 | 239.59 |
| யூரோ | 328.39 | 349.71 |
| ஜப்பான் யென் | 2.2763 | 2.4249 |
| சிங்கப்பூர் டொலர் | 228.62 | 244.11 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 370.07 | 393.49 |
| சுவிஸ் பிராங்க் | 332.65 | 356.98 |
| அமெரிக்க டொலர் | 311.62 | 328.90 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 845.12 | கட்டார் ரியால் | 87.33 |
| குவைத் டினார் | 1,036.67 | சவூதி ரியால் | 84.87 |
| ஓமான் ரியால் | 827.60 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 86.74 |


தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் பங்குனி மாதம் 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரமழான் பிறை 01

### குறள் தரும் சிந்தனை



ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்

*தனியாக நின்று பலரின் பகையைத் தேடிக் கொள்பவனை ஆணவம் பிடித்தவன் என்பதைவிட அறிவிலி என்பதே பொருத்தமாகும்.*

## எதிரணியினருக்கு ஜனாதிபதி விடுத்துள்ள அழைப்பு!

இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதிக்கான அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது. இது தொடர்பில் நாட்டு மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் விஷேட உரையாற்றினார்.

அந்த உரையின் ஊடாக ஏழெட்டு மாதங்களுக்கு முன்னர் இந்நாடு எவ்வாறு இருந்தது? என்பதையும், தான் எவ்வாறான நாட்டை பொறுப்பெடுத்தாரென்பதையும் அவர் தெளிவுபடுத்தினார். அன்று நாடு முகம்கொடுத்திருந்த நிலைமைகளை எடுத்துக்கூறிய அவர், அந்நிலையிலிருந்து நாட்டை மீட்டெடுக்கவென பதவி ஏற்றது முதல் முன்னெடுத்த முயற்சிகளையும் அவர் விபரமாகக் குறிப்பிடத் தவறவில்லை.

கடந்த வருடம் ஏப்ரல் மாதம் முதல் ஜுலை மாதம் வரையான காலப்பகுதியில் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்திருந்ததோடு நாட்டில் குழப்பங்களும் நிறைந்திருந்தன. அன்று எதிர்காலம் குறித்த நம்பிக்கை நாட்டில் காணப்படவில்லை. நாடு வங்குரோத்து அடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. எரிபொருள், எரிவாயு என்பவற்றுக்காக நாட்கணக்கில் மக்கள் வரிசைகளில் காத்திருந்தனர். பாடசாலைகள் மூடப்பட்டு இருந்தன. மின்வெட்டு மணித்தியாலயக்கணக்கில் தினமும் முன்னெடுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு பசளை கிடைக்கப் பெறவில்லை. சட்டம் ஒழுங்கு சீர்குலைந்திருந்தது. ஜனாதிபதி மாளிகை, பிரதமர் அலுவலகம், ஜனாதிபதி செயலகம் உள்ளிட்ட அரச அலுவலகங்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு வெளியாட்கள் அவற்றில் குடியிருந்தனர். நாடெங்கிலும் குண்டர்களின் தாக்குதல்கள் இடம்பெற்றன. நாட்டின் பணவீக்கம் 73 வீதம் வரை அதிகரித்துக் காணப்பட்டது.

இவ்வாறான நாட்டில்தான் ஜனாதிபதி பதவியை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அவரது வேலைத்திட்டங்களுக்கு சொற்ப காலத்திற்குள் பிரதிபலன்கள் கிடைக்கப் பெறலாயின. அதன் ஊடாக மக்கள் முகம்கொடுத்த கடும் நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின.

அதன் பயனாக மக்கள் மத்தியில் புதிய நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் தோற்றம் பெற்று நாளுக்கு நாள் வளர்ச்சி பெறலாயின. இதேவேளை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்சி பெற்றுக் கொள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் உதவி ஒத்துழைப்புகளை பெற்றுக் கொள்ளும் வகையில் முன்னெடுக்கப்பட்ட தொடர் பேச்சுவார்த்தைகள், நகர்வுகளின் பிரதிபலனாக அந்நிதியத்தின் நிறைவேற்றுச் சபை இலங்கைக்கு நீடிக்கப்பட்ட கடன் வசதியை வழங்க அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கேற்ப அடுத்த நான்கு வருடங்களில் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைக்கப்பெற உள்ளது. அத்தோடு உலக வங்கி உள்ளிட்ட ஏனைய கடன் வழங்குனர்களிடம் இருந்தும் மேலும் கடன் வசதி கிடைக்கப் பெறுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கையின் இன்றைய சமூக, பொருளாதார அரசியல் சூழலில் இதுவொரு முக்கியத்துவம் மிக்க காலகட்டமாகும். இந்நிலையில் பாராளுமன்றத்தில் விஷேட உரையாற்றியுள்ள ஜனாதிபதி, "பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்பும் பணிகளில் இணைந்து கொள்ளுமாறு எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக் கொள்கிறேன். உங்களுடன் நான் வாதிட வரவில்லை. என்னை விமர்சித்த போது அதற்கு நான் பதிலளிக்க முயற்சி செய்யவில்லை. ஏனெனில் உங்கள் ஆதரவு தேவை என்பதற்காக நான் அவ்வாறு நடந்து கொண்டேன். அதனால் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகளுக்கு இப்போதாவது ஆதரவு தாருங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியில் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நீடிப்பு அறிவிப்பு வரலாற்று மைல்கல் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அதனால் நாட்டைக் கட்டியெழுப்பும் பணிக்கென எதிர்க்கட்சியினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்த அழைப்பின் ஊடாக தன் முதிர்ச்சியையும் பக்குவத்தையும் ஜனாதிபதி தெளிவாக வெளிப்படுத்தியுள்ளார்.

கட்சி ரீதியில் பிரிந்து நின்று அற்ப அரசியல் இலாபம் தேடுவதற்கான நேரகாலம் இதுவல்ல. பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை முழுமையாக மீட்டெடுக்க பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். அது இன்றியமையாததாகும்.

ஆகவே சர்வதேச நாண நிதியம் உதவி ஒத்துழைப்பு நல்க முன்வந்துள்ள தற்போதைய சூழலில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக சகலரும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் நாட்டைக் கட்டியெழுப்ப உழைக்க முன்வர வேண்டும். அதுவே மக்களின் எதிர்பார்ப்பாகும். அப்போதுதான் வளமான தேசத்தைக் கட்டியெழுப்பக் கூடியதாக இருக்கும். அவ்வாறான தேசமே தம் மக்களுக்கு வளமான வாழ்வைப் பெற்றுக் கொடுக்கும்.

editor.tkn@lakehouse.lk

# ஆற்றல், ஆளுமை நிறைந்த அரசியல் தலைவராக போற்றப்படும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

## இன்று பிறந்ததினம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 74 ஆவது பிறந்த தினம் இன்றாகும். ஜனநாயக அரசியலின் தனித்துவமான தலைவராக உலகநாடுகளில் மதிக்கப்படுபவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஒருவராவார். அரசியல் அனுபவம், தலைமைத்துவ ஆளுமை, கல்வித்தகைமை போன்ற பல்வேறு ஆற்றல்களையும் கொண்ட அரசியல் தலைவராகவும் அவர் சர்வதேசரீதியில் போற்றப்படுகின்றார்.

அது மாத்திரமன்றி, இலங்கையில் பொருளாதார நெருக்கடி உச்சநிலையை அடைந்து நாட்டின் தலைவர் பதவியைத் துறந்ததையடுத்து அன்றைய அரசாங்கமும் வலுவிழந்த நிலையில் காணப்பட்டது. நாட்டில் அரசாங்கமொன்றே இல்லையென்றவாறான நிலைமையொன்று அன்று காணப்பட்டது.

பொருளாதார நெருக்கடி மோசமடைந்து அன்றாட பாவனைப் பொருட்களுக்கு விலையுயர்வும், தட்டுப்பாடும் நிலவிய வேளையில், நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு அவ்வேளையில் எதிரணியினரும் முன்வரவில்லை. மூழ்கிக் கொண்டிருக்கின்ற கப்பலில் ஏறுவதற்கு சிரேஷ்ட அரசியல்வாதிகளே அவ்வேளையில் தயங்கினர்.



பொருளாதாரத்தை சீர்படுத்துவதற்கான திராணி அரசியல்வாதிகளிடம் இருக்கவில்லை. நெருக்கடியான சமயத்தில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டால், அதன் பின்னர் மக்களின் நம்பிக்கையை இழக்க வேண்டி வந்துவிடுமென்று அவ்வேளையில் அரசியல்வாதிகள் தயக்கம் கொண்டனர்.

நாட்டின் தலைமைப் பதவிக்கு பொருத்தமான ஒருவரைத் தெரிவு செய்வதென்பது அன்றைய காலப்பகுதியில் இயலாத காரியமாக இருந்தது.

அரசியல் நெருக்கடி நிறைந்த அக்காலகட்டத்தில் நாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அரசியல்வாதிகள் பலரும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பு விடுத்த வண்ணமிருந்தனர். நாட்டை நெருக்கடியில் இருந்து மீட்டெடுப்பதற்கான பன்முக ஆளுமை நிறைந்த ஒரேயொரு அரசியல் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்று நம்பப்பட்டதனாலேயே அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

நெருக்கடி நிறைந்த அச்சமயத்தில் ஜனாதிபதிப் பதவியை ரணில் விக்கிரமசிங்க சவால்களுக்கு மத்தியில் பொறுப்பேற்றுக் கொண்டார். நாட்டின் அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு அமைய, பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்ற வேளையில் நாட்டில் நிலவிய நெருக்கடியை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. சமையல் எரிவாயு உட்பட்ட எரிபொருட்களுக்கு நெடுந்தூர கியூவரிசைகள் நாடெங்கும் அன்று காணப்பட்டன. எரிபொருட்களின் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசிய பொருட்களின் பற்றாக்குறை காரணமாக நாடு முடங்கிப் போய்க் கிடந்தது. மக்கள் சொல்லொணா துன்பங்களின் மத்தியிலேயே வாழ்ந்தனர்.

ஆனால் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்ற பின்னர் படிப்படியாக நிலைமை சீரடைந்து வரத் தொடங்கியது. கியூ யுகத்தை அவர் இல்லாதொழித்தார். அத்தியாவசிய பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்கினார். நாடு படிப்படியாக வழமை நிலைமைக்கு கொண்டுவரப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடனுதவி கிடைப்பதற்கும் வழியை ஏற்படுத்தியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

அவர் ஆளுமையுள்ள சிறந்த அரசியல்வாதி. பொருளாதாரம், அரசியல் நிர்வாகம் தெரிந்த அரசியல் தலைவராக மதிக்கப்படுபவர் அவர். ஆறு தடவை பிரதமராகவும் பதவி வகித்தவர். மேற்குலக நாடுகளுடன் நெருக்கமான உறவு கொண்டிருக்கும் தலைவர். அரசியலில் சரிவுகள் அவ்வப்போது ஏற்பட்டாலும் துவண்டு போகாமல், கொண்ட கொள்கையில் பற்று மாறாதவர்.

ஐக்கிய தேசியக் கட்சி வீழ்ச்சிநிலைக்குச் சென்றிருந்த போதிலும், கட்சியை நிமிர்த்தி பழைய நிலைக்கு கொண்டு வந்த திறமைசாலி அவர். அத்துடன் அதலபாதாளத்தில் வீழ்ந்த பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் வெற்றி அறிகுறி ஏற்படுவதற்குக் காரண கர்த்தாவாக மதிக்கப்படுபவர்.

### பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்த நாட்டை மீட்டெடுப்பதில் அனுபவம் மிகுந்த அரசியல் தலைவரின் முயற்சியினால் ஏற்பட்டுள்ள நம்பிக்கை தரும் முன்னேற்றம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒரு சட்டத்தரணி, இலங்கை மற்றும் உலக அரசியலை துறைபோகக் கற்றவர், புத்திஜீவி, ஒரு நாட்டை நடத்துவதற்கான எல்லாத் தகுதிகளும் கொண்டவர்.

பொருளாதார ரீதியாக இந்த நாடு நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது. எனவே அனைவரும் ஒன்று சேர்ந்து நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்க ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பதுதான் இன்று அவசியமாகும்.

அரசியல் வேறுபாடுகளை மறந்து அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைந்து செயற்பட ஒத்துழைக்குமாறு அவர் ஏற்கனவே பல தடவை வேண்டுகோள் விடுத்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இலங்கையின் இன்றைய நி லைவரத்தைப் புரிந்து கொண்டு, இனியும் பிரிந்து செயற்படாமல் அனைவரும் ஒன்றிணைந்து பிரச்சினைகளுக்குத் தீர்வினைக் காண முன்வரவே ண்டு ம் என்பதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோள் ஆகும்.

197 7 இல் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி பாராளுமன்றத்துக்குத் தெரிவான ரணில் விக்கிரமசிங்க, தொ டர்ந்து 44 வருடங்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதிகளவு தடவை பிரதமராக பதவி வகித்துள்ளதுடன், அமைச்சுப் பதவி, சபை முதல்வர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி உள்ளிட்ட பல பதவிகளை வகித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் உறுப்பினராக 09ஆவது பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தினார். அதன் பின்னர் கடந்த வருடம் அவர் நாட்டின் ஜனாதிபதியானார்.

1949 மார்ச் 24 ஆம் திகதி பிறந்த அவர் இன்று தனது 74 ஆவது பிறந்ததினத்தைக் கொண்டாடுகின்றார்.

1970 ஆம் ஆண்டு களனி தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக தனது அரசியல் பயணத்தை ஆரம்பித்த அவர், பின்னர் பியகம தொகுதியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

1977ஆம் ஆண்டில் முதல் முறையாக பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்ட அவர், ஜே.ஆர். ஜயவர்தன அரசின் அமைச்சரவையில் இளம் அமைச்சராக இருந்ததுடன், இளைஞர் விவகாரம் மற்றும் தொழிற்துறை அமைச்சராக அப்போது கடமையாற்றினார்.

28 வயதில் வெளிவிவகார பிரதியமைச்சராக நியமிக்கப்பட்ட அவர், பின்னர் இளைஞர் விவகாரம், கல்வி மற்றும் தொழில், விஞ்ஞான மற்றும் தொழிநுட்பம் போன்ற அமைச்சு பதவிகளை வகித்தார்.

1989 மார்ச் 06முதல் 1993 மே 07வரையான காலப்பகுதியில் பாராளுமன்ற சபை முதல்வராக பணியாற்றிய ரணில் விக்கிரமசிங்க, 1994 முதல் 2001வரை மற்றும் 2004 முதல் 2015 வரை இலங்கை பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராக பதவி வகித்துள்ளார்.

அவர் முதன்முறையாக 1993 மே மதம் 07ஆம் திகதி பிரதமராக தெரிவு செய்யப்பட்டதுடன், 1994 ஓகஸ்ட் 19 வரை அந்தப் பதவியை வகித்தார். அவர் இலங்கையில் அதிக தடவை பிரதமராக பணியாற்றிய (6 தடவை) பிரதமராகவும் வரலாற்றில் பதிவாகியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இரண்டாவது முறையாக 2001 டிசம்பர் 09ஆம் திகதி முதல் 2004 ஏப்ரல் 06ஆம் திகதி வரையும், மூன்றாவது முறையாக 2015 ஜனவரி 09முதல் 2015 ஓகஸ்ட் 17வரையும், நான்காவது முறையாக 2015 ஓகஸ்ட் 17 முதல் 2018 ஒக்டோபர் 26 வரையும், ஐந்தாவது முறையாக 2018டிசம்பர் 16முதல் 2019நவம்பர் 21வரையும் ஏற்கனவே பிரதமராக பதவி வகித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவரான ரணில் விக்கிரமசிங்க, பின்னர் கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்டபீடத்துக்கு தெரிவு செய்யப்பட்டு சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டதுடன், இலங்கை பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்று இந்நாட்டின் பிரதமராக நியமிக்கப்பட்ட ஒரே ஒருவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் 1980 முதல் 88 வரை கல்வி அமைச்சராக தொலைதூர ஆங்கில ஆசிரியர் பயிற்சி எனப்படும் டெலின் ஆசிரியர் பயிற்சி, பூரணகால தொலைதூர சேவை ஆசிரியர் பயிற்சி, பாடசாலைகளுக்கான பகலுணவு, மீப்பே அழகியல் நிறுவனத்தை ஆரம்பித்தல், முறைசாரா கல்வியை விரிவாக்குதல், ஆசிரியர் பற்றாக்குறைக்கு தீர்வாக மாவட்ட ஆசிரியர் சேவையை ஆரம்பித்தல், ஆசிரியர் சேவையை 60வயது வரை நீடித்தல், பிக்குகளுக்கான ஆசிரியர் பயிற்சி, பாடசாலை அபிவிருத்தி சங்கங்களை ஆரம்பித்தல், பாடசாலை மேற்பார்வை அலகுகளை உருவாக்குதல் போன்ற திட்டங்களை உருவாக்கியவர்.

பாடசாலை திட்டமிடல் அலகு, இலவச பாடப்புத்தக விநியோகம், வலயக்கல்வி அலுவலகங்களை நிறுவுதல், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் மற்றும் மாணவர் ஆலோசனை சேவையை ஆரம்பித்தல் என்பனவற்றை அவரது கல்வி மறுமலர்ச்சிகளாக குறிப்பிட முடியும்.

அதற்கு மேலதிகமாக ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவதற்கு கல்விக் கல்லூரி முறைமையை ஆரம்பித்த ரணில் விக்கிரமசிங்க, 1988 இல் 09 தேசிய கல்விக் கல்லூரிகளை ஆரம்பித்தும் மற்றும் கல்வி ஆய்வுக்காக தேசிய கல்வி நிறுவகத்தை நிறுவியும் கல்வி அமைச்சராக கல்வியில் புதிய மறுமலர்ச்சிக்கு பங்களிப்பு செய்தார்.

ஆழ்ந்த இலக்கிய ஆர்வம் கொண்ட ரணில் விக்கிரமசிங்க வரலாறு, தொல்பொருள், சட்டம், பொருளியல், பௌத்தம் மற்றும் இலக்கியம், உலகளாவிய இலக்கியம் மற்றும் சுயசரிதையியல் என்பன தொடர்பில் ஆழ்ந்த அறிவு கொண்டவராவார்.

பல்வேறு மதங்கள் மற்றும் தத்துவங்கள் தொடர்பில் அதிக ஆர்வம் கொண்ட அவர் திரிபிடகம், தம்மபத, பௌத்த இலக்கியம் மற்றும் அரசியல் கோட்பாடு தொடர்பில் 'அரசியல் மற்றும் தர்மம்' எனும் புத்தகத்தை எழுதியுள்ளார்.

அவரது பாரியார் களனி பல்கலைக்கழகத்தின் ஆங்கில கல்வி பிரிவின் சிரேஷ்ட பேராசிரியையான மைத்ரி விக்கிரமசிங்க ஆவர்.

# ஜனாதிபதி நாட்டில் விரைவில் சுபிட்சத்தை ஏற்படுத்துவார்

### பிறந்த தினத்தை கொண்டாடும் ஜனாதிபதிக்கு எஸ்.ஆனந்தகுமார் வாழ்த்து

ஜனாதிபதியும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவின் 74 ஆவது பிறந்த தினம் இன்றாகும். ஜனாதிபதியின் பிறந்ததினத்தை முன்னிட்டு ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளரும், ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் குழுவின் உறுப்பினருமான எஸ்.ஆனந்தகுமார் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் சேவைகள் நாட்டுக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும் எனத் தெரிவித்துள்ள அவர், இந்த நாட்டை கட்டியெழுப்பி இளைஞர்களுக்கான எதிர்காலத்தை அவரால் மாத்திரமே உருவாக்க முடியுமெனக் குறிப்பிட்டுள்ளார்.

ஆனந்தகுமார் தனது செய்தியில் தெரிவித்துள்ளதாவது:

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது 74ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். கடந்த ஐந்து தசாப்தங்களாக அவர் இந்த நாட்டுக்காக எவ்வித எதிர்பார்ப்புமின்றி உழைக்கிறார். 1977ஆம் ஆண்டு முதல் இன்றைய நவீன தொழில்நுட்ப யுகம்வரை அவரது அனுபவம் உள்ளது. அவர் அதலபாதாளத்தில் இருந்து நாட்டை படிப்படியாக மீட்டெடுத்துக் கொண்டு வருகின்றார்.

2001 ஆம் ஆண்டு நாட்டை பொறுப்பேற்ற தருணத்தில் யுத்தம் காரணமாக கடுமையான பொருளாதார நெருக்கடியை நாடு எதிர்கொண்டிருந்தது. இரண்டே வருடங்களில்



அவர் நாட்டை சிறந்த பாதைக்கு வழிநடத்தினார். 2015ஆம் ஆண்டும் அவர் இக்கட்டான நிலையில்தான் நாட்டை பொறுப்பேற்றார். 2019ஆம் ஆண்டாகும் போது மக்களின் வாழ்க்கைச் செலவு குறைந்து நாடு பாரிய பொருளாதார அபிவிருத்தியை நோக்கி நகரும் சூழல் ஏற்பட்டிருந்தது.

அவர் ஜனாதிபதியாக பொறுப்பேற்று ஒரு வருடம்கூட இன்னமும் ஆகவில்லை. ஆனால், அடுத்த லெபனான் இலங்கைதான் என்று கூறியவர்களுக்கு பதிலளிக்கும் முகமாக உலக நாடுகளின் அங்கீகாரம் பெற்ற நாடாக இலங்கையை மாற்றியுள்ளார். விரைவாக நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமைகள் குறைந்து சுபீட்சத்துக்கு ஜனாதிபதி கொண்டு செல்வார். அவருக்கு அதற்கான அனைத்து சக்திகளும் கிடைக்க வேண்டுமென பிறந்த தின வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு ஆனந்தகுமார் தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# ரமழானை சிறப்பிக்கும் அல்-குர்ஆன்

**உலகத்தில் வாழ்ந்து மறைந்த எந்த மனிதரைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ள வேண்டுமானாலும் அவருடைய தனிப்பட்ட வாழ்க்கையை ஆராய வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. அவரது வாழ்வில் நடந்த நிகழ்வுகளைக் கொண்டு தான் அவரது குணநலன்கள் என்ன? பழக்கவழக்கங்கள் என்ன? அவருக்கு எது பிடிக்கும்? எது பிடிக்காது? என்பன போன்றவற்றை அறிந்து கொள்வது சாத்தியமாகும். ஆனால் இப்பொதுவிதியிலிருந்து அகிலத்திற்கு ஓர் அருட்கொடையாக அனுப்பப்பட்ட முஹம்மது (ஸல்) அவர்கள் விலக்கு பெறுகிறார்கள்.**

நபி(ஸல்) அவர்களது வாழ்வுதனை முழுமையாக அறிந்து கொள்ள இரண்டு வழிமுறைகள் உள்ளன. அவற்றில் ஒன்று, அவர்கள் வாழ்வில் நடந்த சம்பவங்களைக் கொண்டு அன்னாரின் வாழ்க்கை முறையை அறிந்து கொள்ளுதல். இது எல்லாருக்குமான பொது வழிமுறையாகும். மற்றையது நபி(ஸல்) அவர்கள் மாத்திரம் கொண்டுள்ள தனிச் சிறப்பு. அது தான் ரமழான் மாதம் அருளப்பட்ட அல் குர்ஆன் ஆகும்.

இதன்படி அல் குர்ஆன் வாயிலாகவும் நபி (ஸல்) அவர்களின் வாழ்வொழுங்கை தெளிவாகவும், உறுதியாகவும் அறிந்து கொள்ளலாம்.

அல் குர்ஆன் என்பது மக்களைப் பண்படுத்தவும், நேர்வழிப்படுத்தவும், நல்வழிப்படுத்தவும் அருளப்பட்ட பொது வேதம். இது முழு மனிதர்களுக்கான அறிவுரைகளையும் ஆர்வமூட்டல்களையும் உள்ளடக்கியுள்ளதோடு நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கையை அறிந்து கொள்ளவும் கூடியதாக உள்ளது. அல் குர்ஆன் வேறு, நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாத வகையில் குர்ஆனோடு பிணைந்ததாக அன்னாரின் வாழ்க்கை அமைந்திருந்தது. குறிப்பாக நபித்துவம் கிடைக்கப்பெற்று அல் குர்ஆன் அருளப்பெற்றதிலிருந்து அன்னாரது வாழ்வு அல் குர்ஆனின் ஒவ்வொரு சொல்லையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

அல் குர்ஆனிய ஒளியில் நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்க்கைப் பாதையை வெளிச்சமுள்ளதாக ஆக்கியிருந்தார்கள். இது தொடர்பில் ஒரு தடவை அன்னாரின் மனைவியரில் ஒருவரான ஆயிஷா (ரழி) அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்.

நான் ஆயிஷா (ரழி) அவர்களிடம், நபி (ஸல்) அவர்களின் குணத்தைப் பற்றி எனக்குச் சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர்கள் அன்னாரின் குணம் குர்ஆனாகவே இருந்தது என்று கூறியதாக ஸஃத் பின் ஹிஷாம் (ரழி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: அஹ்மத்)

அல் குர்ஆன் எதைப் போதிக்கின்றதோ அதுவே நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை என்று இந்நபிமொழியின் ஊடாக ஆயிஷா (ரழி) அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

அவ்வாறு மகத்துவம் மிக்க அல் குர்ஆன் அருளப்பட ஆரம்பமான ரமழான் மாதத்தைத் தற்போது அடைந்துள்ளோம். மனிதனின் இம்மை மறுமை வாழ்வின் சுபீட்சத்துக்கு நேர்வழிகாட்டி மனிதனை நெறிப்படுத்தி பக்குவப்படுத்துவதே இக்குர்ஆனின் நோக்கமும் இலக்குமாகும். உலகம் இருக்கும் வரையும் பிறக்கும் ஒவ்வொரு மனிதனுக்கும் நேர்வழிகாட்டுவதை இலக்காகக் கொண்டுள்ள இக்குர்ஆன் என்றும் உயிரோட்டத்துடன் இருக்கும்.

இக்குர்ஆன் அருளப்பட்ட தினமான லைலத்துல் கத்ர் இரவை ஆயிரம் மாதங்களை விடவும் மக்கத்துவம் மிக்கதாக அல்லாஹ்தஆலா ஆக்கி வைத்துள்ளான். அதன் விளைவாக முழு மாதத்தையும் சிறப்பித்து வைத்துள்ள அல்லாஹ் இம்மாதத்தில் ஆற்றப்படும் ஒவ்வொரு நற்காரியத்திற்கும் ஒன்றுக்கு பத்து முதல் எழுநூறு மடங்குகள் வரை நன்மைகள் வழங்குவதாக நபிமொழிகள் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறு சிறப்பும் மகத்துவமும் கொண்ட இக்குர்ஆன் அருளப்பட ஆரம்பமான இம்மாதத்தை அல்லாஹ் தஆலா இறையருள் நிறைந்த மாதமாக ஆக்கி வைத்திருக்கிறான். குறிப்பாக சுவனத்தின் வாசல்கள் திறந்து வைக்கப்படுவதோடு நரகத்தின் வாசல்கள் மூடப்பட்டு விடுகின்றன. மனிதனுக்கு கெடுதல்கள் மற்றும் தீங்குகளை ஏற்படுத்தக்கூடிய ஷைத்தான்களும் விலங்கிடப்படுகின்றன. பாவமன்னிப்புக்கான சிறந்த காலப்பகுதிகளில் ஒன்றாக இம் மாதம் விளங்குகின்றது.

ஆகவே அல் குர்ஆனினதும் நபி மொழிகளினதும் கட்டளைகள் மற்றும் போதனைகளின் அடிப்படையில் நோன்பு நோற்று, இறை வணக்கங்களில் ஈடுபடுவதில் ஒவ்வொருவரும் அதிகூடிய கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லாஹ்வினால் சிறப்பிக்கப்பட்டுள்ள இம்மாதத்தில் அல் குர்ஆனை ஓதுவதிலும், அதனை படித்து விளங்கிடுவதிலும், அதற்கேற்ப வாழ்வை அமைத்துக் கொள்வதிலும் கூடிய முயற்சிகளை முன்னெடுக்கவும் தவறக்கூடாது. இம்மாதம் கொண்டுள்ள இறையருள்களை உச்சளவில் பெற்றுக்கொள்வதில் ஒவ்வொருவரும் உச்சபட்ச முயற்சிகளை எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்கு ஏற்ற நேர காலமும் இதுவேயாகும்.

அபூமதீஹா...

# ஈமானை வலுப்படுத்தும் நோன்பு

ரமழான் ஈமானுக்கு புத்துயிர் ஊட்டும் வசந்தகாலம். செயலிழந்துள்ள உள்ளங்கள் உயிரோட்டம் பெறுவதற்கும் அல்லாஹ்வை மறந்தவர்கள் அவனை நினைவு கூருவதற்கும் பாவிகள் பாவ மன்னிப்புக் கோருவதற்கும் முஃமின்கள் அனைவரும் கருணையாளனின் வாசலில் நின்று, 'எங்கள் இரட்சகனே! எங்களுக்கு நாங்களே தீங்கிழைத்துக் கொண்டோம். நீ எங்களை மன்னித்துக் கிருபை செய்யாவிட்டால், நிச்சயமாக நாங்கள் நஷ்டமடைந்தவர்களாகி விடுவோம்.' (அல் குர்ஆன் 7:23) என்று பிரார்த்தனை செய்வதற்குமுரிய காலமாகும். மனிதன் எப்போதும் ஒரேநிலையில் சீராக இருப்பதில்லை. அவனது வாழ்வில் ஏற்ற இறக்கங்கள் வருவது வழமை. சில நேரம் மகிழ்ச்சியாக இருப்பவர்கள் வேறு சந்தர்ப்பங்களில் சோகமாக காட்சியளிப்பார்கள் சிலபோது இதற்கு மாற்றமாகவும், இன்னும் சிலபேர் வசதியாக இருந்து ஏழ்மைநிலைக்கு வந்துவிடுவார்கள்.

இது தொடர்பில் அல்குர்ஆன், உங்களுக்கு ஒரு காயம் ஏற்பட்டது என்றால், அதே போன்று மற்றவர்களுக்கும் காயம் ஏற்பட்டுள்ளது. இத்தகைய (சோதனைக்) காலங்களை மனிதர்களிடையே நாமே மாறி மாறி வரச் செய்கிறோம். இதற்குக் காரணம், ஈமான் கொண்டோரை அல்லாஹ் அறிவதற்கும், உங்களில் உயிர்த்தியாகம் செய்வோரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்குமே ஆகும். இன்னும், அல்லாஹ் அநியாயம் செய்வோரை நேசிப்பதில்லை (3:140) என்று குறிப்பிட்டு இருக்கின்றது.

இத்தகைய நிலைகளை மனிதனை சோதிப்பதற்காக அல்லாஹ் மாறிமாறி வரச்செய்கிறான். வாழ்க்கையின் ஏற்ற தாழ்வு போன்றுதான் நமது நம்பிக்கையுமாகும். அதிலும் ஏற்ற தாழ்வு நிகழ்வது வழமையானது தான். எல்லா நேர காலத்திலும் ஒரே சீரான ஈமானுடன் இருப்பது மனிதனுக்கு இயலாத காரியம்.

எனவே தான் நபி (ஸல்) அவர்கள், ஆடை இற்று போய்விடுவதைப் போன்று உங்களின் உள்ளங்களில் இருக்கும் ஈமானும் இற்றுபோய் விடும். எனவே உங்களின் உள்ளங்களில் இருக்கும் ஈமானை புதுப்பிப்பதற்கு அல்லாஹ்விடம் கேளுங்கள் என்று கூறினார்கள். (ஆதாரம் முஸ்தத்ரகுல் ஹாகிம்)

ஈமானை புதுப்பித்துக்கொள்வதற்காக எமக்கு அளிக்கப்பட்டுள்ள மிகச் சரியான வாய்ப்பு தான் ரமழான் ஆகும். எமது ஈமானையும் அமலையும் சீராக்கிக் கொள்வதற்காகத் தான் அல்லாஹ் சுவனத்தின் வாசலைத் திறந்து வைத்து நரகத்தின் வாசலை மூடிவிடுகிறான். இன்னும் மனிதனின் எதிரியும் அவனது அமல்களை பாழாக்கக்கூடியவனுமான ஷைதானுக்கு விலங்கிடுகிறான்.

இது குறித்து நபி (ஸல்) அவர்கள், ரமழான் மாதம் வந்துவிட்டால் சொர்க்கத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றன. நகரத்தின் கதவுகள் மூடப்பட்டுவிடுகின்றன. ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகிறது என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் ஸஹீஹுல் புஹாரி)

இத்தகைய அழகான வாய்ப்புகள் ஒருங்கே கிடைக்கப் பெற்றிருப்பதால் நமது ஈமானை மெருகேற்ற ரமழான் மிகச் சிறந்த காலகட்டமாக உள்ளது. அதே போன்று ரமழானில் நாம் நிறைவேற்றக்கூடிய அமல்கள் அல்லாஹ்விடம் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டுமானால் ஈமானுடனும், நன்மையை எதிர்பார்த்தும் அந்த அமல்களில் ஈடுபட வேண்டும். இது மார்க்க நிபந்தனை எனவும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

'நம்பிக்கை கொண்டு (நற் கூலியை) எதிர்பார்த்து ரமழான் மாதத்தில் நின்று வணங்குகிறவரின் முந்தைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும்' என்றும் (ஆதாரம் புஹாரி) நம்பிக்கை கொண்டும், நன்மையை எதிர்பார்த்தும் ரமழான் மாதம் நோன்பு நோற்பவரின் முந்தைய பாவங்கள் மன்னிக்கப்படும்' என்றும் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (ஆதாரம் புஹாரி)

ரமழானில் இறையச்சத்தை வளர்த்து கொள்வதற்காக பகல் பொழுதில் நோன்பு நோற்கப்படுகிறது. அல்லாஹ்வின் மன்னிப்பை பெறுவதற்காகவும் அவனுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் நாம் இரவு வணக்கங்களில் மூழ்கிவிடுகிறோம். இன்னும் அவனது நேரான வழியை தெளிவுபடுத்தக்கூடிய சங்கை மிக்க வேதத்தை இரவிலும் பகலிலும் படித்து கொண்டிருக்கிறோம். கடந்த காலங்களில் செய்த பாவங்களுக்கு வேண்டி அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு கோருகிறோம். இவ்வாறு நாம் நம்முடைய ஈமானை வலுப்படுத்தி வரக்கூடிய காலத்திற்காக தயார் ஆக வேண்டும். அதற்காக இந்த ரமழானை ஈமானோடு எதிர்கொண்டு ஈமானுக்கு உரமூட்டுவோம்.

அப்துர் ரஹ்மான்...

# பொறுமையின் மகிமை

'இன்னும் அவர்கள் எத்தகையவர் என்றால் தங்கள் இறைவனின் பொருத்தத்தை தேடி பொறுமையை கடைபிடிப்பார்கள்'

(அல்குர்ஆன்13:22)

அவர்கள் எல்லையே இல்லாத கஷ்டங்கள் அனைத்திலும் அல்லாஹ்வுக்காக அவனது பொருத்தத்தை தேடி பொறுமையை கடைபிடிப்பவர்களாவர். இவர்களைத்தான் அரபியிலே 'சாபிரூன்' என்று கூறுவார்கள்.

(பொறுமையை கடை பிடிப்பவர்கள்.) அவசரத்துடன் செய்யும் காரியத்தில் உணர்ச்சி வேகம் இருக்குமே தவிர அறிவுத்திறனுக்கு அங்கே வேலை இருக்காது. திட்டமிடலும் நிதானமும் இல்லாத செயல் தோல்வியைத் தான் தரும். பொறுமையை மூன்று வகைப்படுத்தலாம்.

1. அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதில் பொறுமையைக் கடைப்பிடித்தல். 2. தடுக்கப்பட்டவற்றை தவிர்ந்து கொள்வதில் பொறுமையை கடைப்பிடித்தல். 3. இயற்கையால் மனிதனுக்கு ஏற்படும் சோதனைகள் இழப்புக்கள் என்பவற்றை கொண்டு பொறுமையைக் கடைபிடித்தல்.

பொறுமையும், உறுதியும் இணையும் போது மனதில் ஒரு வகையான அமைதி ஏற்படும். பொறுமையை எப்பேர்பட்ட அசாதாரணமான சூழ்நிலையிலும் கடைபிடிக்கும் போது பல்வேறுபட்ட மனநோய்களில் இருந்தும் உடல் நோய்களிலிருந்தும் பாதுகாக்கும் என மனோ வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

'நான் பொறுமையாக இருக்க வேண்டிய இடத்தில் பொறுமை இல்லாமல் நடந்து கொண்டதால் பாரிய பின் விளைவுகளை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படவில்லை' என ஒருவகையான நிம்மதி மனதில் ஏற்படும். நாம் பொறுமையை மேற்கொண்டோமாயின்'அல்லாஹ்தஆலா என் மீது திருப்தி கொள்வான்', மறுமையிலும் நமக்கு அதற்கான மகத்தான நற்கூலியை வழங்குவான்' என்பதில் திடமான நம்பிக்கை கொள்ள வேண்டும். மேலும் நாம் எச்சந்தர்ப்பத்திலும் அல்லாஹ்வுடனும் அவனுடைய தீனுடனும் பிணைந்தவர்களாகவே இருத்தல் வேண்டும். ஒரு வார்த்தையை கேட்டுக்கொண்டு பொறுமை காக்க முடியாதவன் பல வார்த்தைகளை கேட்க நேரிடுவான்.

ஆத்திரம் தாங்காமல் ஒருவன் விடும் ஒரு தவறு பல ஆத்திரங்களை கொண்டு வந்து சேர்க்கும். பொறுமையானது இம்மையில் இறைவனின் உதவியை பெறுவதற்கும் மறுமையில் இறைவனின் உவத்தை அடைவதற்கும் காரணமாய் அமைகிறது. என அல் குர்ஆன் தெளிவாகக் கூறுகின்றது. மேலும் பொறுமையை கடைபிடிக்கும் காலமெல்லாம் அல்லாஹ்வின் கருணையும் அருளும் கிடைத்துக்கொண்டே இருக்கும். நிச்சயமாக வெற்றி என்பது பொறுமையைக் கடைபிடிப்பதில் இருக்கின்றது. மேலும் நிச்சயமாக அல்லாஹ் பொறுமையைக் கடைபிடிப்பவர்களோடும் நிதானத்தோடு நடப்பவர்களோடும் இருக்கிறான்.

'ஒருவர் பொறுமையை மேற்கொண்டால் அவரை பொறுமையாளராக அல்லாஹ் ஆக்கி வைப்பான். பொறுமையை விடவும் சிறந்ததை அல்லது விசாலமானதை எவருக்கும் நன்கொடையாக கொடுக்கப்படுவதில்லை' என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்

(ஆதாரம் புஹாரி, முஸ்லிம்).

எல்லையே இல்லாத துன்பங்களும் பிரச்சனைகளும் ஒரு மனிதனை பீடிக்கும் போது அல்லாஹ்வுக்காக பொறுமையாக இருப்பதன் மூலம் அதனுடைய பிரதிபலனை மேலான சுவர்க்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை கீழே வரும் ஹதீஸின் மூலம் அறியக் கூடியதாக இருக்கின்றது.

அபூஹுரைரா (ரலி) அவர்கள், 'எனது அடியானுக்கு உலக மக்களில் விருப்பமானவரை நான் கைப்பற்றி, பின்பு அவன் (பொறுமையாக இருந்து) நல்லதை எதிர்பார்த்து இருந்தால் அவனுக்கு என்னிடம் கூலி சொர்க்கத்தை தவிர வேறு இல்லை' என்று அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம் புஹாரி)

'ஒரு முஸ்லிமுக்கு சிரமம், நோய், கவலை, துக்கம், நோவினை, மயக்கம் மற்றும் அவனின் காலில் குத்தி விடும் முள்ளின் வேதனை உட்பட அனைத்திற்காகவும் அல்லாஹ் அவனது குற்றங்களை மன்னிக்கின்றான்' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(ஆதாரம் புஹாரி, முஸ்லிம்)

எனவே பொறுமை என்பது எல்லா இடத்திலும் ஒரு மனிதனுக்கு தேவையானதாகும். அதனைக் கடைபிடித்து இம்மையிலும் மறுமையிலும் வெற்றி பெறுவோம்.

ஹுஸ்னா எஸ்.ரஹுமான்...

# பல வருட கால நன்மைகளை 30 நாட்களில் பெற்றுக் கொள்ள...



பல்லாண்டு கால நன்மைகளை வெறும் முப்பது நாட்களில் அடைந்து கொள்வதற்கான சிறந்த சந்தர்ப்பமாக ரமழான் மாதம் அமைந்துள்ளது. அதில் லைலத்துல் கத்ர் என்ற ஆயிரம் மாதங்களை விடவும் மேலான இரவு அமைந்திருக்கிறது. அதனால் இம் மாதம் உரிய ஒழுங்கில் உச்சளவில் பயன்படுத்திக் கொள்வது இன்றியமையாததாகும்.

ரமழான் என்பது இஸ்லாத்தை சுமந்துள்ள பிரதான தூண்களில் ஒன்றாகும். அந்த தூணின் வகிபாகம் மாகோன்னதமானது.

என்றாலும் அல்லாஹ்வின் எதிர்பார்ப்புக்கும் நபி(ஸல்) அவர்களின் வழிகாட்டல்களுக்கும் அமைய ரமழான் அமையாவிட்டால் இஸ்லாம் எனும் பிரமாண்டமான கட்டிடம் சரிந்து முழுமையாக அழிந்து போய்விடும்.

அதனால், இது எனது இறுதி ரமழான் என்ற மனநிலையை ஒவ்வொரு தனிநபரும் தம்மில் வளர்த்துக்கொள்வது மிகவும் அவசியம். அதன் ஊடாக எமது கடமையான தொழுகைகள் அனைத்தையும் மஸ்ஜிதில் நிறைவேற்றுவேன் என்று திட உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஒரு தடவை நபி (ஸல்) அவர்கள், 'தனித்து தொழுவதை விட கூட்டாகத் தொழுவது 27 மடங்கு மேலானது என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம் புஹாரி)

அதனால் கடமையான ஒவ்வொரு தொழுகையையும் உரிய நேர காலத்தில் மஸ்ஜித்தில் கூட்டாக நிறைவேற்றுவதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

ஒருவர் தான் நேசிப்பவரையும் அன்பு கொண்டவரையும் நேசிக்கும் போது அளவு கடந்த மகிழ்ச்சியடைவார். இது மனித இயல்பு.

அதேபோன்று இப்போது எம்மை வந்தடைந்துள்ள ரமழானையும் நோக்க வேண்டும். ரமழான் நோன்பையிட்டு நாம் அளவு கடந்து மகிழ்ச்சியடைய வேண்டும். நோன்பு நோற்று இறைவணக்கங்களில் ஈடுபட வேண்டும். அது அல்லாஹ்வுடனான நெருக்கத்தையும் இறை அருளையும் பெற்றுத்தர வழி வகுக்கும்.

தொகுப்பு: பாத்திமா அஸ்கா...

## உலகில் நம்பிக்கையூட்டக்... (03 ஆம் பக்கத் தொடர்)

திறைசேரியின் பிரதிச் செயலாளருமே கடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட அனுமதி அளிக்கப்பட்டது. இக் கடன் திட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தினால் பல ஒப்பந்தங்கள் விதிமுறைகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்த நாட்டில் வாழும் மக்கள் நமது எதிர்காலச் சமூகத்துக்காக சில விட்டுக்கொடுப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டும். தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த ஒரு வருடமாக கடன் தொடர்பில் உலகின் பல்வேறு நாட்டின் தலைவர்களுடன் பல நிறுவனங்களுடன் 16 முறைகள் பேசியுள்ளார். அதன் பயனாக அவர் நற்பெயரையும் பெற்றுள்ளார். இதன் பயனாக எமது நாட்டை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய சந்தர்ப்பத்தை ஜனாதிபதி ஏற்படுத்தியுள்ளார். கடந்த ஒரு வருடத்தில் சில பொருட்கள் வரி விதிப்புக்கள், விலையேற்றம், பணவீக்கம் சில பொருட்களை, இறக்குமதி செய்வதில் தடைவிதிப்பு போன்ற நிதி முகாமைத்துவத்திலேயே நாம், இந்த நிலைக்கு வந்துள்ளோம்.

## துறைசார்...

(03 ஆம் பக்கத் தொடர்)

பாராளுமன்ற உறுப்பினர் வலித் வர்ணகுமார, நாட்டை அபிவிருத்தி செய்வதில் இந்தத் துறைசார் மேற்பார்வைக் குழுவுடன் சம்பந்தப்பட்ட துறையில் முழுமையான பங்களிப்பை வழங்க எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார். இக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சஞ்சீவ எதிரிமான்ன, நிபுண ரணவக்க மற்றும் ஜகத் சமரவிக்ரம ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ரமழானின் மகிமை... (03 ஆம் பக்கத் தொடர்)

அல்லாஹுதஆலா எந்த நோக்கங்களையும் அருள்களையும் நாம் அடைந்துகொள்ள வேண்டும் என்பதற்காக நோன்பை எமக்குக் கடமையாக்கினானோ அவற்றை அடைந்து அவனுடைய ரஹ்மத்தையும் பாவ மன்னிப்பையும் நரக விடுதலையையும் லைலத்துல் கத்ர் இரவையும் அடைந்த கூட்டத்தில் நம்மனைவரையும் சேர்த்து நல்லருள் புரியட்டும் என அச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## நலிவுற்றுள்ள... (03 ஆம் பக்கத் தொடர்)

500 பெண்கள் தலைமையிலான நுண் நிறுவனங்களுக்கும், வறுமை மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டின் அபாயத்திலுள்ள 2,000 நபர்களுக்கும் மேலும் ஆதரவளிக்கும்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவரானH.E. MIZUKOSHI Hideakiவலியுறுத்துகையில்: "தற்போதுள்ள நெருக்கடிக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடிய பெண்கள் மற்றும் பெண் பிள்ளைகள் பதிலளிப்பு மற்றும் மீட்பு முயற்சிகளில் பின்தள்ளிவிடப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதுடன்இந்த நேரத்தில் அவர்களின் பாதுகாப்பு மற்றும் பந்தோபஸ்திற்கு முன்னுரிமை அளிக்கப்படுவதை உறுதி செய்வதே எங்கள் இலக்காகும்" என்றார்.

## மன்னாரில் எலி... (03 ஆம் பக்கத் தொடர்)

தொடர்பாகவும் உணவுகளின் மேல் எலிகள் பாய்ந்து ஓடும் வீடியோ காணொளியை மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துக்கு பாவனையாளர் ஒருவரால் அனுப்பப்பட்டுள்ளது. அதற்கமைவாக மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மன்னார் சுகாதார வைத்திய அதிகாரிக்கு விடுக்கப்பட்ட பணிப்புரையின் பேரில் உணவு கையாளும் நிறுவனம் ஒன்று (21) மன்னார் பொது சுகாதார பரிசோதகர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன் போது சுகாதாரமற்ற முறையில் மனித நுகர்வுக்கு பொருத்தமற்ற எலி மொய்த்த உணவுகளை களஞ்சியப்படுத்தியும் விற்பனைக்காக வெளிக்காட்டியும் வைத்திருந்தமை கண்டறியப்பட்டது.

## அமைச்சர் டக்ளஸ்... (03 ஆம் பக்கத் தொடர்)

தேக்க நிலை தொடர்பாகவும், கலந்துரையாடப்பட்டது. அத்துடன் பேருவளை,மருதானை பகுதியில் இடம்பெறும் கடல்மணல் அகழ்வுப்பணியின்போது கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விதத்தில் மீன்பிடித் துறைமுக அபிவிருத்தி பணிப்பாளர் மற்றும் கடற்றொழிலாளர்சங்கப்பிரதிநிதிகளையும் இணைத்துக்கொள்ள வேண்டுமெனவும் விரைவில் அதுகுறித்து விரிவாக கலந்துரையாடப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர் பியால் நிஷாந்த, அமைச்சின் செயலாளர் மற்றும் திணைக்களத் தலைவர் மற்றும் பணிப்பாளர்களும் கலந்துகொண்டனர்.

## சர்வதேச நாணய... (03 ஆம் பக்கத் தொடர்)

16 தடவை ஐ.எம்.எப் ற்கு இலங்கை சென்றிருந்தாலும் கூட இந்த தடவை மிக மோசமான சூழ்நிலையிலேயே இலங்கை அதனை நாடியது.

ஐ.எம்.எப் சொல்கின்ற விடயங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டிய அதேவேளை ஊழலுக்கு எதிரான விடயங்களையும் மேற்கொள்ள வேண்டும் என ஐ.எம்.எப் சொல்கிறது. அதற்காக ஒரு குழுவை நியமித்து செயல்படுத்தப் போவதாக ஜனாதிபதி தமது உரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நாட்டில் ஊழல் மலிந்ததன் காரணத்தினாலேயே பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.ஆகவே ஊழலுக்கு எதிரான நடவடிக்கையை முதலில் முன்னெடுப்பது அவசியம். நாட்டை கட்டியெழுப்புவதற்கு அதுதான் சிறந்தது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## IMFஇன் உதவி...

எப்படியாவது அதில் முழுமையான வெற்றியைக் காண வேண்டும். சில ஊடகங்கள் சர்வதேச நாணயத் திடம் நாம் பெறும் கடன் தொடர்பாக எதிர்மறையான கருத்துக்களை வெளியிடுகின்றன. அது ஆரோக்கியமானது இல்லை. நாட்டிற்கு நன்மை தரும் இந்த விடயத்திற்கு அனைத்து ஊடகங்களும் பேதங்களை மறந்து தமது ஆதரவை வழங்க வேண்டும் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அங்கு கூடி இருந்த ஊடக நிறுவன பிரதானிகளிடம் வேண்டுகோள் விடுத்தார். இதுவரை காலமும் நாங்கள் கடந்த கால கசப்பான செயற்பாடுகளை மறந்து விட வேண்டும். இனியும் விதண்டாவாதம் பேசாது அடுத்த கட்ட ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் இறங்க வேண்டும் என்றம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கு சட்டரீதியான அவசியமில்லாத போதிலும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு பாராளுமன்றத்தின் அனுமதியையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளவுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

## கொழும்பில் நாளை...

இரவு 9 மணிவரை இவ்வாறு நீர் வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

அதன்படி, கொழும்பு, தெஹிவளை கல்கிசை, கோட்டே, கடுவெல மாநகர சபைகளுக்கு உட்பட்ட பிரதேசங்களிலும், மஹரகம, பொரலஸ்கமுவ, கொலன்னாவ நகர சபைகள் மற்றும் கொட்டிகாவத்தை முல்லேரியா, இரத்மலானை மற்றும் கட்டுபெத்த ஆகிய நகரங்களிலும் நீர் விநியோகம் தடைப்படவுள்ளதாக நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை அறிவித்துள்ளது.

## பிரதமர் மோடி குறித்து...

அளிக்கப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டமொன்றில் இந்தியப் பிரதமர் மோடி குறித்து அவதூறாக பேசியதாக முன்னாள் அமைச்சரும் தற்போதைய பாஜக எம்.பியுமான புர்னேஷ் மோடி தொடந்த வழக்கில் குஜராத் மாநிலம் சூரத் மாவட்ட நீதிமன்றம் இந்த தீர்ப்பை வழங்கியுள்ளது. இத் தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஏதுவாக ராகுல் காந்திக்கு உடனடியாக பிணை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## பயங்கரவாத தடைச்...

நீக்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது இந்த சட்டமூலத்தை தயாரிப்பதன் நோக்கமாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கு நிவாரண...

கீழ் இந்த நிவாரண நிதி கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கமைய 06 மாவட்டங்களிலுள்ள குறைந்த வருமானம் பெறும் 48,000 விவசாய குடும்பங்களுக்கு இரண்டு தவணைகளில் தலா 15,000 ரூபாய் வழங்கடவுள்ளதாகவும் விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, ஆகிய மாவட்டங்களில் ஒரு ஏக்கருக்கும் குறைவான விவசாய நிலங்களை கொண்ட நெற்செய்கையாளர்கள் இந்த திட்டத்துக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர்.

## இந்திய மீனவர்கள்...

கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் , அவர்களின் இரு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

புதுக்கோட்டை மாவட்டம் ஜெகதாப்பட்டினம் பகுதியை சேர்ந்த 12 கடற்தொழிலாளர்களும் நேற்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை நெடுந்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன் பிடியில் ஈடுபட்டிருந்த போது , கடற்படையினர் கைது செய்து அவர்களை மயிலிட்டி துறைமுகத்தில் தடுத்து வைத்துள்ளனர். மேலதிக சட்ட நடவடிக்கைக்காக 12 கடற்தொழிலாளர்களும் கடற்தொழில் நீரியல் வளத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டு , அவர்கள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## IMF வழங்கிய அங்கீகாரம் ...

எதிர்பாராத விதத்தில் பொருளாதார நெருக்கடியில் சிக்குண்டு இலங்கையிலுள்ள மக்களுக்கு ஒரு பெரும் இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டது .இப்போது எரிபொருளுக்கு நீண்ட வரிசை இல்லை, சமையல் எரிவாயுவுக்கு நீண்ட வரிசை இல்லை இவ்வாறு அடிப்படைத் தேவைகளை படிப்படியாக ஜனாதிபதியின் கடும் முயற்சியின் காரணமாக இவை தீர்க்கக் கூடிய நிலைக்கு வந்துள்ளது.

அதேவேளை தற்போதுள்ள அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றங்களும் நிச்சயமாக குறையும் என்பதில் ஐயமில்லை. அதேபோன்று டொலரின் வீழ்ச்சியும் இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பும் நிச்சயமாக இலங்கை வாழ் மக்களுக்கு பொருளாதாரத்திலிருந்து மீண்டு வர வழிவகுக்கும் என்பதில் ஐயமில்லை. இந்த வகையில் சர்வதேச இந்து மதபீடம், ஜனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் வாழ்த்துக்களை தெரிவித்து, தொடர்ந்தும் ஜனாதிபதியின் அனைத்து முயற்சிகளுக்கும் மக்கள் ஆதரவளித்து இந்த நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு பாடுபட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## மாணவர்களை சில குழுக்களால்...

அத்தியாவசிய சேவையாக மாற்றுவதற்கான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நேரிடுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கொழும்பு சங்கமித்தா மகளிர் கல்லூரியில் நேற்று (23) நடைபெற்ற பிரிவெனா மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைத் துணிகள் வழங்கும் தேசிய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் மாணவத் தேரர்கள், சில் மாதர்கள் மற்றும் 40 மாணவர்களுக்கு ஜனாதிபதி அடையாள ரீதியாக பாடப் புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கினார்.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த், பதில் கல்விச் செயலாளர் ஹேமந்த பிரேமதிலக மற்றும் சங்கமித்தா மகளிர் கல்லூரியின் அதிபர் துஷாரி டி சில்வா ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களுக்கு நினைவுப் பரிசும் வழங்கினார்.

2023 ஆம் ஆண்டிற்கான பாடசாலை சீருடை துணிகளில் 70% வீதமானவை, சீன அரசாங்கத்திடம் இருந்து நன்கொடையாக கிடைத்துள்ளதுடன், அவை அனைத்தும் தற்போது நாடு முழுவதும் விநியோகிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு வர்த்தகர்களால் எஞ்சிய சீருடை துணிகள் வழங்கப்படுகின்றன. இந்தியக் கடன் உதவியின் கீழ் மூலப் பொருட்களைப் பெற்று அரச அச்சகக் கூட்டுத்தாபனம் மற்றும் உள்நாட்டு விநியோகஸ்தர்களால் அச்சிடப்பட்ட பாடசாலைப் பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அவை உத்தியோகபூர்வமாக இதன் போது விநியோகிக்கப்பட்டன.

அரச பாடசாலைகள் மற்றும் அரச உதவி பெறும் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும், பிரிவெனாக்களில் படிக்கும் தேரர்களுக்கும் இந்த சீருடைத் துணிகள் மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்கப்படுகிறது.

கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம்ஜயந்த், பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜித பேருகொட, கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார், உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன், மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் த எயார்போர்ஸ் ரொஷான் குணதிலக்க, பாராளுமன்ற உறுப்பினர் யதாமணீ குணவர்த்தன, மேல்மாகாண செயலாளர் பிரதீப் யசரத்ன, கல்வி அமைச்சின் பதில் செயலாளர் ஹேமந்த பிரேமதிலக்க, கல்வி வெளியீட்டு ஆணையாளர் இசட். தாஜுதீன் மற்றும் கல்வி மற்றும் துறைசார் அமைச்சுகளின் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வாய்ப்புக்களை பயன்படுத்தி...

வேண்டுகோளை அனைவரும் ஏற்றுக்கொண்டு செயற்பட வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துவதாகவும் அவர் தெரிவித்தார். சில தரப்பினரால் முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் முற்றிலும் தவறானது என்பதுடன் அது பொய்யாகியுமுள்ளது என குறிப்பிட்ட பிரதமர்,

நெருக்கடியான நிலையிலிருந்து மீள்வதற்கான கதவு திறக்கப்பட்டுள்ளது என்றும் இது பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமானதல்ல நாட்டு மக்கள் அனைவருக்குமான வாய்ப்பாகும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பில் நேற்று முன் தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபையில் ஆற்றிய விசேட உரை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் நேற்று இரண்டாவது நாளாகவும் நடைபெற்றது. அந்த விவாதத்தில் உரையாற்றும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

எமது நாட்டுக்கு அன்னிய செலாவணியைக் கொண்டுவருபவர்களுக்கும் ஏற்றுமதி துறையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் நாம் கூறுவது தற்போதைய நிலையில் அதிகமாக அதனைக் கொண்டு வருவதற்கு செயற்படுங்கள் என்பதே. கடந்த ஆறு மாதங்களில் எமக்கு அந்நிய செலாவணியாக 359 மில்லியன் டொலர்கள் கிடைத்துள்ளன. அதனை மேலும் அதிகரிக்கச் செய்யுமாறு நாம் அவர்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான அனைத்து விடயங்களும் ஜனாதிபதியினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதனை நாம் வரவேற்கின்றோம். நெருக்கடியான, கடினமான நிலையில் நாடு தள்ளப்பட்டிருந்த காலகட்டத்தில் அதிலிருந்து மீள்வதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் ஊடாக எமக்கு கதவு திறக்கப்பட்டுள்ளது.

190 நாடுகள் சர்வதேச நாணய நிதியத்தின் உறுப்புரிமையைப் பெற்றுள்ளது. அந்த நாடுகள் பல்வேறு கஷ்ட நேரங்களிலும் அதன் உதவிகளை பெற்றுக்கொள்ள முடியும். இதன்படி எமது தெற்காசிய நாடுகளிலும் பல நாடுகள் அவ்வாறான உதவிகளை பெற்றுள்ளன.

கடந்த 7 மாதங்களாக நாடு மிக நெருக்கடியான நிலையை சந்தித்தது. எனினும் அவ்வாறான கடினமான காலத்திலும் நாம் எந்தவொரு அரசாங்க ஊழியரையும் பணியில் இருந்து நிறுத்தவில்லை.

அவர்களின் தொழில்களை பாதுகாக்க தேவையான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்.

அந்நிய செலாவணி தற்போது அதிகரித்து வருகின்றது. சுற்றுலாத்துறையினரின் வருகையும் அதிகரித்து வருகின்றது. இதன்மூலம் எமது நிதி இருப்பை அதிகரித்துக்கொள்ளவும், அதனுடன் தொடர்புடைய மக்களுக்கான வருமான அதிகரிப்பும் உருவாகும்.

அதேவேளை, சம்பள அதிகரிப்புக்களை மேற்கொள்ள முடியுமான சந்தர்ப்பத்தில் அதனை மேற்கொள்ள முடியும் என ஜனாதிபதி தமதுரையில் குறிப்பிட்டிருந்தார். நெருக்கடியான நிலையில் இருந்து மீண்டு வருகின்றோம்.

தற்போது திறக்கப்பட்டுள்ள புதிய கதவை வெற்றிகரமானதாக முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த சந்தர்ப்பத்தை அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## IMF ஒத்துழைப்பு நாட்டுக்கான...

இடம்பெற்றுள்ளதாகவும் அவர் சபையில் தெரிவித்தார். அது தொடர்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்:

வேண்டுமென தெரிவித்த அவர், எமது ஏற்றுமதி பொருளாதாரம் அதிகரிக்கப்பட வேண்டும் என்றும் சபையில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி உட்பட ஏனைய நிதி நிறுவனங்கள், நாடுகளிடமிருந்து மொத்தமாக 07 பில்லியன் அமெரிக்கன் டொலர்களை கடனாக பெற்றுக்கொள்ள முடியுமென்ற தகவலை ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இந்த கடன்கள் தொடர்பில் எவரும் வெற்றி க்களிப்பில் மயங்கி விடக்கூடாது. நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு மூச்செடுக்கக்கூடிய சந்தர்ப்பமாக மட்டுமே இதனை எடுத்துக் கொள்ள வேண்டும். அதைவிடுத்து இதை முழுமையான விடியலென நாம் எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கை தொடர்பில் நேற்று முன் தினம் ஜனாதிபதி ஆற்றிய விசேட உரை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

மூன்று தசாப்த யுத்தம், கொரோனா, அதனையடுத்து பொருளாதார நெருக்கடி ரஷ்யா உக்ரைன் யுத்தம் என பல்வேறு பாதிப்புகளை நாடு எதிர்கொண்டதை அனைவரும் அறிவோம். உரிமை போராட்டமானது இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்குப் பின்னர் அழிவு போராட்டமாக உருவெடுத்தது. அந்த அழிவுப் போராட்டம் எமது மக்களின் சொத்துக்களையும் வளங்களையும் அளித்து விடுவதோடு எம்மையே அழித்துவிடும் என்ற தூர நோக்குடன் வன்முறைக்கூடாக எம்மால் எதையும் சாதிக்க முடியாது என்ற நிலையில் பேச்சுவார்த்தைக் கூடாகவே பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியுமென நான் வெளிப்படையாகவே அறிவித்திருந்தேன்.

சொற்படி கேளாதவர்களாக, அவர்கள் எனது கருத்துக்களை அறிந்தும் அறியாதவர்களாக அரசியல் நடத்தி எமது மக்களின் அழிவுக்கு வழி வகுத்தனர். வன்முறை வழியிலேயே தொடர்ந்தும் செயற்பட்டனர்.

இதற்கு குரல் எழுப்பியும் மௌனமாகவும் ஆதரவளித்த சக தமிழ் அரசியல்வாதிகளே பொறுப்புக் கூற வேண்டும்.

## எத்தகைய போராட்டங்களுக்கும்...

ஈடுபடும் தொழிற்சங்கங்கத் தலைவர்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதை அரசாங்க ஊழியர்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். போராட்டங்களை மேற்கொண்டு அரச வருமானத்தை பாதிப்புக்குள்ளாக்கியுள்ளோம் என தம்பட்டம் அடிக்கும் தொழிற்சங்க தலைவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

எத்தகைய எதிர்ப்புகள் வந்தாலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், மின்சார சபை,ஸ்ரீ லங்கன் எயார் லைன் நிறுவனம்,டெலிகொம் நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்கள் மறுசீரமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான உடன்படிக்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன் தினம் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை மீதான இரண்டாம் நாள் விவாதம் நேற்று இடம்பெற்றது. அந்த விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்: முன்னாள் ஜனாதிபதி கோட்டபய ராஜபக்ஷ ஜனநாயகத்துக்கு மதிப்பளித்து அரசியல் முறைமைகளுக்கு அமையவே அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு பிரதான எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார். எனினும் அப்போது சவால்களை பொறுப்பேற்கும் துணிச்சல் எதிர்க்கட்சிகளுக்கு இருக்கவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எமக்குமிடையில் அரசியல், கொள்கை ரீதியில் வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவர் நாட்டுக்காக பாரதூரமான சவால்களை பொறுப்பேற்றார். அந்த வகையில் நாடு தற்போது பாரிய நெருக்கடியிலிருந்து மீண்டுள்ளது. அத்தியாவசிய சேவைகளை தடையின்றி மேற்கொள்வதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானங்களை சர்வதேச நாணய நிதியம் உட்பட சர்வதேசம் வரவேற்றுள்ளது.

## IMF உதவிக்கு எதிராக...

நேற்று முன்தினம் இரவு கொழும்பு கிளப் ஹோட்டலிலேயே எதிர்க்கட்சியினர் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். அதன் போதே சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்பை தாமதப்படுத்துமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். இல்லாவிட்டால் கடும் நிபந்தனைகளை அதற்காக விதிக்குமாறு அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர் என்பதாகவே தமக்கு தகவல் கிடைத்ததாக அமைச்சர் தெரிவித்தார்.

அதன் போது குறிப்பிட்ட, எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல: எதிர்க்கட்சியினர் வெளிநாட்டுத் தூதுவர்களை சந்தித்துப் பேசியது உண்மையே. எனினும் உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதன் அவசியம் தொடர்பிலேயே அங்கு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது என்றும் தெரிவித்தார்.

அதன் போது குறிப்பிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அவ்வாறு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டிருந்தால் அதனை சபைக்கு தெரிவித்திருக்கலாமே என கேள்வி எழுப்பினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மட்டுமின்றி கடந்த நல்லாட்சி அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலையும் ஒத்திப் போட்டது. இந்த இரண்டு தேர்தல்களுமே நடத்தப்பட்டால் நல்லது தான் என்றும் இதன் போது அமைச்சர் தெரிவித்தார்.

## அடுத்த தேர்தலின் பின்னரான...

தொடர்ந்தும் உரையாற்றிய மனோ கணேசன் எம்பி மேலும் கூறுகையில்,

நமக்கு இந்நாட்டில் ஜனாதிபதி ஆக முடியாது. பிரதமர் ஆக முடியாது. சட்டத்தில் தடை இல்லை. ஆனால், நடைமுறையில் அந்த உரிமை எமக்கு மறுக்கப்பட்டுள்ளது. ஆகவே அரசாங்கங்களில் பலமான பங்காளியாக இருக்கும் உரிமையை நாம் பயன்படுத்துவோம். அதன் மூலமே நாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களுக்கு நாம் பணியாற்ற முடியும்.

இதுவே ஜனநாயக மக்கள் முன்னணியின் நிலைப்பாடு. எமது தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடு. நாம் இடம்பெறும் எமது அரசாங்கம் எதுவென நாம் உரிய வேளையில் தீர்மானிப்போம்.

இன்றைய அரசில் இணைந்து உடனடியாக பதவி பிரமாணங்களை செய்து பதவி ஏற்க எமக்கு முடியும். அதற்கான திறந்த அழைப்பு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமிருந்து, எமக்கு எப்போதும் இருக்கிறது. ஜனாதிபதி விக்கிரமசிங்கவை அணுக எனக்கு தரகர் தேவையில்லை. ஒரு தொலைபேசி அழைப்பு போதும். ஆனால், இன்று அரசில் நுழைந்து அமைச்சராக ஊர்வலம் வருவதில் எமக்கு நாட்டம் இல்லை. கடந்த 2015/2019 நல்லாட்சி அரசில் நாம் பலத்த சவால்களுக்கு மத்தியில் பல அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தோம். அதற்கு முன் 40 ஆண்டுகளில் மலையகத்தில் நடைபெறாத அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்தோம். சொந்த காணி, தனி வீட்டு திட்டத்தை அமைச்சரவை அங்கீகார சட்ட வலுவுடன் ஆரம்பித்து வைத்தோம். மலையகத்துக்கு இந்திய பிரதமர் மோடியை அழைத்து வந்து அவர் வாயிலிருந்து மேலும் 10,000 வீடுகளுக்கான உறுதிமொழியை பெற்றோம். அன்று நாம் ஆரம்பித்த திட்டங்களை, இன்று அங்கே முன்னேடுத்தாலே போதும். புதிதாக வேறு ஒன்றும் செய்ய தேவையில்லை.

## உள்ளூராட்சி சபைத் தேர்தல் ...

தீர்மானம் எடுக்கப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க மேலும் தெரிவித்துள்ளார்.

இந்தக் கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட 4 முக்கிய தீர்மானங்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் ஏப்ரல் 25ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த முடியாது என்பதால் , உறுதியான தினமொன்றை நியமித்து அதுவரை தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு ஆரம்பத்திலேயே தேர்தலுக்கான தினத்தை தீர்மானிக்காது, தேர்தலை நடத்துவதற்கான வசதிகள் மற்றும் சூழல் தொடர்பில் சகல தரப்பினருடனும் கலந்துரையாடி இறுதியாக தினத்தை அறிவிப்பதற்கும் இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்ட தினத்தில் நடத்துவது தொடர்பில் தற்போது நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள இடைக்கால தடையுத்தரவின் அடிப்படையில், தேர்தல் காலம் தாமதப்படுத்தப்படுகின்றமை தொடர்பில் சட்ட ரீதியான சிக்கல்கள் காணப்படுகின்றமையால் எவ்வழியிலேனும் தேர்தலை நடத்துவது தொடர்பில் நிறைவேற்றதிகாரம் , சட்டவாக்கசபை மற்றும் ஏனைய தரப்பினருடன் கலந்துரையாடி அதனூடாக எட்டப்படும் இணக்கப்பாட்டுக்கமைய தேர்தலுக்கான புதிய தினம் தீர்மானிக்கப்படும்.

இவ்வனைத்து காரணிகளுடன் தேர்தலை நடத்துவதற்கான சட்டம் தொடர்பிலும் கவனம் செலுத்தி, தேர்தலுக்கான தினத்தை இனிவரும் நாட்களில் ஆணைக்குழு தீர்மானிக்கும்.

அதற்கமைய ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்தப்படவிருந்து உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்கெடுப்புக்கள் இம்மாதம் 28, 29, 30, 31 மற்றும் ஏப்ரல் 03ஆம் திகதிகளில் இடம்பெறாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனங்களுக்கிடையில் குரோத கருத்துகளை முன்வைப்பதை எதிர்க்கட்சிகள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



நாட்டை பொருளாதாரத்தில் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு எதிர்க்கட்சியினர் தமது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என முஷாரப் எம்பி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இனங்களுக்கிடையில் குரோதங்களை ஏற்படுத்தும் வகையில் கருத்துக்களை முன்வைப்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் சபையில் ஆற்றிய உரை மீதான விவாதத்தில் நேற்றைய தினம் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

ஜனரஞ்சகமற்ற தீர்மானங்களை மேற்கொள்ள இந்த நாட்டின் தலைவர்கள் முன் வந்தால் மாத்திரமே நாட்டை முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்ல முடியும் என நான் ஏற்கனவே பலமுறை கூறியுள்ளேன். அவ்வாறு ஜனரஞ்சகமற்ற தீர்மானங்களை அன்றும் இன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்து வருவதால்தான் எதிர்காலத்தின் நம்பிக்கை தொடர்பில் நாம் சிந்திக்க முடிகிறது.

எதிர்காலம் தொடர்பிலான ஒரு திட்டவட்டமான வரைவு நம் கண்களுக்கு இப்போது தோன்றியுள்ளது. தேர்தலை மையமாக வைத்து அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு பழிச்சொற்கள் முன்வைக்கப்பட்ட போதும் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தொடர்பில் மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. கட்சியினர் செயற்படுவதைப் பார்க்க கவலையாக உள்ளது. இன்னும் கூட அவர்கள், நாங்கள்தான் சர்வதேச நாணய நிதியத்திற்கு போகச் சொன்னோம் என்றும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிவிட்டு முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஓடி விட்டார் என்றும் மீண்டும் மீண்டும் பழைய பல்லவியையே பாடி வருகின்றனர். அந்த வகையில் எதிர்க்கட்சியினருக்கு மாத்திரம் ஒரு நாளை ஒதுக்கி அவர்களின் ஆதங்கத்தை எல்லாம் கொட்டித் தீர்க்கும் வகையில் காலத்தை வழங்குமாறு நான் ஒரு வேண்டுகோளை இந்த சபைக்கு முன் வைக்கின்றேன். அதற்குப் பின்னர் இந்த பழைய பல்லவிகளையே பேசுவதை மாற்றி அவர்கள் புதிய விடயங்களைப் பற்றி பேசுவதற்கான அவகாசத்தை அவர்களுக்கு கொடுக்க முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஜனாதிபதியுடன் கலாநிதி பால் தினகரன் சந்திப்பு



இந்தியாவின் காருண்யா பல்கலைக்கழகத்தின் வேந்தரும், இயேசு அழைக்கிறார் மற்றும் 'சீஷா மனிதாபிமான தொண்டு நிறுவனத்தின் நிறுவனருமான கலாநிதி பால் தினகரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை அவரது இல்லத்தில் புதன் கிழமை (22) சந்தித்து பிரார்த்தனை கைசின்னத்தை வழங்கி தேசத்தின் நெருக்கடி நிலை மாறி நன்மை உண்டாக பிரார்த்தனை செய்தார். அவரோடு அவரது குமாரன் சகோதரர் சாமுவேல் தினகரன் ஜனாதிபதி சந்தித்தார்.

மனித நல்வாழ்வுக்காக 24 மணி நேரமும் இயங்கும் 115 பிரார்த்தனை கோபுரங்களை, இயேசு அழைக்கிறார் நிறுவனம் நடத்துகிறது. இதனால் ஜாதி இன மத வேறபாடின்றி உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பலன் அடைந்து வருகிறார்கள்.

இலங்கையிலும் 4 பிரார்த்தனை கோபுரங்கள் கொழும்பு, மட்டக்குளி, பம்பலப்பிட்டி, யாழ்ப்பாணம் மற்றும் கண்டியிலும் உள்ளது.

கலாநிதி பால் தினகரன் இலங்கை நாட்டின் மீது கடவுளின் ஆசீர்வாதங்கள் பெருகும் என்றும், உலகம் முழுவதும் உள்ள பல நாடுகளின் பங்கேற்புடன் இலங்கையின் வளம் பெருத்த வளர்ச்சி அடையும் என்று டாக்டர் பால் தினகரன் ஜெபித்த பின் உறுதியளித்தார்.

# மருதானை டவர் மண்டபத்தில் ஜாதகப் பொருத்தம்

இலங்கையில் பல்வேறு மேடை நாடகங்களை மேடையேற்றி வெற்றி கண்ட ஓர் அமைப்பு வெள்ளி நிலா கலாலயம். இந்த அமைப்பை அமைத்து பல மேடை நாடகங்களை தயாரித்து, இயக்கி, நடித்து, மேடை ஏற்றி வெற்றி கண்ட தம்பதிகள் ஆர். ராஜசேகரன், ஹெலன்குமாரி தம்பதிகள். இவ்வாறு மேடை நாடகங்கள் பல மேடை ஏற்றி வெற்றி கண்ட தம்பதிகள் நடிக்கும் நாடகம் ஒன்று எதிர்வரும் 31ஆம் திகதி பிற்பகல் 3.30, மாலை 6.30 மணிக்கு கொழும்பு மருதானை டவர் மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

இயக்குநரும் இசையமைப்பாளருமான டொக்டர் ஷெல்டன் மிதுன்குலசூரியவின் இதே நாடகம் சிங்கள மொழியில் எதிர்வரும் 29, 30 ஆம் திகதிகளில் இதே மண்டபத்தில் மேடையேற்றப்படும். ஜாதகப் பொருத்தம் என்ற இந்த நாடகத்தில் ஆர். ராஜசேகரன், ஹெலன்குமாரி, சாந்தி பானுஷா, மல்லிகா கீர்த்தி, சுதாகர், ஆர். கணேஸ், ஆர். சசிகுமார், பொன். பத்மநாதன், எஸ். சரவணா, சுதாகர், வீரபுஷ்பநாதன், ஐ .ஜே .ஜேசுதாசன், கே. ஈஸ்வரலிங்கம் ஆகியோர் நடிக்கவுள்ளனர். இந்த நாடகத்துக்கு இயக்குநரும் இசையமைப்பாளருமான டொக்டர் ஷெல்டன் மிதுன்குலசூரிய இயக்கி தயாரிக்கவுள்ளார்.

## ஸ்ரீ கொடுங்கல்லூர் பகவதி அம்மன் ஆலயம் கொடியேற்றம்



கொழும்பு 15, மட்டக்குளிய, ஸ்ரீ விக்ரமபுரயில் T/D/2 என்னும் இடத்தில் அமைந்துள்ள ஆலயம் ஸ்ரீ கொடுங்கல்லூர் பகவதி அம்மன் ஆலயம். மட்டக்குளி கல்யாணி கங்கைக்கரையில் மேற்குப் புறமாக வீற்றிருந்து அருள்பாலிக்கும் ஸ்ரீ கொடுங்கல்லூர் பகவதி அம்மன் ஆலயத்தின் கொடியேற்றம் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது. கொடியேற்றத்தைத் தொடர்ந்து கணபதி ஹோமம், சிறப்புப் பூஜைகளும் தொடர்ந்து 10 நாட்களுக்கு நடைபெறும் என ஆலயத்தின் அறங்காவலர் சபைத் தலைவர் எஸ். வி. விநோதன் தெரிவித்தார்.

# ஆசுகவி அன்புடீன் மறைவுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் அனுதாபம்

சந்தக் கவி பாடுவதில் மிகவும் ஆற்றல் மிக்கவராக போற்றப்பட்ட ஆசுகவி அன்புடீன் சிறுகதை, நாடகம் முதலான பல்வேறு படைப்பிலக்கியத் துறைகளிலும் சிறந்து விளங்கியதாக அவரது மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

நெஞ்சுக்கு நெருக்கமான நண்பரும் தமிழ் மொழி மூல வாசகர்களின் பேரன்பைப் பெற்றவருமான ஆசுகவி அன்புடீன் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த கவலையடைந்தேன்.

சந்தக் கவி பாடுவதில் மிகவும் ஆற்றல் மிக்கவராக இருந்த அவர், சிறுகதை, நாடகம் முதலான அனைத்து படைப்பிலக்கியத் துறைகளிலும் சிறந்து விளங்கினார். சொல்லழகும் ,எளிமையான நடையும் நிறைந்த அவரது ஆக்கங்கள் உள்நாட்டில் மட்டுமல்லாது, கடல் கடந்த நாடுகளிலும் கூட அவருக்கு ஏராளமான ரசிகர்களையும் வாசகர்களையும் பெற்றுக் கொடுத்தது.

ஆரம்ப காலங்களில் பாட்டாளி வர்க்கத்தினரின் விடுதலைக்காக இலக்கியங்களைப் படைத்துக் குவித்த அவர் ,ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்ட பின்னர் பெருந் தலைவர் அஷ்ரபின் முஸ்லிம் இனத்துவ அரசியலில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தார். அதனால், மர்ஹூம் அஷ்ரபின் அன்புக்கும் நெருக்கத்திற்கும் உரித்தானவராக அவர் திகழ்ந்தார்.

பிற்காலத்தில் நோய்வாய்ப் பட்டிருந்த நிலையிலும் அவரது இலக்கிய ஈடுபாடு குன்றிவிடவில்லை.

தென்கிழக்குப் பிராந்தியம் அவரை நன்றியுடன் கௌரவித்து, மலர் வெளியிட்டு மாபெரும் விழாவையும் எடுத்திருந்தது. குறித்த விழாவுக்கு என்னையே பிரதம அதிதியாக அழைக்கவேண்டும் என்பதிலும் அவர் அதிக கரிசனை கொண்டிருந்தார். அத்தகைய அன்பும் பண்பும் நிறைந்த ஓர் இலக்கிய நண்பரின் பிரிவு கண்களைக் குளமாக்குகின்றது.

இறைவன் அன்னாருக்கு ஜென்னத்துல் பிர்தௌஸுல் அஃலா என்ற மேலான சுவன பாக்கியத்தை வழங்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

# இரத்தினபுரி அல் மக்கியா மாணவி அம்ரா மின்சாரக் கருவியை கண்டுபிடித்து சாதனை

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**



இரத்தினபுரி அல் மக்கியா தேசிய பாடசாலையில் க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவு மாணவி எம்.ஏ.எப் அம்ரா செயலிழந்த பெற்றரிகளை மீண்டும் பயன்பாட்டிற்கு கொண்டு வரும், ஒரு புதிய கருவியை கண்டு பிடித்துள்ளார்.

பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற வர்த்தக கண்காட்சியின் போது இவர் தனது கண்டு பிடிப்பை அறிமுகப்படுத்தி கல்விக் காரியாலயங்கள், அதிகாரிகள் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் உட்பட அனைவரினதும் பாராட்டுக்களை இவர் பெற்றுள்ளார்.

இ/அல் மக்கியா தேசிய பாடசாலை அதிபர் எம்.எஸ்.எம் மில்ஹான், வர்த்தக பிரிவுக்கு பொறுப்பான ஆசிரியர் எம்.எம். எம் நுஸ்ஸாக் உட்பட தனது பெற்றோர்கள் நண்பர்கள் இதற்கான ஆலோசனை வழிகாட்டல்கள் மற்றும் உதவிகளை செய்ததாக இம்மாணவி தெரிவித்தார். ஏனைய மாணவர்களும் தமது செயற்பாடுகளை முன்வைத்த இச்செயலமர்வில் இம்மாணவியின் இக்கருவி உற்பத்திக்கு முதலிடம் கிடைத்தமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த கண்டுபிடிப்பை அகில இலங்கை ரீதியில் அறிமுகம் செய்ய அவசியமான உதவிகள் அனுசரணைகளை வழங்குவதாக இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பலாங்கொடை வலய கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இவ்வுற்பத்தி மூலம் நாம் பயன்படுத்தி செயலிழந்து காணப்படும் பற்றரிகளை மீள் பாவனைக்கு உட்படுத்தி மின்குமிழ் தொலைபேசி என்பவற்றை மின்னேற்றம் செய்யவும் முடியும்.

சூரிய கதிர்களை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் இக்கருவி மூலம் இக்காலத்திற்கு பொருளாதார நிலைமைக்குப் பொருத்தமான வகையில் மின்சார பாவனையை குறைத்து அதிகளவு பயன் தரக்கூடிய இக்கருவியை உற்பத்தி செய்து மலிவான விலையில் விநியோகம் செய்ய முடியும் எனவும் இதனை ஆரம்பக்கட்டமாக இரத்தினபுரி மாவட்டத்தில் அறிமுகம் செய்யப்பவுள்ளதாகவும் பொறுப்பாசிரியர் எம்.எம்.எம்.நுஸ்ஸாக் தெரிவித்தார்.

## இந்தியாவிலிருந்து... (03 ஆம் பக்கத் தொடர்)

மேற்கொள்வதற்காக மூன்று தினங்கள் எடுத்துக் கொள்ளப்படும் என தெரிவித்த அவர், அதனையடுத்து அதனை சந்தையில் விற்பனைக்கு விட வுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த ஏழு மாதங்களாக நாட்டில் நிலவிய முட்டைக்கான தட்டுப்பாடு மற்றும் விலை அதிகரிப்பு இதன் மூலம் நிவர்த்தி செய்யப்படும் என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில் ரோஹண பண்டார எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்:

நாட்டில் கடந்த ஏழு மாதங்களாக முட்டைக்கான தட்டுப்பாடு நிலவி வருகிறது. அதனைக் கவனத்திற் கொண்டு நாம் விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழ் வரும் நிறுவனங்களோடு பேச்சு வார்த்தை நடத்தினோம்.

அதன் போது அவர்கள் நாட்டிற்கு தேவையான முட்டையில் 40 வீத பற்றாக்குறை காணப்படுவதாக எமக்கு அறிவித்தனர்.

அதன் பின்னர் உணவு பாதுகாப்பு குழுவுக்கு அது அறிவிக்கப்பட்டு அதனை யடுத்து அமைச்சரவைக்கும் அது தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அதன் பின்னரே வர்த்தக அமைச்சர் என்ற வகையில் நான் கட்டுப்பாட்டு விலையை நிர்ணயம் செய்து முட்டையின் விலையை அதற்கு மேல் அதிகரிக்காமலிருக்க நடவடிக்கை எடுத்தேன்.

எவ்வாறெனினும் நாட்டின் முட்டைக்கான தேவையில் 40 வீத பற்றாக்குறை நிலவியதால் எதையும் முறையாக முன்னெடுக்க முடியாமல் போனது. அதன் பின்னரே நாம் முட்டையை கொல்வனவு செய்வது என கொள்கை ரீதியான முடிவை எடுத்தோம்.

அது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து அமைச்சரவை உப குழுக்கள் இரண்டு நியமிக்கப்பட்டு அதன் ஊடாக முட்டையை இறக்குமதி செய்வதே சிறந்தது என்ற பரிந்துரைகள் பெறப்பட்டன.

அதனையடுத்து நாம் முட்டை இறக்குமதிக்கான நடவடிக்கையை மேற்கொண்டு அதற்கிணங்க இன்று முதலாவது தொகை முட்டை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. அதனை பரிசோதனை செய்வதற்காக மூன்று தினங்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் கோரப்பட்டுள்ளது. உலகளாவிய ரீதியில் பாரிய முட்டை விற்பனையில் ஈடுபட்டுள்ள நிறுவனத்திடமிருந்தே இலங்கைக்கும் முட்டை பெறப்பட்டுள்ளது .உரிய சான்றிதழுடனேயே நாம் அதனை கொள்வனவு செய்கின்றோம். ஓரிரு தினங்களில் இந்த முட்டை சந்தைக்கு விற்பனைக்காக விடப்பட உள்ளது.

அதை வேளை, உலகில் முன்னணி நிறுவனம் ஒன்றிலிருந்து திரவ முட்டையை இறக்குமதி செய்ய உத்தேசித்துள்ளோம். திரவ முட்டை விமானங்களில் உணவு தயாரித்தல் உள்ளிட்ட பாரிய நட்சத்திர ஹோட்டல்களிலும் உபயோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதாகும். அதற்கான இறக்குமதி அனுமதியும் வழங்கியுள்ளோம். அந்த வகையில் இறக்குமதி செய்யும் முட்டைகள் 35 மற்றும் 40 ரூபாவுக்கிடையில் விற்பனை செய்யவும் அதே போன்று திரவ முட்டைகளையும் அதே விலைக்கு பெற்றுக் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளங்கள் அமைச்சின் அனுமதியும் அதற்காக பெற்றுக் கொள்ளப்பட்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அதனை இறக்குமதி செய்வதற்கான அனுமதியும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. திரவ முட்டையின் தரம் தொடர்பில் எவரும் சந்தேகம் கொள்ள தேவையில்லை. பண்டிகை காலங்களில் நாட்டில் முட்டைக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

தற்போதைய நிலையில் பாராளுமன்றத்தில் கூட முட்டை இல்லாத நிலையே காணப்படுகிறது. நாம் எப்போதும் எமது தேவைகளின் போது இந்தியாவையே பெருமளவு நாடியுள்ளோம். அந்த வகையில் அதிக முட்டை விற்பனை செய்யப்படும் நாடான இந்தியாவிலிருந்தே இந்த முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## Profit taking in Sri Lanka Telecom and Lanka Hospitals...

**Daily Market Watch**
23rd March 2023

Capital TRUST Research (Pvt) Ltd
A Capital TRUST Group Company
42, Sir Mohammed Macan Markar Mawatha, Colombo 3.
Hotline: 0705 666 777
WhatsApp: 0777 233 633

### Market Commentary

Sri Lanka Telecom and Lanka Hospitals continued to attract buying interest during the first half of trading and thereafter resulted in profit taking in those stocks. This in turn resulted in the stocks closing below the previous day's prices. Heavyweight Banking stocks recorded declines, exerting downward pressure on the All Share Price Index. Meanwhile, Treasury Bill rates across all tenors declined sharply at this week's treasury bill auction. We expect rates to decline further, which should have a positive impact on the stock market.


### Top Gainers and Losers (%)





### Market Performance

| | 23.03.2023 | 22.03.2023 | %Chg. |
|---|---|---|---|
| All Share Price Index | 9,396.0 | 9,527.1 | -1.38 |
| S&P SL 20 Index | 2,722.9 | 2,768.3 | -1.64 |
| Turnover (LKR mn) | 3,437.6 | 1,512.2 | 127.3 |
| Foreign Purchases (LKR mn) | 121.6 | 58.7 | 107.3 |
| Foreign Sales (LKR mn) | 419.8 | 23.2 | 1707.9 |
| Market Cap (LKR bn) | 3,988.0 | 4,025.8 | -0.9 |
| Market Cap (US$ bn) | 12.6 | 12.7 | -0.9 |
| Traded Companies | 245 | 249 | -1.6 |
| Market PER (x) | 5.1 | 5.2 | -1.0 |
| Price to Book (x) | 0.9 | 1.0 | -1.1 |
| Dividend Yield (%) | 4.0 | 3.9 | 1.0 |


### Relative Strength Index (RSI)




### Contributors to ASPI





### Turnover Breakdown




### Key Rates

| | 23.03.2023 |
|---|---|
| Prime Lending Rate (Avg. Weighted) | 22.74% |
| Fixed Deposit Rate (Avg. Weighted) | 19.23% |
| Treasury Bill Rate (364 Days) | 24.32% |
| Consumer Price Inflation - CCPI (YoY % change) | 50.60% |

### Market Benchmarks




### Largest Trades




### Corporate News

CASH DIVIDENDS
Kelani Valley Plantations PLC (KVAL) - LKR 3.00. XD date - 24.03.2023.
Hayleys Fabric PLC (MGT) - LKR 0.30. XD date - 24.03.2023.
Talawakelle Tea Estates PLC (TPL) - LKR 6.00. XD date - 24.03.2023.
Haycarb PLC (HAYC) - LKR 1.00. XD date - 24.03.2023.
Hayleys Fibre PLC (HEXP) - LKR 0.50. XD date - 24.03.2023.
Dipped Products PLC (DIPD) - LKR 0.60 . XD date - 24.03.2023.
Hayleys PLC (HAYL) - LKR 5.35. XD date - 24.03.2023.
Ceylon Tobacco Company PLC (CTC) - LKR 30.00 XD date - 31.03.2023.
Sampath Bank PLC (SAMP) - LKR 3.45. XD date - 31.03.2023.

SCRIP DIVIDENDS
Sampath Bank PLC (SAMP) - 1 share for 40.3989773996 Shares. XD date - 31.03.2023.
Commercial Bank of Ceylon PLC (COMB) - 1 share for 16.9934641119 Shares. XD date - 31.03.2023.
Hatton National Bank PLC (HNB) - 1 share for 23.5294128792 Shares. XD date - 31.03.2023.

*Disclaimer - The information contained in this material has not been independently verified. No representation or warranty express or implied is made as to, and no reliance should be placed on, the fairness, accuracy, completeness or correctness of the information or opinions contained herein and nothing in this presentation is, or shall be relied upon as, a promise or representation by the Company.*

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.03.22
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5067 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,102,160.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 8 2 8 1 8 4

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம் 3309 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,213,829.20
ஆங்கில எழுத்து I — வெற்றி இலக்கங்கள் 04 47 68 69

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 1522 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,137,385.20
வெற்றி இலக்கினம் மகரம் — வெற்றி இலக்கங்கள் 7 4 0 6 0 1

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 376 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 03 31 49 59 — விசேட இலக்கினம் மீனம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1415 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 309,653,362.00
ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 01 — வெற்றி இலக்கங்கள் 02 11 15 45
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1097 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 82,463,394.40
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 03 12 57 71



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I


1 மணித்தியாலம் 15 நிமிடம்

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**


1. தரப்பட்ட படத்துடன் தொடர்பற்ற சொற்கூட்டத்தைத் தெரிக.



i. பாலைவனம், பிரயாணம், மிருகம்
ii. பாலைவனம், பிரயாணம், வெயில்
iii. பிரயாணம், குளிர், வீதி


2. 


படத்தில் காட்டியவாறு சதுரமுகியொன்றினை வெட்டினால் பெறப்படும் முகத்தின் தோற்றமானது
i. சதுரம்
ii. செவ்வகம்
iii. வட்டம்

3. 



i. 23 ii. 25 iii. 28

**தரப்பட்ட தரவுகளை வைத்து கேட்கப்பட்ட கேள்விக்கு விடையளிக்குக.**




4.  இன் பெறுமதி யாது?

i. 20 ii. 25 iii. 30

5.  இன் பெறுமதி என்ன?

i. 60 ii. 50 iii. 40

6.  இன் பெறுமதி யாது?

i. 30 ii. 20 iii. 25

7. கௌரியின் வயது உஷாவின் வயதின் அரைவாசியாகும். உஷாவின் வயது தர்சினியின் வயதின் அரைவாசியாகும். மூவரினதும் வயதின் கூட்டுத்தொகை 42 எனில் தர்சினியின் வயது என்ன?
i. 6 வருடங்கள் ii. 12 வருடங்கள் iii. 24 வருடங்கள்

8. திருமந்திரம் எனும் சொல்லில் உள்ள எழுத்துக்களை மட்டும் பயன்படுத்தி எழுதப்பட்டுள்ள சொல்
i. தந்திரம் ii. திருமதி iii. மருந்து

9. 5 m நீளமும் 4 m அகலமும் உள்ள செவ்வக வடிவ சுவருக்கு வர்ணம்பூச ரூபாய் 500.00 செலவாகியது. எனவே 10 m நீளமும் 4 m அகலமும் உள்ள சுவருக்கு வர்ணம் பூச எவ்வளவு ரூபாய் செலவாகும்?
i. ரூபாய் 1000.00 ii. ரூபாய் 800.00 iii. ரூபாய் 600.00

10. பாடசாலை ஒன்றில் கண்காட்சி புதன்கிழமை ஆரம்பித்து, அது 5 நாட்கள் நடைபெற்றதெனின் அக்கண்காட்சி முடிவடைந்த நாள் எது?
i. வியாழன் ii. வெள்ளி iii. ஞாயிறு

11. கோகுலிடம் ரூபாய் 750.00 இருந்தது. அவன் அதில் 1/3 பங்கை தங்கைக்கும் மிகுதியில் 2/5 பங்கை அண்ணாவுக்கும் கொடுத்தான். தற்போது அவனிடம் மிகுதியாக உள்ள பணம் எவ்வளவு?
i. ரூபாய் 250.00 ii. ரூபாய் 300.00 iii. ரூபாய் 400.00

12. கிரிஸ் 25 பிஸ்கட்டுக்களை வாங்கினான். அதனை அவன் ஒரு நாளைக்கு இரண்டு வீதம் சாப்பிட்டான். 5 பிஸ்கட்டுக்களை தம்பிக்குக் கொடுத்தான் எனின் அவன் எத்தனை நாட்கள் பிஸ்கட் சாப்பிட்டான்?
i. 10 நாட்கள் ii. 5 நாட்கள் iii. 7 நாட்கள்

13. **0 x 3 x 6 =** ……….. இதன் பெறுமதி
i. 18 ii. 6 iii. 0

14. ஒரு வரிசையில் இரண்டு கம்பங்களுக்கிடையே ஐந்து கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. எனவே அவ்வரிசையில் ஏழு கம்பங்களுக்கிடையே எத்தனை கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கும்?
i. 25 கொடிகள் ii. 30 கொடிகள் iii. 35 கொடிகள்

15. 30 தொடக்கம் 45 வரை எண்ணும் போது இலக்கம் 3 எத்தனை தடவை வரும்?
i. 12 தடவைகள் ii. 11 தடவைகள் iii. 10 தடவைகள்


16. வகுப்பொன்றிலே 9 நண்பர்களுக்கிடையே கை குலுக்கிக் கொண்டனர். அங்கு நிகழ்ந்த மொத்த கைகுலுக்கல்கள் எத்தனை?
i. 18 ii. 36 iii. 72

17. 5 நண்பர்கள் ஒவ்வொருவரும் அவர்களின் பிறந்த தினத்துக்கு வாழ்த்து மடல்களைப் பரிமாறிக் கொண்டனர். ஒரு வருடத்தில் அவர்களால் பரிமாறப்பட்ட வாழ்த்து மடல்கள் எத்தனை?
i. 20 ii. 25 iii. 30

18. 11 படிகள் உள்ள ஒரு படிக்கட்டில் A முதற்படியிலும் B 11 ஆவது படியிலும் நிற்கின்றனர். A ஒரு படியில் ஏறும் போது B ஒரு படி இறங்கினால் அவர்கள் இருவரும் எத்தனையாம் படியில் சந்திப்பார்கள்?
i. 4ஆம் படி ii. 5ஆம் படி iii. 6ஆம் படி

19. 2004ம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி புதன்கிழமை எனில் 2006ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி என்னகிழமை?
i. சனிக்கிழமை ii. வெள்ளிக்கிழமை iii. வியாழக்கிழமை




20. காலையில் பாடசாலைக்கு செல்கையில் அதிஷ்டாலின் நிழல் அவளது பின்னாலிருந்தது. எனவே அவள் பயணித்த திசை யாது?
i. மேற்கு ii. கிழக்கு iii. வடக்கு

21. 



i. 24 ii. 20 iii. 18

22. **26 ÷ 2 = 6 ▲ 7**
இச்சமன்பாடு சமனாக வேண்டுமாயின் ▲ இற்குரிய கணித செய்கை யாது?
i. + ii. – iii. X


23. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது அதே வடிவில் தெரியும் உருவானது


i.  ii.  iii. 


24. 14, 19, ◯ 29, 34 இடைவெளிக்கு வரவேண்டிய எண்ணானது?
i. 22 ii. 23 iii. 24

25. 





இடைவெளிக்கு வரவேண்டிய இலக்கங்கள்

i. 

ii. 

iii. 


26. தரப்பட்டுள்ள உருக்களில் இரண்டு ஒத்தவை. அவ்விரண்டு உருக்களும் எவை?


A

B

C


i. A, B ii. B, C iii. A, C

27. விளையாட்டில் ………………….. அடைந்த வீரர்களை ……………………… இவ்வாக்கியத்தின் இடைவெளிகளுக்கு வர வேண்டிய சொற்கள் முறையே
i. வெற்றி, தோல்வி ii. வெற்றி, போற்றினர்
iii. வெற்றி, வாழ்த்தினர்

28. ஓர் எண்ணும் அதன் மூன்று மடங்குடன் மூன்றை கூட்டினால் வரும் விடை 27 எனில் அவ்வெண் யாது?
i. 6 ii. 8 iii. 10

29. 1984ம் ஆண்டு எத்தனையாவது நூற்றாண்டிற்குரியது?
i. 19 ii. 20 iii. 21

30. கம்பியொன்றினை வளைத்து சமபக்க முக்கோணி ஒன்று அமைக்கப்பட்டது. அதன் ஒருபக்க நீளம் 7 cm ஆகும். இதே கம்பியை ஒருபக்க நீளம் 5 cm உள்ள சதுரமாக மாற்ற வேண்டுமாயின் இக்கம்பியிலிருந்து நீக்கவேண்டிய அளவு எவ்வளவு?
i. 1 cm ii. 2 cm iii. 3 cm

31. 

இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் மொத்த எண்ணிக்கை
i. 5
ii. 6
iii. 8

32. பின்வருவனவற்றுள் எப்போதும் உண்மையான கூற்று
i. கதிரைகள் மரத்தால் செய்யப்பட்டவை
ii. நாளை அடை மழை பெய்யும்
iii. இலங்கை ஒரு தீவு ஆகும்

33. அறுபதாயிரத்து அறுபத்து ஆறு இதனை எண்களில் எழுதினால்
i. 66066 ii. 60066 iii. 66006

34. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்லானது
**கடல், குளம், பொய்கை, நதி, அணை**
i. குளம் ii. பொய்கை iii. அணை

35. 2750 ml குளிர்பானத்தை 250 ml அளவுடைய எத்தனை போத்தல்களில் நிரப்பலாம்?
i. 11 ii. 10 iii. 9

(9 ஆம் பக்கம் பார்க்க)


(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

36. இலக்கம் 5க்கு அடுத்துள்ள மூன்றால் பிரிபடும் எண்ணுடன் இலக்கம் 5க்கு அடுத்துள்ள முதன்மை எண்ணைக் கூட்டினால் கிடைப்பது
i. 12 ii. 13 iii. 14

37. மேற்பரப்பினையும் விளிம்பையும் முகத்தையும் மட்டும் கொண்டுள்ள திண்மவுரு யாது?
i. கூம்பு ii. கனவுரு iii. சதுரமுகி

38. 500g மா ரூபாய் 550.00 எனில் 1750g மா எவ்வளவு?
i. ரூபாய் 1550.00 ii. ரூபாய் 1750.00 iii. ரூபாய் 1925.00

39. 720 தேங்காய்களை 6 கூடைகளில் நிரப்பினால் ஒரு கூடையிலுள்ள தேங்காய்களின் எண்ணிக்கை யாது?
i. 120 ii. 180 iii. 140

40. 
இதிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 6
ii. 4
iii. 8

## கடந்த வார (00.03.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

**I.**
1. மரங்கள், நாணற்புற்கள்
2. மரங்கள் செறிந்து வளர்ந்த காடு
3. பிள்ளைகள்
4. முறிந்து
5. i. புயல் + காற்று ii. அதன் + இடையே
6. i. வனம் ii. விருட்சம் / தரு

**II.**
7. நாங்கள் எல்லோரும் பசியால் அங்குமிங்கும் அலைந்தோம்
8. மாணவர்கள் ஆர்வத்துடன் இல்ல விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டனர்

**III.**
9. தொழிற்சாலையில்
10. ஏழை

**IV.**
11. i. பிள்ளை ii. குட்டி
12. i. நண்பன் ii. முதுமை
13. i. காலை விடாதே ii. பல்குத்த உதவும்
14. புகையிலை
15. i. அலரும் ii. அகவும்

**V.**
19. i. Knife ii. Carrot
20. i. அப்புடிகான்ன ii. உட பணின்ன

**VI.**
21. செங்கோணத்தை விடக் குறைந்த கோணம்
22. 30cm
23. ஆயிரத்து முப்பத்தேழு

24. 3/9
25. 2மணி 50 நிமிடங்கள்
26. 4
27. 165
28. A = 8, B = 4
29. 4999

**VII.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 30. 3 | 36. 2 | 41. 3 | 47. 2 | 53. 3 | |
| 31. 3 | 37. 3 | 42. 1 | 48. 1 | 54. 1 | |
| 32. 1 | 38. 2 | 43. 2 | 49. 3 | 55. 3 | |
| 33. 1 | 39. 1 | 44. 3 | 50. 3 | 56. 2 | |
| 34. 2 | 40. 2 | 45. 3 | 51. 3 | 57. 1 | |
| 35. 3 | 41. 3 | 46. 1 | 52. 2 | 58. 1 | |
| | | | | 59. 2 | |

## மலைச்சாரல்

நோர்த் மாத்தளை

# அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய பாலமுருகன் ஆலய மகா கும்பாபிஷேகம்



நோர்த் மாத்தளை உல்பத் மடவளை ஏ9 வீதியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய பாலமுருகன் ஆலய நூதன பிரதிஷ்ட மகாகும்பாபிஷேக பூர்வாங்க கிரியைகள் நேற்று முன்தினம் பிரம்ம ஸ்ரீ க.ஆனந்தகுமாரக் குருக்கள் தலைமையில் ஆரம்பமாகியது.

முருக பக்தனான தனது பாட்டனார் கோவிந்தன் மாரிமுத்து தனது சொந்த காணியில் சிறிய வேல் வைத்து காவடி எடுத்து வருடந்தோறும் முருகப்பெருமானை வழிபடுவதை பல ஆண்டுகளாக தனது கடமையாக செய்துவந்துள்ளார்.

அதே காணியில் தற்போது அவரது மகள் வழிப்பேரன் எஸ். எம். சிவகுமார் முருகப் பெருமானின் திருவருளினால் அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய பாலமுருகன் ஆலயத்தை புதிதாக நிர்மாணித்துள்ளார்.

சகல சிற்பகலை அம்சங்களுடன் தமிழகத்தைச் சேர்ந்த எஸ்.எஸ். சக்திவேல் ஸ்தபதி குழுவினரால் நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் விநாயகர், சிவன் அம்பாள், நவக்கிரகம், மயூரம், பலிபீடம், வைரவப் பெருமான் ஆகிய விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

நேற்று (23) காலை 6.00 மணிமுதல் பூஜைகள் ஆரம்பமாகி பக்தர்கள் எண்ணெய் காப்புக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

பிரதமகுரு பிரம்ம ஸ்ரீ க. ஆனந்தகுமாரக் குருக்கள் வழிநடத்துதலில் பிரம்ம ஸ்ரீ பரமேஸ்வர ஐங்கரசர்மா, சிவஸ்ரீ இராம சிவசண்முகநாத குருக்கள், சிவஸ்ரீ சுரேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ கு. சோமசுந்தரக் குருக்கள், சிவஸ்ரீ கோபிநாதக் குருக்கள், சிவஸ்ரீ ரவிசங்கரசர்மா குருக்கள், சிவஸ்ரீ அரவிந்த சர்மா குருக்கள் ஆகியோர் கும்பாபிஷேக கிரியைகளை நடாத்திவருகின்றனர்.

கும்பாபிஷேக தினத்தன்று மகேஸ்வர பூஜையைத் தொடர்ந்து பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

# வசந்தகால நிகழ்வுகளை முன்னிட்டு மாபெரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டி



நுவரெலியாவில் ஏப்ரல் வசந்தகால நிகழ்வுகளை சிறப்பிக்கும் வகையில் இரு கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 03,04ஆம் திகதிகளில் நுவரெலியா மாநகர சபை விளையாட்டு மைதானத்தில் (சினிசிட்டா மைதானம்) நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கிரிக்கெட் சுற்றுப்போட்டியானது கல்லூரிகளின் வரலாற்று சிறப்புமிக்க போட்டியாக அமையவுள்ளது.

நுவரெலியா பரிசுத்த திருத்துவ தேசிய கல்லூரி அதிபர் எஸ்.ரவிசந்திரன், மற்றும் காமினி தேசிய கல்லூரி அதிபர் டப்ளியூ.எம்.நிமால் குமார ஆகியோர் தலைமையில் இது தொடர்பான ஊடக சந்திப்பு இடம்பெற்றது. மேலும் கல்லூரிகளின் பழைய மாணவர்கள் உள்ளிட்ட இரு கல்லூரிகளின் கிரிக்கெட் அணி தலைவர்கள் மற்றும் வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

மேலும் வரலாற்று சிறப்புமிக்க கிரிக்கெட் சுற்றுப்போட்டியை முன்னிட்டு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதியன்று நுவரெலியா மாநகரில் வாகன பேரணியொன்றும் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

டி சந்ரு

# கடும் மழை, காற்று 32 வீடுகள் சேதம்

தலவாக்கலை குறூப், லிந்துலை நிருபர்கள்



அக்கரப்பத்தனை மற்றும் லிந்துலை பிரதேசங்களில் ஏற்பட்ட கடும் மழை, காற்று காரணமாக 32 வீடுகள் சேதமடைந்துள்ளன.

சில வீடுகள் இடிந்து விழுந்துள்ளன.

அத்தோடு மின் கம்பங்கள், பாரிய மரங்கள் என்பன முறிந்து வீழ்ந்துள்ளன. இதனால் போக்குவரத்து, மின்சாரம் என்பன தடைப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட 89 பேர் தற்போது தோட்டத்திலுள்ள கிளனிக்கல்ஸ் தமிழ் வித்தியாலய மண்டபம் மற்றும் உறவினர் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்குவதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

# காணாமல் போன முச்சக்கர வண்டிகள் பொலிஸாரால் மீட்பு

(கினிகத்தேனை தினகரன் நிருபர்)

கினிகத்தேனை, வட்டவளை, நாவலப்பிட்டி,தெஹியோவிட்ட, எக்கல ஆகிய பிரதேசங்களில் காணாமல் போன 10 முச்சக்கர வண்டிகள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

பலாங்கொடை பகுதியிலிருந்து பொலிஸாரால் முச்சக்கரவண்டிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்படி கினிகத்தேனை பிரதேசத்தில் 3 முச்சக்கர வண்டிகளும், நாவலப்பிட்டி பிரதேசத்தில் 4 முச்சக்கர வண்டிகளும் தெஹியோவிட்ட, எக்கல, வட்டவளை ஆகிய பிரதேசங்களில் தலா 1 முச்சக்கர வண்டிகளுமாக மொத்தமாக 10 முச்சக்கர வண்டிகள் கடந்த காலங்களில் காணாமல் போயிருந்தன.

இதன்படி முச்சக்கர வண்டிகள் அனைத்தும் பலாங்கொடை பிரதேசத்தில் இருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் முச்சக்கரவண்டிகள் மீட்கப்பட்டுள்ளன.



இச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் நால்வர் கினிகத்தேனை பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை தடுப்புகாவலில் வைத்து விசாரணை செய்வதற்கு நீதிவான் நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தற்போது முச்சக்கர வண்டிகள் அனைத்தையும் ஹற்றன் நீதிமன்றில் மேலதிக விசாரணைகளுக்காக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர். இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கினிகத்தேனை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# கிரகரி வாவியை சுத்தப்படுத்தும் நடவடிக்கை முன்னெடுப்பு



தலவாக்கலை குறூப் நிருபர்

நுவரெலியா கிரகரி வாவியை சுத்தப்படுத்தும் நடவடிக்கைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. பாசிகள் மற்றும் மிதக்கும் குப்பைகள் உள்ளிட்டவை இதன்போது அகற்றப்பட்டன.

எதிர்வரும் வசந்தகால கொண்டாட்டத்தை முன்னிட்டு கிரகரி வாவியை சுத்தப்படுத்தும் பணிகள் நேற்று (23) இடம்பெற்றன. நுவரெலியா மாநகரசபை சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் நுவரெலியா நகரசபை உயிர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், படகு உரிமையாளர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர். நுவரெலியா மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினர் இதுதொடர்பில் தெரிவிக்கையில் வாவியிலிருந்த பாசி உள்ளிட்ட நீர்வாழ் தாவரங்கள் மற்றும் நீரில் மிதக்கும் பிளாஸ்டிக் போத்தல்கள் உள்ளிட்ட ஏராளமான திடக்கழிவுகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நுவரெலியா நகருக்கு வரும் உள்ளூர் சுற்றுலாப்பயணிகள் மற்றும் நுவரெலியா நகரைச் சுற்றியுள்ள மக்களால் முறையற்ற முறையில் கொட்டப்படும் கழிவுகள் வாவியில் சேர்கின்றன. அத்தோடு வேறு நீர்நிலைகளிலிருந்து வரும் கழிவுகளும் கிரகரி வாவியில் கலப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

# சிறைச்சாலையிலிருந்து தப்பியோடிய கைதி

ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவர் பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றுள்ளார். ஹெரோயின் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்ட இவர் ஆறுமாத கால சிறைத்தண்டனையின் கீழ் புனர்வாழ்வளிப்பதற்காக, பல்லேகல திறந்தவெளி சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் இந்நிலையிலேயே அவர் தப்பிச் சென்றுள்ளார். கைதி கடந்த செவ்வாய்க்கிழமை (21) தப்பியோடியுள்ளதாக பல்லேகல பொலிஸார் தெரிவித்தனர். அவர், இம்மாதம் 28ஆம் திகதியன்று விடுதலை செய்யப்படவிருந்தவர் என சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

# 'உத்தம பிரபா – 2023' மாகாண விருது விழா

(அக்குறணை குறூப் நிருபர்)



கண்டி மாவட்ட, வத்துகாமம் கல்வி வலயப்பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் கல்வி நிர்வாக சேவை அதிகாரிகளுக்கான 'உத்தம பிரபா 2023' விருது விழா மத்திய மாகாண ஆளுநர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

மாணவர்களது கல்வி மட்டத்தை உயர்த்தும் நோக்கில் வடிவமைக்கப்பட்ட 'உத்தம பிரபா 2023' விருது விழா நிகழ்ச்சி குண்டசாலை, நத்தரம்பொத்த 'ரோயல் கிளசிக் ஹோட்டல்' வளாகத்தில் நடைபெற்றது.

இதில் வத்துகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த 80 பாடசாலை அதிபர்கள், மதிப்பீட்டுச் சான்றிதழ்களைப் பெற்றனர். அதில் 11 கல்வி நிர்வாக உத்தியோகத்தர்களுக்கும், 44 ஆசிரிய ஆலோசகர்களுக்கும் 25 பாடசாலைகளுக்கும் சிறப்பு விருதுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

வத்துகாமம் வலய கல்விப்பணிப்பாளர் டபிள்யூ.எம்.டி.என்.குணரத்னவைப் பாராட்டி நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் மாகாண ஆளுநரின் செயலாளர் மஞ்சுள மடஹபொல, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அஜித் பிரேமசிங்க, மாகாண கல்வி பணிப்பாளர் அமரசிறி பியதாச ஆகியோர் கலந்துகொண்டனர்.

# வவுனியாவில் இதுவரை 54 காச நோயாளர்கள் அடையாளம்

## அறிகுறிகள் காணப்படுமிடத்து பரிசோதனைகளை மேற்கொள்ளவும்

### காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி கே.சந்திரகுமார் அறிவுறுத்தல்

**வவுனியா விசேட, ஓமந்தை விசேட நிருபர்கள்**



வவுனியாவில் கடந்த வருடம் 54 காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக வவுனியா மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய அதிகாரி வைத்தியர் கே.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று (23.03) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

உலக காச நோய் தினம் இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. சாதாரணமாக ஒரு நாட்டில் ஒரு இலட்சம் பேரில் 63 நபர்கள் காச நோயாளர்களாக இருக்க வேண்டும். ஆனால் இலங்கையை பொறுத்தவரை அத்தகையதோர் எண்ணிக்கை இனம்காணப்படவில்லை. இலங்கையில் வருடத்துக்கு 13 ஆயிரம் காச நோயாளர்கள் அடையாளம் காணப்படவேண்டிய நிலையில் 8 ஆயிரம் பேரே இனம் காணப்படுகின்றனர். வவுனியா மாவட்டத்தில் கடந்த வருடம் 54 பேர் காச நோயாளர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். ஆனால் இந்த எண்ணிக்கை 100 ஆக இருந்திருக்க வேண்டும். சில நோயாளிகள் பரிசோதனைகளை மேற்கொள்ளாது நோய் தாக்கத்துடன் வெளியில் உலாவித் திரியலாம்.

பிரதானமாக இருமல் மூலமாகவே இந்நோய் பரவலடைகின்றது. இதனால் விரைவாக அனைவருக்கும் பரவக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட இருமல், சளியுடன் இரத்தம் வெளியேறல், உணவில் நாட்டமின்மை, உடல் மெலிதல், மாலைநேர காய்ச்சல் போன்றன இந்நோய்க்கான அறிகுறிகளாகும். இப்படியான அறிகுறிகள் இருப்பவர்கள் தாமதிக்காமல் வவுனியா வைத்தியசாலையில் அமைந்துள்ள மார்புநோய் சிகிச்சை நிலையத்தில் அதற்கான பரிசோதனைகளை செய்து கொண்டால் நோயை விரைவில் அறிந்துகொள்ள முடியும்.



இதற்கான மருந்தை ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக எடுத்துக் கொண்டால் இந்நோயை முற்றாக குணப்படுத்தலாம். இல்லாவிடில் இக்கிருமியானது சுவாசப்பையினூடாக உடல் முழுவதும் பரவும் தன்மை கொண்டது. எனவே இருமல் அறிகுறி இல்லாதவர்கள் கூட காசநோயாளர்களாக இருக்கலாம். அத்துடன் அநேகமாக நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்கள், நீரிழிவு நோயாளர்கள், சிறுவர்கள், இல்லங்களில் வசிக்கும் முதியவர்கள், போன்றவரை இந்த நோய் இலகுவில் தொற்றிக்கொள்ளும் சாத்தியக்கூறுகள் உள்ளன. எனவே நோயை கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

# வடக்கின் உதயம்

## வவுனியா விவசாயிகளுக்கு

# முதற்கட்டமாக 30 மெற்றிக்தொன் உரம் மானியமாக வழங்கி வைப்பு



**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா மாவட்ட விவசாயிகளுக்கு மானியமாக உரம் வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதனடிப்படையில் முதற்கட்டமாக 30 மெற்றிக் தொன் உரம் வழங்கி வைக்கப்பட்டது.

வவுனியா, கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு காலபோக நெற்செய்கைக்காக மானிய விலை அடிப்படையில் யூரியா உரத்தைப் பெற்றுக் கொண்ட விவசாயிகளுக்கு இலவசமாக அடிக்கட்டு உரம் வழங்கப்பட்டு வருகின்றது.

இதனடிப்படையில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் கீழான 5669 ஏக்கர் நெற்செய்கைக்காக 2423 விவசாயிகளுக்கு 84.4 மெற்றிக்தொன் அடிக்கட்டு உரம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதில் முதற்கட்டமாக 30 மெற்றிக் தான் வவுனியாவிற்கு கொண்டு வரப்பட்டு கமநல அபிவிருத்தி நிலையத்தின் கீழான கல்வீரங்குளம் கமக்கார அமைப்பு விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

ஆரம்பநிகழ்வில் கோவில்குளம் கமநல அபிவிருத்தி நிலையத்தின் பொறுப்பதிகாரி காஞ்சனா ரத்தினம், கமலநல அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், விவசாயிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# இலங்கை குமரித்தமிழ் மன்ற 10 ஆவது ஆண்டு நிறைவு விழா

கிளிநொச்சியில் இலங்கை குமரித் தமிழ் மன்றத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மலர் வெளியீடும் நாளை 25 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை கைசால் வாழ்நாள் பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். இந்திய துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் விசேட அம்சமாக குமரித் தமிழ் மன்றத்தின் ஆளுநர் அமரர் நா.வை.குகராசா (மணி) இலக்கணச் செம்மல் இரா. இளங்குமாரனார் ஆகியோரின் நினைவாகவும் மூத்த குடிகள், பல்கலைக்கழக புகுமுக மாணவர்கள் அன்பளிப்புக்களை வழங்கி நன்மதிப்புச் செய்யப்படவுள்ளனர்.

# நெடுந்தீவில் நடமாடும் மருத்துவ முகாம்

**கோப்பாய் குறுப் நிருபர்**

யாழ். நெடுந்தீவில் நாளை 25 ஆம் திகதி சனிக்கிழமை நடமாடும் மருத்துவ முகாமொன்று நடைபெறவுள்ளதால் மக்கள் அதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டு கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வறிவித்தலை யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் விடுத்துள்ளார். யாழ்.போதனா வைத்திய சாலை மருத்துவ குழுவினால் நடத்தப்படும் மருத்துவ முகாமில் யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்கள், துறைசார் வைத்திய அதிகாரிகள், மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு

# அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் 200 மில்லியன் ரூபா நிதியுதவியில் ஒட்சிசன் ஆலை

**மாங்குளம் நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் 200 மில்லியன் ரூபா நிதியுதவியில் அமைக்கப்பட்ட ஒட்சிசன் ஆலையின் நிர்மாணப் பணிகள் தற்சமயம் நிறைவடைந்துள்ளது. முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் நோயாளர்களின் தேவைக்காக ஒட்சிசன் ஆலையொன்று இல்லாமையால் வெளிமாவட்டங்களிலிருந்து ஒட்சிசனை பெற்றுக் கொண்டு வந்து நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க வேண்டிய நிலை இருந்து வருகின்றது. கொவிட் 19 தொற்று காலத்தில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட சிகிச்சை நிலையத்திற்கு தேவையான ஒட்சிசனை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டனர். வெளிமாவட்டங்களிலிருந்தே ஒட்சிசனை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர். இந்நிலையில் கொவிட்19 பாதுகாப்பு அவசர மருத்துவ உதவித்திட்டத்தின் கீழ் யுனப்ஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அவுஸ்திரேலிய தூதரகத்தின் 200 மில்லியன் ரூபா செலவில் கடந்த 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் ஒட்சிசன் ஆலையொன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் பணிகள் தற்சமயம் நிறைவடைந்துள்ளன. தற்போது முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு தேவையான ஒட்சிசன்கள் அங்கேயே உற்பத்தி செய்யப்படுவதுடன் மேலதிகமாக வெளிமாவட்ட மருத்துவமனைகளுக்கும் ஒட்சிசனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில் அவுஸ்திரேலிய நாட்டின் நிதியுதவி தொடர்பில் நேற்றுமுன்தினம் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஆணையாளர் பால் ஸ்டீபன் (He Paul Stepjans) உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டனர். இந்நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் தலைமையில் நடைபெற்றது. இதில் அவுஸ்திரேலிய தூதரகர் மற்றும் அவரது பாரியார் மற்றும் யுனப்ஸ் திட்டத்தின் இலங்கைக்கான தலைவர் மற்றும் மாவட்ட மருத்துவமனை பணிப்பாளர் வைத்தியர் வாசுதேவா மற்றும் மருத்துவமனை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஒட்சிசன் ஆலையை பார்வையிட்டுள்ளதுடன் மாவட்ட மருத்துவமனைக்கு பாரிய ஒட்சிசன் ஆலைக்கான நிதியுதவியை வழங்கிய அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்கு மக்கள் சார்பில் அதிகாரிகள் நன்றி தெரிவித்தனர்.

## மனிதபாவனைக்குதவாத

# பழப்புளியை வைத்திருந்தவருக்கு 90 ஆயிரம் ரூபா தண்டப்பணம்

**யாழ். விசேட நிருபர்**

மனிதபாவனைக்குதவாத பழப்புளியை மீள்பொதி செய்த குற்றச்சாட்டில் கைதான நபருக்கு யாழ்ப்பாண நீதிமன்றம் 90 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்துள்ளது.

கடந்த ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி யாழ்ப்பாண நகரிலுள்ள களஞ்சியசாலையொன்றில் சுகாதாரமற்ற முறையில் மனிதபாவனைக்குதவாத பழப்புளி பொதி செய்யப்படுவதாக பொது சுகாதார பரிசோதகருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பு இடம்பெற்றது. இதன் போது சம்பவ இடத்திற்கு சென்ற பொது சுகாதார பரிசோதகர் சுகாதாரமற்ற முறையில் காணப்பட்ட 6 ஆயிரம் கிலோ பழப்புளியை கைப்பற்றியிருந்தார்.

இதனையடுத்து மறுநாள் 26ஆம் திகதி யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்றில் கைப்பற்றப்பட்ட பழப்புளியையும் , அதனை உடைமையில் வைத்திருந்த நபரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரணை செய்த நீதவான், புளியை உடைமையில் வைத்திருந்தவரை விளக்கமறியலில் தடுத்து வைக்க உத்தரவிட்டார். அத்துடன் கைப்பற்றப்பட்ட பழப்புளியை பரிசோதனைக்காக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்திற்கு அனுப்பி அறிக்கை பெறுமாறும் உத்தரவிட்டார்.

இந்நிலையில் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் கடுமையான நிபந்தனைகளுடன் 36 நாட்களின் பின்னர் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதித்தது.

அதனைதொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளின் அடிப்படையிலும், அரச இராசயன பகுப்பாய்வு திணைக்களத்தின் அறிக்கையில் பழப்புளி வண்டுகள் தாக்கி, மனிதபாவனைக்குதவாத வகையில் பழப்புளி கிடைக்கப்பெற்றதாகவும் அதனை வைத்திருந்த நபரை குற்றவாளி என நீதிமன்றம் தீர்ப்பளித்து 90 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் விதித்துள்ளது.

# மன்னாரில் மீனவர்கள் கவனயீர்ப்பு போராட்டம்

## மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்பு

**(தலைமன்னார் விசேட, மன்னார் குறுப் நிருபர்கள்)**

வடக்கு மாகாண மீனவ சமூகம் மன்னாரில் முன்னெடுத்த மாபெரும் கவனயீர்ப்பு போராட்டத்தினால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருந்தது.

வடக்கு கடல் பகுதியில் குத்தகை அடிப்படையில் இந்திய மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதியை வழங்குதல் மற்றும் இந்திய மீனவர்களின் தொடர்ச்சியான அத்துமீறல்களை கண்டித்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று மன்னாரில் இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் வட மாகாணத்திலுள்ள யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்ட மீனவர்கள் மீனவ சமாஜத்தின் நிர்வாகத்தினர், மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ, மன்னார் பிரஜைகள் குழு, மதத்தலைவர்கள் என பலரும் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டமானது காலை 10 மணியளவில் மன்னார் நகர சபை பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டு மன்னார் மருத்துவமனை பிரதான பாதையூடாகச் சென்று மன்னார் புதிய பஸ் நிலையத்தில் ஒன்றுகூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



மன்னார் மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

நேற்றையதினம் மன்னார் வர்த்தக சங்கம் தங்கள் கடைகளை பூட்டி இப்போராட்டத்துக்கு ஆதரவு வழங்கியமையால் மன்னாரில் இயல்பு நிலை பாதிக்கப்பட்டிருந்தது. மீனவர்கள் கடற்றொழிலுக்கு செல்லவில்லை. மாணவர்கள் பாடசாலைக்கு சமூகமளிக்கவில்லை. தனியார் வாகன போக்குவரத்து சேவை இடம்பெறவில்லை.








உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்திய நாவலர் விழாவும் பாலர் கலை விழாவும் நேற்றுமுன்தினம் உடுவிலில் நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காணலாம்.

# கிழக்கின் குரல்



## சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தில் கட்டப்பட்ட வீடுகள் கையளிப்பு

தோப்பூர் குறுப், பாசிக்குடா நிருபர்கள்

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஆசாத் நகரிலும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட செம்மண்ணோடை மற்றும் வாழைச்சேனையிலும் சுபீட்சத்தின் நோக்கு விசேட வீடமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகள் பயனாளிகள் மூவருக்கு நேற்று முன்தினம் புதன்கிழமை (22) கையளித்து வைக்கப்பட்டன.

ஆசாத் நகரில் ஒருவருக்கும் செம்மண்ணோடையில் ஒருவருக்கும் வாழைச்சேனையில் ஒருவருக்கும் இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன.

ஆசாத் நகரில் கையளிக்கப்பட்ட வீடு 350,000 ரூபா மக்கள் பங்களிப்பிலும் 650,000 ரூபா சமுர்த்தித் திணைக்களத்தின் பங்களிப்பிலும் கட்டப்பட்டது.

இதேவேளை, செம்மண்ணோடை மற்றும் வாழைச்சேனையில் கையளிக்கப்பட்ட வீடுகள் ஒவ்வொன்றும் 12 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா மக்கள் பங்களிப்பிலும் 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா சமுர்த்தித் திணைக்களத்தின் பங்களிப்பிலும் கட்டப்பட்ட வீடுகளாகும்.



## தம்பிலுவில் ஆடையகம் தீயில் எரிந்து நாசம்

திருக்கோவில் தினகரன் நிருபர்



அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் பிரதான வீதியை அண்டி அமைந்துள்ள ஆடை விற்பனை நிலையமொன்று நேற்று வியாழக்கிழமை அதிகாலை (23) தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இந்த விற்பனை நிலையத்தில் தீ பரவுவதை அவதானித்த பொது மக்கள், திருக்கோவில் பொலிஸாருக்கும் காஞ்சிரங்குடா இராணுவ முகாமுக்கும் அக்கரைப்பற்று மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினருக்கும் தகவல் வழங்கினர். இதனைத் தொடர்ந்து, மேற்படி பிரதேசத்துக்கான மின் விநியோகத்தை மின்சார சபையினர் உடனடியாக நிறுத்தினர்.

அத்துடன், காஞ்சிரங்குடா இராணுவ முகாமைச் சேர்ந்த படையினரும் அக்கரைப்பற்று மாநகரசபையின் தீயணைப்புப் பிரிவினரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இருப்பினும், மேற்படி விற்பனை நிலையம் தீயில் முற்றாக எரிந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தீ விபத்து தொடர்பாக திருக்கோவில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## கொக்கட்டிச்சோலையில் இன்று திருக்குடமுழுக்கு

காரைதீவு குறுப் நிருபர்

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள கருங்கற்கோயில் முகலிங்கேஸ்வரப் பெருமானுக்கு திருக்குடமுழுக்கு இன்று வெள்ளிக்கிழமை (24) நடைபெறுகின்றது.

அத்துடன், இந்த ஆலய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 108 சிவலிங்கங்களும் மூவாயிரம் திருமந்திரப் பாடல்களுடனான திருமந்திர அரண்மனைத் திறப்பு விழாவும் இன்றையதினம் நடைபெறுகின்றது.

முகலிங்கேஸ்வரப் பெருமானுக்கு எண்ணெய்க்காப்பு சாத்துதல் நேற்று வியாழக்கிழமை (23) நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலய வளாகத்தில் கருங்கற்கோயில் முகலிங்கேஸ்வரப் பெருமான், சிவபூமி அறக்கட்டளை நிதியத்தினால் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

## மருதமுனை பாடசாலைக்கு முஷாரப் எம்.பி. விஜயம்



மருதமுனையில் இயங்கி வரும் HUMAN LINK மனிதநேயப் பாடசாலைக்கு அண்மையில் விஜயம் செய்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரபிடம், அப்பாடசாலையின் மாணவர் விடுதியை விரிவுபடுத்துவதற்கு உதவுமாறு அப்பாடசாலை நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அத்துடன், பாடசாலைக்குரிய தேவைகள் தொடர்பாகவும் முஷாரப் எம்.பி.யிடம் பாடசாலை நிர்வாகத்தினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

முஷாரப் எம்.பி.யை வரவேற்ற மேற்படி பாடசாலையின் பணிப்பாளர் ஏ.கமர்தீன், விசேட தேவையுடைய மாணவர்கள் கல்வி கற்கும் இடத்தையும் மாணவர் விடுதியையும் அழைத்துச் சென்று காட்டியுள்ளார்.

அத்துடன், விசேட தேவையுடைய மாணவர்களின் ஆக்கத்திறன் மற்றும் தொழில் தகைமைகளை விருத்தி செய்வதற்கான கைவினைப் பொருட்களையும் முஷாரப் எம்.பி. பார்வையிட்டுள்ளார்.

தன்னிடம் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களைக் கவனத்தில் கொண்டு, அவற்றுக்கு உதவி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக, முஷாரப் எம்.பி. தெரிவித்தார்.

இதன்போது, கல்முனைப் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி, பாராளுமன்ற உறுப்பினரின் மருதமுனை இணைப்பாளர் பீ.எம்.முகம்மட் ஜஃபர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## பிரதேசசபை உறுப்பினர் வாள்வெட்டில் படுகாயம்

ரொட்டவெவ குறுப் நிருபர்

மொரவெவ பிரதேச சபை உறுப்பினரொருவர் வாள்வெட்டில் படுகாயமடைந்ததைத் தொடர்ந்து, திருகோணமலை பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை (21) இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மொரவெவ, நாமல்வத்த பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய பிரதேச சபை உறுப்பினரே படுகாயமடைந்துள்ளார்.

முச்சக்கரவண்டியில் வந்த சந்தேக நபர், வாள்வெட்டை மேற்கொண்டு விட்டு, முச்சக்கரவண்டியை விட்டு தப்பியோடியுள்ளார். இதனையடுத்து, இச்சந்தேகநபரை தேடிக் கைது செய்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்

கூட்டமொன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய போதே, மேற்படி பிரதேச சபை உறுப்பினர் இந்த அசம்பாவிதத்தை எதிர்நோக்கியுள்ளதாக, பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## இறக்காமத்தில் விபத்து; ஒருவர் பலி, மற்றவர் காயம்

கல்முனை மத்திய தினகரன், கல்முனை குறுப் நிருபர்கள்

அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மதினாபுரம் அக்கரைப்பற்று பிரதான வீதியை அண்டி அமைந்துள்ள சந்தைக்கு அருகில் நேற்று முன்தினம் புதன்கிழமை (22) காலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இறக்காமம் நான்காம் பிரிவைச் சேர்ந்த அமீர் என்பவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடனொன்று மோதி இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த இவர்கள் இருவரும், அம்பாறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இவர்களில் அமீர் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். மற்றைய நபர் அவ்வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்துத் தொடர்பாக விரிவான விசாரணையை இறக்காமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறந்த முகாமைத்துவ அலுவலகமாக அக்கரைப்பற்று அலுவலகம் தெரிவு



ஒலுவில் மத்திய விசேட, அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்கள்

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் கிழக்குப் பிராந்திய சேவை நிலையத்துக்குட்பட்ட அக்கரைப்பற்றுப் பிராந்திய முகாமையாளர் அலுவலகம் சிறந்த முகாமைத்துவ அலுவலமாக தேசிய ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றுள்ளது

'நீர் மற்றும் துப்புரவேற்பாடு நெருக்கடியைத் தீர்ப்பதற்கான மாற்றத்தை துரிதப்படுத்தல்' எனும் தொனிப்பொருளின் கீழ் நேற்று முன்தினம் புதன்கிழமை (22) நடைபெற்ற உலக நீர் தினத்தில் இதற்கான கௌரவம், பிராந்திய முகாமையாளரும் பொறியியலாளருமான எம்.முஷாதிக்கிடம் வழங்கப்பட்டது.

இதற்காக உழைத்த சகல உத்தியோகத்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

## மகனின் கிரிக்கெட் மட்டை தாக்குதலில் தந்தை பலி

### கல்லடியில் சம்பவம்

மட்டக்களப்பு குறுப் நிருபர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லடிப் பிரதேசத்தில் மகனின் கிரிக்கெட் மட்டையினால் தாக்கப்பட்டு தந்தை உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளரான 65 வயதுடைய கடுசப்பிள்ளை கருணாகரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 32 வயதுடைய மகன் கைதுசெய்யப்பட்டு, மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, இவரை எதிர்வரும் 28ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

கடந்த 16ஆம் திகதி தன்னை கிரிக்கெட் மட்டையினால் தனது மகன் கடுமையாகத் தாக்கியதாக, காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் தந்தை முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து, தான் வசித்துவந்த வீட்டிலிருந்து தனது மனைவியுடன் அத்தந்தை வெளியேறி, கல்லடியிலுள்ள தனியார் விடுதியொன்றில் தங்கியுள்ளார்.

18ஆம் திகதி விடுதியிலிருந்து வெளியேறிய அத்தந்தை, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த 21ஆம் திகதி உயிரிழந்ததாக, காத்தான்குடி பொலிஸாருக்கு வைத்தியசாலை நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட பொலிஸார் மகனைக் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியதுடன், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவானுடன் உயிரிழந்தவரின் வீட்டையும் இவர் தங்கியிருந்த விடுதியையும் நேற்று முன்தினம் புதன்கிழமை (23) சென்று பார்வையிட்டனர்.

அத்துடன் சடலத்தை பார்வையிட்ட இவர்கள், பிரதேச பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## 'சோலார்' மின்னுற்பத்தி திட்டத்துக்கு எதிராக வாகனேரியில் ஆர்ப்பாட்டம்



பாசிக்குடா நிருபர்

'சோலார்' மின்னுற்பத்தி திட்ட நிர்மாணத்துக்காக வாழைச்சேனை கமநல திணைக்களத்துக்குட்பட்ட வாகனேரி, மதுரங்கேணி சாப்பமடுக் கிராமத்தில் தமது 352 ஏக்கர் விவசாயக் காணிகளை தனியார் நிறுவனமொன்று கையகப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை (22) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமது காணிகளில் மூதாதையர் தொட்டு இற்றைவரை தாம் வேளாண்மைச் செய்கையில் ஈடுபட்டு வருவதாகவும் தமது காணிகளில் 'சோலார்' மின்னுற்பத்தி திட்ட நிர்மாணம் வேண்டாமெனவும், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

தமது காணிகளுக்குப் பதிலாக தமக்கு மாற்றுக் காணிகள் தேவை இல்லையெனவும், அவ்விவசாயிகள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்ட இடத்துக்கு வந்த வாழைச்சேனை கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதி ஆணையாளர் கே.ஜெகநாத்திடம் மகஜரொன்றையும் விவசாயிகள் கையளித்தனர்.

## மஹாஓய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



மருதமுனை தினகரன் நிருபர்

அம்பாறை மாவட்டத்தின் மஹாஓய பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் 164 பேருக்கு மஹாஓய பிரதேச செயலகத்தில் வைத்து கற்றல் உபகரணங்கள் கடந்த திங்கட்கிழமை (20) வழங்கி வைக்கப்பட்டன.

'அக்குரட்ட அத்வெலக்' மனிதாபிமான உதவித் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட கற்றல் உபகரணங்களே மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. மஹாஓய பிரதேச செயலாளர் திலின விக்ரமரத்ன தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்டச் செயலாளர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் கலந்துகொண்டார்.

## அம்பாறையில் காணிகளை இழந்தோருக்கு செயலமர்வு



அட்டாளைச்சேனை குறுப் நிருபர்

அம்பாறை மாவட்டத்தில் மூவின மக்கள் இழந்த காணிகளை மீளப் பெறுவது தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வொன்று, அம்பாறை மாவட்ட மனித எழுச்சி நிறுவனத்தினால் ஒலுவில் கிரீன் வில்லா விடுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை (21) நடத்தப்பட்டது.

மேற்படி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.நிஹால் அஹ்மத் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் யுத்த காலத்தில் காணிகளை இழந்த உள்ளிட்ட பல தரப்பினரும் கலந்துகொண்டனர். இதன்போது, சில சட்ட வரம்புகளும் ஆலோசனைகளும் தொடர்பாக காணிகளை இழந்த மக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டன. காணிகளை இழந்த மக்களுக்கு கைகொடுத்து உதவுவதற்காக இந்த அமைப்பு முன்வந்துள்ளது.



மட்டக்களப்பு புனித சிசிலியா பெண்கள் தேசிய பாடசாலையில் இவ்வருடத்துக்கான இல்ல மெய் வல்லுநர் விளையாட்டுப் போட்டி அதிபர், அருட்சகோதரி நிதாஞ்சலி தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வி.கனசிங்கம், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.குலேந்திரகுமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

(படம்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)

# இலங்கை வங்கி

## கிழக்கு மாகாணத்தின் பின்வரும் கிளையை மீளமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

## மட்டக்களப்பு

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 50 அடிகள் கொண்டதாக பிரதான பாதையை நோக்கி நகரத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தது 11 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 3,500 - 5,000 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும். மாடிக் கட்டடமாக இருந்தால் தரைப்பரப்பு குறைந்தபட்சம் 3,500 சதுர அடி அளவினைக் கொண்டதாக இருத்தல் வேண்டும.
- அடிப்படை வயரிங் உடன் கூடிய 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, ஸ்ரீ லங்கா டெலிகொம் தொலைபேசி இணைப்பு,ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு (2'x 2') அளவிலான தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி (10'x 10') அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (மின்பிறப்பாக்கியை கொண்டு செல்ல தனியான வழிப்பாதை இருத்தல் வேண்டும்.)
- வலது குறைந்தோருக்கான விஷேட நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்க 2000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- கட்டடத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் உள்ளும் புறமும் வெளிர் நிறம் பூசப்பட்டு (வெள்ளை அல்லது வேறு) இருத்தல் வேண்டும்.
- குளிரூட்டல் தொகுதியின் வெளிப்புற இயந்திரத்தை பொருத்த போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடங்கள்.
- மாநகர சபையிடமிருந்து பெறப்பட்ட "இயைபுச் சான்றிதழ்" (CoC)

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் , கட்டட வரைபடம் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**மட்டக்களப்பு கிளைக்கான பொருத்தமான கட்டடம்**" எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்),
இலங்கை வங்கி,
கிழக்கு மாகாணக் காரியாலயம்,
இல: 455, பிரதான வீதி, திருகோணமலை.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

## அறிவித்தல்

வழக்கு இல : DTS/386/2022

தன்மை : விருப்பாவணம்

நடைமுறை :

நடைமுறை பெறுமதி : ரூ.687,236.54

இந்த விண்ணப்பமானது கார்டி∴ப், சவுத் வேல்ஸ், ∴பிட்ஸலான் பிளேஸ், கார்டி∴ப் மாஜிஸ்திரேட் நீதிமன்றம், 3வது தளம், வேல்ஸின் ப்ரோபேட் ரெஜிஸ்ட்ரி, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் இன் உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட ப்ரோபேட் ஆவணத்தினை மீள் முத்திரையிடுவதற்கான குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 554U, (1977ஆம் ஆண்டு 20ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) இலங்கை, கொழும்பு 05, ஹெவ்லொக் டவுன், ஜோசப் பிரேசர் வீதி, இல.20 எனும் இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட, காலஞ்சென்ற அமரர் தமயந்தி மயில்வாகனம் என்பவரின் இறுதி விருப்பாவணத்தினை மீள் முத்திரை இடுவதற்கான விண்ணப்பம் தொடர்பாக,

**(காலஞ்சென்றவர்)**

1. ஜோசப் தமசோதி மைக்கேல் மயில்வாகனம்
2. போல் பரம்சோதி மயில்வாகனம் இருவரும்

இல. 20,
ஜோசப் ∴ப்ரேசர் வீதி,
ஹெவ்லொக் டவுன்,
கொழும்பு 05.

தற்போது.
15, ரோஸ்பெர்ரி சாலை,
லண்டன் SWZ4DQ
ஐக்கிய இராச்சியம்,

பின்வரும் அவரது அற்றோனி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்.

தேவகி டயஸ்
இல. 552/4, போகுந்தர வீதி,
அரவ்வல, பன்னிப்பிட்டிய

**(மனுதாரர்கள்)**

இலங்கை, கொழும்பு 05, ஹெவ்லொக் டவுன், ஜோசப் பிரேசர் வீதி, இல. 20 எனும் இடத்தை வசிப்பிடமாகக் கொண்ட, காலஞ்சென்ற அமரர் தமயந்தி மயில்வாகனம் என்பவரின் இறுதி விருப்பாவணம் தொடர்பாக கார்டி∴ப், சவுத் வேல்ஸ், ∴பிட்ஸலான் பிளேஸ், கார்டி∴ப் மாஜிஸ்திரேட் நீதிமன்றம், 3வது தளம், வேல்ஸின் ப்ரோபேட் ரெஜிஸ்ட்ரி, இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் இன் உயர் நீதிமன்றத்தினால் 2021 ஜனவரி மாதம் 06 ஆம் திகதி வழங்கப்பட்ட வெளிநாட்டு ப்ரோபேட் ஆவணத்தினை முத்திரையிடுவதற்கான குடியியல் சட்டக்கோவையின் பிரிவு 554U, (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) குடியியல் நடபடி முறைக்கோவை வெளிநாட்டு உயில்கள் மீள் முத்திரையிடுகின்ற சட்டக் கோவையின் கீழ் மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்த 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் பிரிவு XXXVIII B குடியியல் நடபடிமுறைக்கோவை (1977 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க திருத்தப்பட்ட சட்டத்தின் பிரகாரம்) விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மனுதாரரின் சட்டத்தரணி**

**கே.கணேசயோகன்,**
**மனுதாரரின் சட்டத்தரணி**
**இல. 24/1, சார்ளமொன்ட் வீதி,**
**கொழும்பு 06**

# அறிவித்தல்

**மாகாண அரச சேவை ஆணைக்குழு - தென் மாகாணம்**

## தென் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் மற்றும் பிரதி பணிப்பாளர் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு செய்தல்

தென் மாகாண சபையின் தென் மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் மற்றும் பிரதி பணிப்பாளர் பதவிகளுக்கு தகுதியான விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான அனைத்து விபரங்களும் மாதிரி விண்ணப்பப் படிவங்களும் தென் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் www.psc.sp.gov.lk உத்தியோகபூர்வ இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கான விண்ணப்பங்களை ஏற்கும் கடைசித் திகதி 2023.04.11 ஆகும்.

**செயலாளர்,**
**மாகாண அரச சேவை ஆணைக்குழு**
**தென் மாகாணம்.**

# விசேட மகா சபை கூட்ட அறிவித்தல்

## இலங்கை இரயில்வே சீருடைசேவை சேமலாப நிதியின் சகல அங்கத்தவர்களும் அறிந்துகொள்வதற்காக

இலங்கை இரயில்வே சீருடை சேவை சேமலாப நிதியின் விசேட மகா சபைக் கூட்டம் 2023 மார்ச் 29ம் திகதி முற்பகல் 10.00 இற்கு இரயில்வே பொது முகாமையாளர் பணிமனை கேட்போர் கூடத்தில் நடத்தப்படும் என்பதை இத்தால் அறிவிக்கிறேன்.

100 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களின் வேண்டுதலின் பிரகாரம் இந்த விசேட மகா சபையை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதுடன் அங்கு கீழ்க்காணும் விடயங்கள் பற்றி கலந்துரையாடி தீர்மானங்களை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

01. அங்கத்தவர் கடன்தொகையை அதிகரித்தல்.
02. கடந்த மகா சபையில் தீர்மானிக்கப்பட்ட கௌரவ ஓய்வூதிய கொடுப்பனவு ரூ.10,000/- முதல் ரூ.15,000/- வரை திருத்துதல்
03. ஊழியர் குழாமிற்கு புதிய ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல்.
04. புதிய கட்டிடத்தை திறந்து அங்கத்தவர்களுக்கு உடமையாக்குதல்.

**கட்டளைப்பிரகாரம்**
**ஜே.ஜே.வீரரத்ன**
**கௌரவ செயலாளர் மற்றும் பொருளாளர்**
**011-2431481**

**இ.இ.சீ.சே.சே.நிதி**
**த.பெ.355,**
**இரயில்வே பொது முகாமையாளர் பணிமனை**
**புகையிரத தலைமையகம்**
**கொழும்பு -10**

# மக்கள் வங்கி

## மெதிரிகிரிய கிளை (231)

### 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29ஆம் D பிரிவின் கீழ் முன்மொழிவு

1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29ஆம் D பிரிவின் கீழ் மக்கள் வங்கி பணிப்பாளர் சபையால் 2023.02.27ஆம் திகதி கீழ்க் குறிப்பிடப்படுகின்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

பொலன்னறுவை பிரசித்த நொத்தாரிசு திருமதி யூ.ஏ.ஜே.கே அதுகோரல அவர்களால் நிறைவேற்றப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.04ஆம் திகதியுடைய 187ஆம் இலக்க ஈட்டு முறி (முதலாவது கடன் தொகை), பொலன்னறுவை பிரசித்த நொத்தாரிசு திருமதி யூ.ஏ.ஜே.கே. அதுகோரல அவர்களால் நிறைவேற்றப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.08.04ஆம் திகதியுடைய 189ஆம் இலக்க ஈட்டு முறி (இரண்டாவது கடன் தொகை), பொலன்னறுவை பிரசித்த நொத்தாரிசு திருமதி எம்.டீ.எம்.ஐ. சபரமாது அவர்களால் நிறைவேற்றப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.07.27ஆம் திகதியுடைய 1381ஆம் இலக்க ஈட்டு முறி (மூன்றாவது கடன் தொகை) மற்றும் பிரசித்த நொத்தாரிசு திருமதி எல். சந்திரிகா சிரோமி அவர்களால் நிறைவேற்றப்பட்டு அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2021.05.18ஆம் திகதியுடைய 3190ஆம் இலக்க ஈட்டு முறி (நான்காவது கடன் தொகை) என்பவற்றிற்கு ஏற்ப மெதிரிகிரிய, புதிய நகரம், யாய 03, இல. 87 என்ற முகவரியில் வதிகின்ற திரு. திசாநாயக முதியன்செலாகே கயான் சம்பத் திசாநாயக அல்லது கயான் சம்பத் திசாயாயக மற்றும் பண்டாரகம, பானதுர வீதி, தர்மாலோக விகாரையைச் சேர்ந்த காமினி திசாநாயக்க தற்போது வணக்கத்திற்குரிய அகலியே சீலரத்ன தேரர் ஆகியோர்களால் சொல்லப்பட்ட கடன் வசதிகள் மீதான கொடுப்பனவை செலுத்துவதிலிருந்து தவணை தவறியிருப்பால் சொல்லப்பட்ட ஈட்டு முறிகளின் கீழ் தற்பொது இருபத்தேழு இலட்சத்து முப்பத்தோராயிரத்து ஐந்நூற்று பன்னிரண்டு ரூபாய் நாற்பத்து மூன்று சதம் (ரூ. 2,731,512.43) தொகை பத்தொன்பது இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் எழுபத்தொன்பது சதம் (ரூ. 1,907,535.79) தொகை, மூன்று இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூற்று மூன்று ரூபாய் முப்பத்தொன்பது சதம் (ரூ. 378,703.39) தொகை மற்றும் இருபத்தொன்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று மூன்று ரூபாய் ஒன்பது சதம் (ரூ. 2,964,603.09) தொகையும், அத்தகைய தொகைகளை முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை 2022.09.30ஆம் திகதி முதல் முறையாக பதினெட்டு இலட்சத்து பதிநான்காயிரத்து அறுநூறு ரூபாய் (ரூ. 1,814,600/-) தொகை, ஒன்பது இலட்சத்து தொண்ணூற்றைந்தாயிரம் (ரூ. 995,000/-) தொகை, மூன்று இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம் (ரூ. 345,000/-) தெகை, பத்தொன்பது இலட்சத்து எண்பத்தேழாயிரம் (ரூ. 1,987,000/-) தொகை ஆகிய மூலத் தொகைகள் மீது வாரத்துக்கு சாதாரண நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் வழங்குதல் சதவீதம் மற்றும் + 4.5 % (weekly AWPLR+4.5%) சதவீத அடிப்படையில் ஏல விற்பனைத் திகதி வரை மேலதிக வட்டியையும் உரிய மக்கள் வங்கிச் சட்டத்தின் 29(L) பிரிவின் கீழ் மீட்டுக் கொள்ளப்பட வேண்டிய தொகை மற்றும் கட்டணங்களையும் மற்றும் ஏதேனும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால் அவற்றைக் கழித்து சொல்லப்பட்ட இருபத்தேழு இலட்சத்து முப்பத்தொராயிரத்து ஐந்நூற்று பன்னிரண்டு ரூபாய் நாற்பத்து மூன்று சதம் (ரூ. 2,731,512.43) தொகை, பத்தொன்பது இலட்சத்து ஏழாயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபாய் எழுபத்தொன்பது சதம் (ரூ. 1,907,535.79) தொகை, மூன்று இலட்சத்து எழுபத்தெட்டாயிரத்து எழுநூற்று மூன்று ரூபாய் முப்பத்தொன்பது சதம் (ரூ. 378,703.39) தொகை மற்றும் இருபத்தொன்பது இலட்சத்து அறுபத்து நான்காயிரத்து அறுநூற்று மூன்று ரூபாய் ஒன்பது சதம் (ரூ. 2,964,603.09) தொகையையும் மீட்டுக் கொள்வதற்காக கண்டி உத்தரவு பெற்ற ஏல விற்பனையாளர் ஷொக்மன் என்ட் சமரவிக்ரம என்ற நிறுவனத்தால் சொல்லப்பட்ட 187, 189, 1381 மற்றும் 3190ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் சொல்லப்பட்ட வங்கிக்கு ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனங்கள் மற்றும் அவற்றுக்கு சேர்ந்த சகல விடயங்களையும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென 1986ஆம் ஆண்டின் 32ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29ஆம் D பிரிவின் கீழ் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனம் தொடர்பான விபரம்**

வட மத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில், மெதிரிகிரிய பிரதேச செயலாளர் பிரிவில், மெதிரிகிரிய பிரதேச சபை எல்லைகளுக்குள் சிங்கள பற்று இல. 91, கவுடுலுகம கிராம சேவையாளர் பிரிவில் கவுடுலுவெவ, 2ஆம் கட்டம், யாய 03 (புதிய நகரம்) என்ற கிராமத்தில் அமைந்துள்ள 'கொட இடம' என அழைக்கப்படுகின்ற காணிக்க உரிமம் பெற்ற நில அளவையாளர் பீ.பி. இலங்கசிங்க அவர்களால் 2014.10.04ஆம் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 2014/பொ/106 என்ற இலக்கத்தையுடைய வரைபடத்தில் துண்டம் 01 என்ற (நில அளவையாளர்) தலைமை அதிபதியால் தயாரித்து அவரின் பொறுப்பில் இருக்கக் கூடிய, F.C.C.P. 133 என்ற வரைபடத்தில் துண்டம் 252 இன் ஓர் மீள் அளவீடு) காணிக்கு எல்லைகள் பின்வருமாறு:

**வடக்கு:** F.C.P.P. 133 என்ற வபரைபடத்தில் துண்டு 241 மற்றும் 240
**கிழக்கு:** F.C.P.P. 133 என்ற வபரைபடத்தில் துண்டு 242 மற்றும் 251
**தெற்கு:** F.C.P.P. 133 என்ற வபரைபடத்தில் துண்டு 251 மற்றும் 265 (வீதி)
**மேற்கு:** F.C.P.P. 133 என்ற வபரைபடத்தில் துண்டம் 253

ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் இருபத்தொன்பது தசம் எட்டு பர்ச்சஸ் (ஏ:01 றூ:00 பே: 01) அல்லது பூச்சியம் தசம் நான்கு பூச்சியம் ஏழு இரண்டு: ஹெக்டெயார் (ஹெ.0.4072) மற்றும் அதனகத்தே அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், பிரயோசனங்கள் போன்ற சகலதையும் உள்ளடக்கியது.

இந்த ஆதனம் பொலன்னறுவை காணிப் பதிகவத்தில் LDO/F/22/194 என்ற இருமடியிலகத்தின்/பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**பிராந்திய முகாமையாளர்,**
**பீ.ஜீ.என்.பீ. லியனகே)**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk
AA- (lka) Fitch Rating. AA - Brand Finance Rating

The Housewives' companion
Classifieds on
Daily News

# கள்ளுத் தவறனை குத்தகை விற்பனை 2023/ 2024

## சிலாபப் பிரதேச செயலகப் பிரிவு

2023.07.01ஆம் திகதி முதல் 2024.06.30ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கு சிலாபப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கள்ளுத் தவறனைகள் குத்தகை விற்பனைக்காக 2023.05.12ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்கள் 2023.03.31ஆம் திகதி பிரசுரிக்கப்படும் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

**பீ.டப்.எம்.எம்.எஸ். பண்டார,**
**பிரதேச செயலாளர், சிலாபம்.**

**பிரதேச செயலகம் - சிலாபம்.**
**திகதி : 2023.03.16**


# இலங்கை வங்கி

## கிழக்கு மாகாணத்தின் பின்வரும் கிளையை மீளமைப்பதற்குப் பொருத்தமான கட்டடம் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

## வவுணதீவு

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- கட்டடம் சட்டபூர்வமாக நிர்மாணிக்கப்பட்டிருத்தல் வேண்டும் என்பதோடு, 10 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்ததாக இருத்தலாகாது.
- கட்டடத்தின் முகப்பானது குறைந்தபட்ச அகலம் 30 அடிகள் கொண்டதாக பிரதான பாதையை நோக்கி நகரத்தின் மத்தியில் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தது 4 வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- தரைப் பரப்பு குறைந்தபட்சம் 2,500 - 3,500 சதுர அடி அளவைக் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.
- அடிப்படை வயரிங் உடன் கூடிய 60 அம்பியர் மூன்று கட்ட மின்சாரம், நீர் வசதி, ஸ்ரீ லங்கா டெலிகொம் தொலைபேசி இணைப்பு,ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறாகப் பாவிக்கக் கூடிய மலசலகூட வசதி, அவசர நேரங்களில் வெளியேறக் கூடிய வாசல் மற்றும் ஏனைய அடிப்படை வசதிகளுடன் காணப்படல் வேண்டும்.
- கட்டடத்தின் தரைப்பகுதிக்கு (2'x 2') அளவிலான தரை ஓடு (Tile) பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- கூரைக்கு சீலிங் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
- மின்பிறப்பாக்கி இயந்திரத்திற்கு 100 சதுர அடி (10'x 10') அளவிலான நல்ல காற்றோட்டம் உள்ள அறை கட்டடத்திற்கு பின்புறம் இருத்தல் வேண்டும். (மின்பிறப்பாக்கியை கொண்டு செல்ல தனியான வழிப்பாதை இருத்தல் வேண்டும்.)
- வலது குறைந்தோருக்கான விஷேட நுழைவாயில் இருத்தல் வேண்டும்.
- நீரைச் சேமித்து வைக்க 2000 லீட்டர் கொள்ளளவைக் கொண்ட நீர்த்தாங்கி ஒன்று இருத்தல் வேண்டும்.
- கட்டடத்துக்கு தீக்காப்புறுதி இருத்தல் வேண்டும்.
- கட்டடத்தின் உள்ளும் புறமும் வெளிர் நிறம் பூசப்பட்டு (வெள்ளை அல்லது வேறு) இருத்தல் வேண்டும்.
- குளிரூட்டல் தொகுதியின் வெளிப்புற இயந்திரத்தை பொருத்த போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- அங்கீகரிக்கப்பட்ட கட்டட வரைபடங்கள்.
- பிரதேச சபையிடமிருந்து பெறப்பட்ட "இயைபுச் சான்றிதழ்" (CoC)

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர் , கட்டட வரைபடம் உள்ளிட்ட அனைத்து விபரங்களையும் 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "**குத்தகை அடிப்படையில் பொருத்தமான கட்டடத்தைப் பெற்றுக் கொடுத்தல் - குறித்த கிளை**" எனத் தயவுசெய்து குறிப்பிடவும்.

உதவிப் பொது முகாமையாளர் (கிழக்கு மாகாணம்),
இலங்கை வங்கி,
கிழக்கு மாகாணக் காரியாலயம்,
இல: 455, பிரதான வீதி,
திருகோணமலை.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**117 வேன்கள் விற்பனைக்கு**

252-6281 Nissan 1994, Van அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310A, காலி வீதி, கொ ழும்பு 03. தொலைபேசி. 0714 5 4 2958. 018654

**119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு**

227-4501 Mit- subishi Canter 1999, Lorry அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 018652

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு**

WP QD-3899 Bajaj 2005, Threewheel அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 0711 2 1 081 0 . 018657

## வேலைவாய்ப்பு

**309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி**

நாவல நுகேகொடையில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு அனுபவமுள்ள பெண் உதவி கணக்காளர் தேவை. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். சம்பளம் ரூபா 40,000 வழங்கப்படும். வேலை நேரம் காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை. தொடர்புகளுக்கு: 0714888754. 018724

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

The easiest & convenient way to send your
Marriage Proposal Ads,
classified@lakehouse.lk
for 15 Words - Rs. 1,000/- Easy way to make your payment 00000377 Online
Sunday Observer Marriage Proposals
For Inquiries - Piyumi - 011 2 429 383 | 011 2 429 347 | Gayani - 011 2 429 342 / 343

# ஊர் ஜமாஅத்தார்கள் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்

## தொட்டவத்தை பள்ளிவாசல் தர்மகர்த்தா தெரிவிப்பு

*பாணந்துறை மத்திய குறூப் நிருபர்*

இன்று ஆரம்பமாகியுள்ள புனித ரமழான் மாதத்தில் மக்களுக்கான சேவைகளை வழங்குவதில் ஜமாஅத்தார்கள் பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு திறந்த மனதுடன் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். இந்த விடயத்தில் திட்டத்தை முன்னெடுப்பவர்களைப் பார்க்காது திட்டத்தின் மூலம் மக்களுக்கு கிடைக்கும் சிறந்த நன்மைகள் மற்றும் வசதிகளையே பார்த்தல் வேண்டும். இறைவன் எமது நாட்டம் நோக்கத்தையே பார்ப்பான். அதற்குத்தான் கூலியும் வழங்குவான் என தொட்டவத்தை பள்ளிவாசல்கள் தர்மகர்த்தா எம்.ஏ.எம். ரிஸ்வான் ஹாஜி தெரிவித்தார். இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள ரமழான் மாதம் தொடர்பான பள்ளிவாசல் முன்னெடுத்துள்ள ஏற்பாடுகள் தொடர்பில் கலந்துரையாடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர், புனித ரமழான் மாதத்தையும் நோன்பாளிகளையும் சிறப்பிக்கும் நோக்கில் பிரதேசங்களில் ரமழான் மாதத்தில் முற்காலத்திலிருந்து மக்களுக்காக மேற்கொள்ளப்படும் பல்வேறு சிறப்பு நிகழ்வுகளும் காலத்துக்கு ஏற்றதாக அமைதல் வேண்டும். மக்களுக்கு பல்வகையிலான சிறந்த பயனுள்ளதாகவும், நாட்டின் பொருளாதார நிலையில் குறிப்பிட்ட சேவைகளின் பயனாளிகளுக்கும், அனுசரணையாளர்களுக்கும் வசதியாகவும் ஒத்துழைப்பாகவும் காலாகால சேவைகளை முன்னெடுப்பது பள்ளிவாசல் நிர்வாகங்களின் பொறுப்பாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பாணந்துறை தொட்டவத்தை ஜும்ஆ பள்ளிவாசல் புனித ரமழான் மாதத்தில் மூடப்படுவதில்லை. இரவு தராவீஹ் தொழுகை முதல் வித்று தொழுகை, திக்ர் முதாக்கரா, ஹிஸ்புல் குர்ஆன் உள்ளிட்ட பல்வேறு சமய நிகழ்வுகள் ஸஹர் நேரம் வரையிலான நிகழ்வுகள் இங்கு வழமை போன்று இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவுகளில் சுவையூட்டியை தவிர்க்க வேண்டுகோள்

*புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்*

சுவையூட்டிகளின் பாவனையை முற்றாகத் தவிர்த்துக்கொள்ளுமாறு காத்தான்குடியிலுள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்களுக்கு காத்தான்குடி வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

காத்தான்குடியிலுள்ள ஹோட்டல்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்களுடனான சந்திப்பு, காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்ற போதே, காத்தான்குடி வர்த்தகர் சங்கம் இவ்வேண்டுகோளை முன்வைத்தது. ரமழான் காலத்தை மையப்படுத்தி 'ஆரோக்கியமான உணவு' எனும் தலைப்பில் இச்சந்திப்பு நடைபெற்றது.

உணவுகளில் சேர்க்கப்படும் சுவையூட்டிகளினால் ஏற்படும் விளைவுகளை கருத்திற்கொண்டு ரமழான் காலத்தில் அவற்றின் பாவனையை முற்றாக தவிர்த்துக்கொள்ளுமாறும் இப்தாருக்கான சிற்றுண்டிகளை ஆகக்கூடிய விலை 50 ரூபாவாக அல்லது அதைவிடக் குறைந்த விலையில் விற்குமாறும் இச்சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆனால், உணவுகளின் தரத்தில் எவ்வித குறையும் இருக்கக்கூடாதெனவும், அச்சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பாக பரிசீலித்து சாதகமான பதில் வழங்குவதாக, ஹோட்டல் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

# முதலையின் தாக்குதலில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

*சம்மாந்துறை கிழக்கு, கல்முனை மத்திய தினகரன், பெரியநீலாவணை விசேட, கல்முனை குறூப் நிருபர்கள்*

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிப்பள்ளி ஆற்றோரத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை (22) பொன்னாங்கண்ணிக் கீரை பறித்துக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் முதலையின் தாக்குதலுக்கு இரையாகி உயிரிழந்துள்ளார்.

சம்மாந்துறை தமிழ்ப்பிரிவு கோரக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த 61 வயதுடைய 4 பிள்ளைகளின் தந்தையான இராசாப்பு சௌந்தராஜன் என்பtரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கல்முனைப் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.எச்.ஜவாஹிர், மரண விசாரணை மேற்கொண்டுள்ளார். இது தொடர்பாக சம்மாந்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

அண்மைக்காலமாக மாவடிப்பள்ளி ஆற்றோரத்தில் முதலைகளின் நடமாட்டம் அதிகளவில் காணப்படுவதுடன், இதனால் தாம் அச்சமடைந்துள்ளதாகவும், பொதுமக்கள் தெரிவித்தனர். ஆகவே, முதலைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு, அம்மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# நாவிதன்வெளியில் உலர் உணவு வழங்கல்

*பெரியநீலாவணை விசேட நிருபர்*

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவில் வசித்து வரும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று வியாழக்கிழமை (23) வழங்கி வைக்கப்பட்டன.

நாவிதன்வெளி பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனின் வழிகாட்டலின் கீழ் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் தலைமையில் மேற்படி குடும்பங்களுக்கு இவை வழங்கப்பட்டன. அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் அனுசரணையில் உலர் உணவுப் பொதிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

# அறிவித்தல்

## பெறுகை நடைமுறையை முடிவுறுத்தல்

**நெற்பயிர்ச் செய்கைக்காக பரசூட் முறைமையின் மூலம் விளைச்சலை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பரசூட் தட்டுகளைக் கொள்வனவு செய்தல். (சிறு போகத்திற்காக)**

**கமநல அபிவிருத்தி திணைக்களம்**

2023.03.07 அன்று தினமின, டெயிலிநியூஸ் மற்றும் தினகரன் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தல் தொடர்பானது.

02. மேற்படி பெறுகை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல், மீண்டும் அறிவிக்கும் வரை இடைநிறுத்தி வைப்பதற்கு திணைக்களப் பெறுகைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், இற்றைவரை கேள்விப்படிவங்களைக் கொள்வனவு செய்துள்ள வழங்குநர்கள், குறித்த கேள்விப் படிவங்களுடன், பொது 172 மாதிரிப்படிவத்தின் மூலப் பிரதியை கமநல அபிவிருத்தி திணைக்களம், கணக்குப் பிரிவு, இல. 42, ஸ்ரீமத் மாகஸ் பிரணாந்து மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் அலுவலக நேரங்களில் சமர்ப்பித்து தாம் வைப்புச் செய்துள்ள மீளளிக்கப்படாத கேள்வி வைப்புத் தொகையைப் பெற்றுக்கொள்ளலாம். என அறிவித்துக் கொள்கின்றேன்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்,**
**இல. 42, ஸ்ரீமத் மாகஸ்பிரணாந்து மாவத்தை,**
**கொழும்பு-07.**

2023.03.24

# பெறுகை அறிவித்தல்

## வருடாந்த குத்தகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக்கொள்ளல் 2023/ 2024

## போதனா வைத்தியசாலை - குருநாகல்

2023/ 2024 ஆம் ஆண்டிற்காக இவ் வைத்தியசாலையின் மருத்துவ அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வ வீட்டு வசதிகளை வழங்குவதற்கு வருடாந்த குத்தகை அடிப்படையில் வீடுகளைக் பெற்றுக் கொள்வதற்கு 2023.04.19 மு.ப. 10.00 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கீழ்க்காணும் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இருப்பின் மாத்திரம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1. சகல அறைகளுடனும் இணைந்த குளியலறை இருத்தல் வேண்டும்.
2. பல வாகனங்களை நிறுத்தக்கூடிய வாகன முற்றவெளி இருத்தல் வேண்டும்.
3. குருநாகல் போதனா வைத்தியசாலைக்கு அருகில் இருத்தல் - 3KM
4. அரச மதிப்பீட்டு திணைக்களத்தின் மதிப்பீட்டு பெறுமதி மாத்திரம் செலுத்தப்படுவதால் அதற்கு இணைங்குதல் வேண்டும்.
5. வருடாந்த குத்தகை உறுதியொன்றுக்கு வருவதற்கு விரும்புதல் வேண்டும்.
6. மீளளிக்கப்படும் கேள்விப் பிணை ரூ. 5000.00

விண்ணப்பங்களை 2023.04.18 பி.ப. 3.00 வரை வைத்தியசாலையின் நிதிக் காசாளரிடம் மீள் செலுத்தப்படாத ரூ. 500.00 கட்டணத்தை செலுதிப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்விப் பத்திரங்களை தலைமையகத்தில் பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கள் உள்ளிட்டு அனுப்பப்படும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் வருடாந்த குத்தகை அடிப்படையில் வீடுகளைப் பெற்றுக் கொள்ளல் - 2023/2024 என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்ட உங்களது விலைமனுக்களை தலைவர், பிரதேச பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, குருநாகல். என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பிரதம கணக்காளர் பணிமனையில வைக்கப்பட்டள்ள கேள்விப் பெட்டியில், கொண்டு வந்து உள்ளிடலாம். மேற்படி விலைமனுக்கள் திறத்தல் அன்றே அந்த நேரத்திலேயே இடம்பெறும். அவ்வேளையில் உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். இது பற்றிய மேலதிக விபரங்கள் தேவைப்படின் இல. 037-2222261ஐ அழைத்து அலுவலக நிர்வாக அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம். இது பற்றி ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதைக் கவனிக்கவும்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**குருநாகல்.**

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

**நகர அபிவிருத்தி அதிகாரசபை**

# கேள்வி அறிவித்தல்

**மாதாந்த அடிப்படையில் மொறட்டுவ, எகொட உயணவில் உணவுக்கூடமொன்றை ஒதுக்கீடு செய்வதற்கான கேள்வி**

**Contract No.: PD/UDA/RTB/FCEU/Moratuwa/010/2023**

